(8818)
23521

# தாலாட்டு இலக்கியம்

23521

மு. அருணாசலம்

# தாலாட்டு இலக்கியம்

மு. அருணாசலம்

தமிழ் நூலகம்
திருச்சிற்றம்பலம் - குத்தாலம் வழி

உரிமை பதிவு] 15-8-1958 [விலை ரூபா ஒன்று

முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1958

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | முன்னுரை | ... | 5 |
| 1. | தாய் கிடந்த தவம் | ... | 9 |
| 2. | தொட்டில் இடுதல் | ... | 18 |
| 3. | பால் பசு | .... | 30 |
| 4. | சங்குப் பாலடை | ... | 37 |
| 5. | அவல் கேட்ட குழந்தை | ... | 47 |
| 6. | குழந்தையின் கண்ணீர் | .... | 58 |
| 7. | காது குத்தல் | ... | 69 |
| 8. | எங்கிருந்து வந்தாய் | ... | 71 |
| 9. | ஆழ்வார் பாடிய தாலாட்டு | ... | 75 |
| 10. | பிள்ளைத் தமிழில் தாலாட்டு | .... | 85 |
| 11. | தாலாட்டும் பள்ளும் | ... | 88 |
| 12. | நீலமயில் வாகனன் | ... | 92 |
| 13. | முல்லை நறுமலர் | ... | 96 |
| | அனுபந்தம் | ... | 100 |

# முகவுரை

தாலாட்டுப் பாடல்கள் தமிழ்நாட்டில் மிகப் பழைய காலம் முதல் வழக்கத்திலிருந்து வருகின்றன. இன்றும் தாய்மார் குழந்தையைத் தொட்டிலில் கிடத்தி உறங்க வைப்பதற்காகத் தாலாட்டுப் பாடல் பாடுகிறார்கள். நாவசைத்துப் பாடுவதால், பாடல் " தாலாட்டு " என்று பெயர் பெற்றது. (தாலு = நா). நாவை அசைக்கும் போது தாய்மார், " ராராரா " என்றோ, " லாலாலா " என்றோ செய்யும் நாவின் ஓசையைக் கேட்கும் சத்தத்தில் குழந்தை உறங்கி விடுகிறது. ராராரா என்பது வெறும் ஓசையாக மட்டும் இராமல், " ஆராரோ " (ஆர் ஆரோ)* என்று சொல்வடிவம் பெற்றுப் பொருளுடையதாகவும் ஆகிவிட்டது.

முதன் முதலாகத் தமிழ் மொழியிலே தாலாட்டுப்பாடிய பெரியார் பெரியாழ்வார். தாம் யசோதை நிலையில் நின்று பரம்பொருளைக் கண்ணனாக வைத்து அவர் கொஞ்சிக் குலவி வருகையில், கண்ணன் திருவவதாரச் சிறப்பைக் கூறி, அவன் திருமேனியழகை எல்லோருக்கும் எடுத்துக்காட்டிய பிறகு ஆழ்வார், " மாணிக்குறளனே தாலேலோ, வையம் அளந்தானே தாலேலோ " என்று கண்ணனைத் தாலாட்டுகிறார். தம் பாடலை, " அஞ்சன வண்ணனை ஆய்ச்சி தாலாட்டிய செஞ்சொல் " என்று அவரே கூறுகிறார்.

தாலாட்டு என்ற சொல் தாராட்டு என்றும் வழங்குவதுண்டு. பண்டையில், " செங்காலன்னம்.........வளர்த்திய

---

*இதன் பொருளைக் குறித்த கட்டுரையை " யான் பெற்ற இன்பம் " என்ற எனது கட்டுரைத் தொகுதியில் காணலாம்.

மழலைப் பிள்ளை.........பாலுண்டு துயிலப் பச்சைத் தேரை தாராட்டும் '' என்பது கம்பராமாயணப் பாடல்

ஆழ்வார் தொடங்கிய பாடல் நெறியானது, பிற்காலத்தில் தனித் தாலாட்டுப் பிரபந்தமாகவும் பிள்ளைத் தமிழில் கூறும் தாலாட்டுப் பருவப் பாடலாகவும் வளர்ந்திருக்கிறது. இவை யொருபுறம் இருக்க, வாய்மொழியாக நம் தாய்மார் பாடிவரும் பாடல்கள் எண்ணற்றன. தமிழ் நாடெங்கும், சமூகத்தின் எல்லாப் பிரிவினருள்ளும் இப்பாடல்கள் உள்ளன. மக்கள் மனத்தில் உள்ள எண்ணங்கள், ஏக்கங்கள், லக்ஷ்யங்கள், நம்பிக்கைகள், இன்பதுன்பங்கள் ஆகிய அனைத்தையும் இவை பிரதிபலிக்கின்றன.

'பெறுமவற்றுள் யாமறிந்ததில்லை, அறிவறிந்த மக்கட் பேறு அல்ல பிற' என்ற அருமைத் திருக்குறள் பிறந்த நாட்டில், பிள்ளைப்பேறே வாழ்வின் நிறைவு மக்கள் என்று கருதியதில் வியப்பில்லை. குடும்பத்தார் பிள்ளைவரம் கேட்டல், பெற்ற பிள்ளைக்குச் சிறப்புச் செய்தல், வளர்த்தல் முதலான எல்லா நிகழ்ச்சிகளிலும் வாய்மொழித் தாலாட்டுப் பாடல்களில் பல வகையான கற்பனைகளும் அலங்காரங்களும் நிரம்பி மிகுந்த பொலிவு பெற்றிருக்கின்றன. இடந்தோறும் மக்களின் வாழ்க்கை முறைகளும் நோக்கங்களும் மாறுபடுகின்றன. ஆயினும் ஒருவகையில் இத்தகைய நாடோடிப் பாட்டான தாலாட்டுப் பாட்டுப் போன்றவை, பல்வகை வேற்றுமையினின்றும் கோத்துச் செல்லுகின்ற பண்பாட்டின் ஒருமைத் தன்மையை அழகுற எடுத்துக் காட்டுகின்றன.

வாய்மொழி தாலாட்டுப் பாட்டைக் குறித்த பல கட்டுரைகள் இதனுள் முதலில் தொடக்கப் பெற்றுள்ளன. தாலாட்டுப் பிரபந்தங்கள் பற்றிய சிறு குறிப்பும், சிற்சில மாதிரிப் பாடல்களும் இங்குத் தொகுக்கப் பெற்றுள்ளன.

15ஆம் நூற்றுண்டு முதல் இப்பிரபந்தங்கள் தமிழில் வழங்குகின்றன. சில, சாத்திரக் கருத்துக்களைக் கூறவென்றே வந்தன. இவற்றுள் "கீதாசாரத் தாலாட்டு" மிகவும் பிரசித்தமானது. தற்காலத்துக்கு வருவோமானல், தாலாட்டுப் பிரபந்தம், தமிழ்த் தாத்தாவாகிய சாமிநாதையரவர்களையும், கவர்ந்திருப்பதை அறிகிறோம். அவர்கள் திருவிடை மருதூர் ஏகநாயகர்மீது தாலாட்டுப் பாடினர்கள் என்று அனேகருக்குத் தெரிந்திராது. தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் குழந்தைகளுக்கென்று, ஒரு தாலாட்டுப் பாடல் பாடியிருக்கிருர். காந்தியத்தில் ஆர்வமிக்க காரைக்குடி ராய. சொக்கலிங்கம் அவர்கள் காந்தி தாலாட்டுப் பாடியிருக்கிருர். இவற்றுள் சில வரிகளையும் இங்குக் காணலாம்.

வாய்மொழிப் பாடல்களேயன்றி சென்ற நூற்றுண்டின் இறுதியில் சிலர் முயன்று செய்த தாலாட்டுப் பாடல்கள் பல உள்ளன. இவையும் இங்குக் குறிப்பிடப் பட்டுள்ளன. தலங்கள் தோறும், சிறப்பாக வைணவத் தலங்களில், பெருமாள்மீதும் தாயார்மீதும் பாடப்பட்டுள்ள தாலாட்டுக்கள் எண்ணில் அடங்கா. இராசகோபாலப் பெருமாள் தாலாட்டு, கோதை நாச்சியார் தாலாட்டு, செங்கமல நாச்சியார் தாலாட்டு, சௌம்ய நாராயணன் தாலாட்டு, திருமாமகள் நாச்சியார் தாலாட்டு என்பன சில உதாரணங்கள்.

வில்லுப் பாட்டுக்களிலெல்லாம் சந்தர்ப்பம் நேரும் போது தாலாட்டும் பயின்று வருவதுண்டு. சிறுத்தொண்டன் வில்லுப்பாட்டில் வரும் தாலாட்டை இங்குக் காணலாம். அவ்விதமே இக்காலத்தில் காந்தி சரித்திரக் காலட்சேபம் செய்வோர், போர்பந்தரில் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி என்ற குழந்தை உறங்குவதற்காகத் தாலாட்டுப் பாடல் பாடுவதையும் நாம் அறிவோம்.

* * * *

பொய்யும் வழுவும் பல இடங்களிலும், பல இலக்கியத் துறைகளிலும், புகுந்தமை போலவே, தாலாட்டுப் பாடல் களிலும் புகுந்திருப்பது பலருக்கும் தெரியும்.

"பரிகாசத் தாலாட்டு" என்ற பெயரில் மிகவும் கீழ்த் தரமான சில வரிகள் பேச்சு வழக்கிலும் வாய்மொழிப் பாட்டு வழக்கிலும் உள்ளன. "இவை ஏளனப் பாடல் கள்தானே, என்ன குறை?" என்று சிலர் நினைக்கலாம். உண்மையில் இவை இலக்கியம், பண்பாடு இரண்டையும் வேராறுக்கும் போலிகள்.

* * * *

இதனுள் 13 கட்டுரைகள் சேர்க்கப் பெற்றுள்ளன. இவற்றுள் முதல் எட்டும் வாய்மொழியாக வழங்கும் தாலாட்டு வரிகளை எடுத்துப் பேசும். மற்றவை இலக்கியத் திட் பயிலும் தாலாட்டை எடுத்துப் பேசும். பல ஆண்டு களுக்கு முன் வெளிவந்த எனது கட்டுரைத் தொகுதியாகிய "யான் பெற்ற இன்பம்" என்பதனுள் வாய்மொழித் தாலாட்டுப் பற்றிய சில கட்டுரைகளைக் காணலாம்.

ஒரு கட்டுரை குமரி மலரிலும், ஏழு கட்டுரைகள் சக்தி யிலும் வெளிவந்தன. கட்டுரை எழுதுமாறு தூண்டிய ஆசிரியர்களுக்கு என் நன்றி.

காந்தி வித்தியாலயம்,
திருச்சிற்றம்பலம்,
15—8—1958

மு. அருணசலம்.

# தாலாட்டு இலக்கியம்

## 1. தாய் கிடந்த தவம்

செடியிலே பூ ஒன்று தோன்றுகிற அற்புதத்தைக் கவிஞர் மிகுதியாக அனுபவித்துப் பாராட்டுகிறார்கள். பூவின் அழகிலே நெஞ்சைப் பறிகொடுத்து மற்றவர்கள் மகிழ்ச்சி யடையவேண்டும், அல்லது பெண்களும் பிள்ளைகளும் பூவைக் கொய்து கூந்தலிலே சூட்டிக்கொள்ள வேண்டும், அல்லது அப் பூவிலே தான் பொதிந்து வைத்திருக்கிற தேனைத் தேடித் தேனீயும் வண்டும் வந்து உண்ணவேண்டும் என்பதற்காகச் செடியானது அழகிய பூவைத் தன்னிடத்தே தோற்றுவிக்கவில்லை; ஆனால், வாழ்க்கையிலே தனக்குள்ள இன்ப மிகுதியைப் பூவாக உருவாக்குகிறது என்றே அவர்கள் அருமையாய் எடுத்துச் சொல்வார்கள்.

மக்களுலகில் புத்திரப் பேறு என்பதும், ஏறக்குறைய இதே போன்ற ஒரு தத்துவத்தின் வெளிப்பாடுதான். வாழ்க்கை யனுபவத்தில் பூரணமாய்த் தோய்ந்து நின்று பெறுகிற இன்பம், நம் சமூகத்தில் மட்டுமன்று, உலகெங்குமே, பெண்களுக்கே மிகுதி; இதை நம்மிடையே நேரில் பார்க்கிறோம், நூல்கள் வாயிலாகப் பார்க்கிறோம். இவ்வின்ப அனுபவமானது அவர்களிடம் குழந்தை யுருவமாக வெளிப்படுகிறது என்றால் மிகையன்று.

இந்த இன்ப அனுபவமானது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக ஊறி ஊறி, ஆணுக்கும் பெண்ணுக்கும், மனோ தர்மத்தைப் பொறுத்தவரையிலுங்கூட, மிக்க வேற்றுமையை உண்டாக்கியிருக்கிறது. சிறு குழந்தை முதல் இவ் வேற்றுமை வெளிப்பட்டு வளர்ந்து வருகிறது. பெண் குழந்தை சிற்றில் கட்டுவதிலும், சிறு சோறு ஆக்குவதிலும், பொம்மை வைத்துச் சீராட்டுவதிலும், தாலாட்டுவதிலும், இந்த மனோதர்ம வேற்றுமை நன்கு விளங்கக் காண்கிறோம். சிறுவர்கள் எங்குமே பொம்மை வைத்து விளையாடியதை நாம் கண்டதில்லை. ஆனால் சமூகத்தில் பெண்களிடம் தோன்றிப் பெருகிவந்த புத்திரப் பேறு என்ற இன்ப அனுபவமானது, வினவு தெரியுமுன்னமேயே, பெண் குழந்தைகளிடம் மிக்க பொலிவுடன் வெளிப்படக் காண் கிறோம்.

புத்திரப் பேறுதான் வாழ்க்கையின் நோக்கம், வாழ்க்கையின் நிறைவு. புத்திரப்பேறு வேண்டும் என்ற உணர்ச்சியானது, காலப்போக்குக் கேற்ப, தனக்குக் காரணத்தையும் தோற்றுவித்துக் கொண்டது. ‘புத்’ என்னும் நரகத்தில் விழாமல் பெற்றோரைப் புதல்வன் காக்கிறான் என்ற நம்பிக்கைகூட, ஒருவகையில் இந்த நோக்கத்துக்கு அரண் செய்யவந்த கற்பனையேயன்றி வேறன்று. என்ன வாழ்க்கை வாழ்ந்தும், பிள்ளையைப் பெறாத ஒரு வாழ்க்கையானது, தனக்குரிய சிறந்த பயன் பெறவில்லை என்பது உண்மைதானே? சமூகத்தில் இது பற்றி வாய்மொழியாக வழங்கும் கருத்துக்களே மிகுந்த வேகமும் வலியுமுடையன. மலடி என்ற சொல்லுக்குத்தான் எவ்வளவு வேகம், எவ்வளவு இகழ்ச்சி!

இதே கருத்து இலக்கியத்தில் பயின்று வரும்போது, அது தரும் சுவை எவ்வளவோ அதிகமான வளம் பெற்று விடுகிறது. “யாழினிது குழலினிது என்ப—தம் மக்கள்

மழலைச்சொல் கேளாதவர்" என்ற திருக்குறட் பாடலைச் சொல்லும்போதும், இதை அனுபவிப்பது கூடப் புத்திரப் பேறுடையவர்களால்தான் முடியும் என்று நாம் முடிவு கட்டுவது, உண்மையோடு பொருந்திய முடிவுதான். நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், சமய வுணர்ச்சிகள் முதலியன அதிக உரம் பெருத பண்டைக் காலத்தில்,

**படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வம் ஆயினும், இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே**

என்ற புறநானூற்றுப் பாடலில் தொடங்கி, ஆயிரம் ஆண்டுகள் பிற்பட்டுத் தோன்றிய

**பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்று**
**என்னுடைய ரேனும் உடையரோ - இன்னடிசில்**
**புக்களையும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்**
**மக்களை இங் கில்லாத வர்**

என்ற நளவெண்பாப் பாட்டு வரையில், எழுந்துள்ள இலக்கியச் செல்வத்தை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போதுகூட, புத்திரப்பேறு என்ற தத்துவம் எத்துணை இன்பத்துக்கு ஊற்ருய் இருந்து வந்திருக்கிறது என்பதைத் தெளிவாய் உணரலாம்.

என்ன வாழ்வு வாழ்ந்தும், பிள்ளையைப் பெருத ஒரு வாழ்க்கையானது தனக்குரிய சிறந்த பயனைப் பெறவில்லை என்பது உண்மைதானே ? புத்திரப்பேறு இல்லாதவர்களின் மனநிலை கொண்டு இவ்வுண்மையை இன்னும் நாம் அளந்து

அறியமுடிகிறது. வாய்மொழியாக வழங்கிவரும் தாலாட்டுப் பாடலில் வாழ்க்கை அனுபவம் நிறைவு பெறுவதற்கே புத்திரப்பேறு எவ்வளவு முக்கியமானது என்பது விளங்குகிறது.

சுவடி வடிவத்தில் உள்ள இலக்கியம் போலவே, பேச்சு வடிவத்தில் மட்டுமே வழங்கிவரும் இலக்கியமும் இவ்வுண்மையை எடுத்து நன்கு காட்டுகிறது; சொல்லப் போனால் இன்னும் ஆழமாயும், துள்ளிபமாயும் எடுத்துக் காட்டுகிறது, எண்ணற்ற சாயல்களையும் எடுத்துக்காட்டுகிறது. பேச்சில் உள்ள தாலாட்டு இலக்கியத்தில் காணும் இவ்வரிகளைக் கவனித்தால், இக்கருத்து நன்கு விளங்கும்.

குழந்தையைப் பெற்ற தாய் புதல்வனைத் தொட்டிலில் கிடத்தி அவனை உறங்கச் செய்வதற்காகத் தாலாட்டுப் பாடல் பாடுகிறாள்:

**ஆராரோ ஆரிவரோ - என்**
**கண்ணாரோ ஆரிவரோ!**

என்று தாய் பாடத்தொடங்குகிறாள். ஆர் ஆரோ என்ற ஒரு தொடரே நம்மவருடைய வாழ்க்கைத் தத்துவத்தை மிக்க அருமையாக எடுத்து உணர்த்தவல்லது. புதல்வனாக இப்போது பிறந்துள்ள இச்சிறு குழந்தையின் ஆன்மா யாது? முன்னமே இது எங்கிருந்தது? இதற்கும் தாயின் உயிருக்கும் என்ன தொடர்பு? இத் தாயினிடம் இவ்வான்மா குழந்தை உருவங்கொண்டு வந்து பிறப்பதன் காரணம் யாது? இவை முதலான எத்தனையோ கருத்துக்களைச் சிந்தனை செய்யும்படி 'ஆராரோ' என்னும் முதல் தொடரே நம்மைத் தூண்டுகிறது. இவை யாவும் ஆராய்ந்து முடிவு காணமுடியாத கேள்விகளே.*

*'ஆராரோ' என்ற ஒரு விளக்கக் கட்டுரையை யான் பெற்ற இன்பம் என்ற எனது கட்டுரைத் தொகுதியுள் காணலாம்.

அடுத்தபடியாக, தாயானவள் குழந்தைப் பேற்றை வேண்டி, தான் நோற்ற நோன்புகளையும், கிடந்த தவங்களையும் சொல்லிப் பாடி ஆனந்தம் அடைகிறாள்.

மனத்தில் மகிழ்ச்சி நிரம்பி, ஓய்வாக இருக்கும்போது, முன்பெற்ற இன்பதுன்ப அனுபவங்கள் மனக் கண்முன் மேகப்படலம்போல் அலைமோதிப் புரண்டு செல்வது இயல்பு.

தன்னைப்பற்றி முதலில் சொல்லுகிறாள்.

கனிந்த அனுபவத்தோடு கூடிய உள்ளத்தில் எல்லாம் அழகுமயம்தான். மகிழ்ச்சி நிறைந்த கண்ணோடு பார்க்கும் போது, தாயின் கண்முன் தன்னுடைய அழகே நிற்கிறது. இதன் விளைவாகத் தோன்றியதல்லவா, இக் குழந்தை?

**கண்ணோ கமலப்பூ**
**கைஇரண்டும் தாமரைப்பூ**
**மேனி மகிழம்பூ**
**மெல்லிநல்லாள் சிற்றடியாள்—**

**சிற்றடியாள் நானுனக்குச்**
**செய்த தவம் நீகேளு—**

என்று நேராகத் தன் வாழ்க்கைக்குள்ளேயே பிரவேசித்து விடுகிறாள். தாமரையையும் மகிழையும் அனுபவித்த அனுபவமானது எளிதாகப் பாட்டுக்குள்ளே வந்து புகுந்து கொள்ளுகிறது. அழகைப் பாராட்டிச் சொல்லுகிற இடத்தில் மெல்லியலாகிய தன்னையே வருணிப்பதிலும் தாய்க்குச் சோர்வில்லை. தான் செய்த தவத்தை நேர்முகமாக விவரிக்க ஆரம்பிக்கிறாள். அப்படி என்ன என்ன தவம் ?

பாலில்லாக் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பது மிகவும் சிறந்த தருமங்களில் ஒன்று. வயது வந்த மனிதர்களுக்கு உணவும், உடையும் அளிப்பதைவிட இது எவ்வளவோ மேலானதல்லவா ?

மேலைநாட்டில் பணத்துக்காகத் தாதிமார் முலைப்பால் கொடுக்கும் வழக்கம் இருந்துவருகிறது. நம் நாட்டிலும் கூட இது உண்டு. ஆனால், இதையே தருமமாகச் செய்தல் எவ்வளவோ உயர்வானது. பாலில்லாதவர்கள், பசு வளர்த்துப் பசுவின் பாலைத் தருமம் செய்து வந்தார்கள்.

முற்றம் மெழுகி
    முழுச் சிவப்பாய்க் கோலமிட்டுப்
பச்சை பரப்பி
    பகவானைத் தெண்டனிட்டு—

பாலடைக்குப் பால்கொடுத்துப்
    பசித்தோர் முகம்பார்த்து—

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது முதலான வாக்கியங்கள் பசிப்பிணியைப் போக்குவதன் சிறப்பை மிகவும் அருமையாக எடுத்துக் காட்டுகின்றன. ஆயினும், இவை குழந்தைக்குப் பால் கொடுப்பதாகிய தருமத்துக்குப் பிற்பட்டவையே ஆகும்.

மேலும் தான் செய்த தருமங்களைத் தாய் சொல்லி வருகிறாள் :

எட்டாத கோவிலுக்கு
    எட்டி விளக்கேற்றி
தூரத்துக் கோவிலுக்குத்
    தூண்டா விளக்கேற்றி—
சோதிபர தேசிகட்குத்
    தூமடமும் கட்டிவைத்து—
நல்லதண்ணீர்க் கிணறுகளும்
    நடைபாவி* கட்டிவைத்து—

*நடைபாவி என்பது, சில ஜில்லாக்களில், மனிதர் கீழிறங்கி முழுகும்படியாகப் படிவைத்துக் கட்டியுள்ள பெருந்துரவுகள்.

இப்படிப்பட்ட தருமங்களின் பலனாக, தெய்வ அருளால் குழந்தை வந்து பிறந்தானாம். தாய், தன் பக்தி காரணமாக, தெய்வ அருளையும் தாலாட்டில் சொல்லுகிறாள்.

நான், திங்கள் முழுகித்
திருத்தணிகை போகையிலே
திருத்தணிகை முருகரவர்
திருவுளத்தில் கொண்டாரோ ?

மாமயிலில் முருகரும்
மனமகிழ்ந்து கொண்டாரோ ?

மாதம் முழுகி
மதுரைக்குப் போகையிலே
மதுரை நகர்ச் சொக்கலிங்கம்
மனமகிழ்ந்து கொண்டாரோ ?

மனமகிழ்ந்து கொண்ட வழிபடு தெய்வம் என்ன செய்தது?

திருநீறு தந்தால்
செலவழிந்து போகுமென்று
திருக்காதுக் குண்டலத்தை
சிறப்பாகத் தந்தாரோ!

மாலை கொடுத்தால்
மலர்வாடிப் போகுமென்று
மாங்கனியைக் கைகொடுத்து
மைந்தன் கலிதீர்த்தாரோ!

மைந்தனை வேண்டிய தாய் செய்த யாத்திரை தணிகைக்கும் மதுரைக்கும் மட்டுமல்ல, சீரங்கத்துக்கும் தாய் போயிருக்கிறாளாம். காவிரியின் நடுவிலே இருபுறமும் ஆறு

ஓடும்படியாக அமைந்த சீரங்கம் என்று நினைத்த மாத்திரத்தில் ஓர் உல்லாச சுகம் சொல்லிலேயே பிறக்கிறது :

**ஆறிரண்டும் காவேரி**
**அதனடுவே சீரங்கம்**
**சீரங்க மாடித்**
**திருப்பாற் கடலாடி**
**மாமாங்க மாடி**
**மாசிக் கடலாடி,**
**தைப்பூச மாடித்**
**தவஞ்செய்து வந்தானே!**

**சஷ்டி இருந்து**
**சங்குபால் தான்கொடுத்து**
**பட்டினி இருந்து**
**பகவானைச் சேவித்து—**

**மலைமேல் தவமிருந்து**
**வந்து பிறந்தானே!**

இப்படிப்பட்ட தவங்களின் பயனாக வந்த புதல்வனது பிறப்பினால் உதித்த இன்பம் எப்படிப்பட்டது? சாந்தியே அற்று, குலம் நசித்துப் போகிற இடத்தில் தோன்றிய புதல்வன் தரும் இன்பத்துக்கு எல்லையும் உண்டா?

**இலைதீய்ந்து கொடிவாடி**
**இல்லையென்று போமிடத்தே**
**சருகுதிர்த்துக் கனிந்துவந்த**
**சாதிப்பலாப் பழமோ!***

---

*இவ்வரிகள் பற்றிய விளக்கத்தை, யான் பெற்ற இன்பம் என்ற எனது கட்டுரைத் தொகுதியில், சாதிப்பலாப் பழம் என்ற கட்டுரையில் பார்க்க.

கெட்டகண்ணைத் தந்தானே
பட்டகுறை தீர்த்தானே!
கேளாச் செவியிரண்டும்
தாளாய்த் திறந்தானே!

கேளாச் செவிகள் திறந்துவிட்டால் பிறகு கவலைக்கிடமேது ? வாழ்க்கை இன்பம்தானே !

## 2. தொட்டில் இடுதல்

குடும்பத்தில் நிகழும் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும் நம்மவர் மிக்க மகிழ்ச்சியோடு கொண்டாடிவருகிறார்கள். வீட்டிலே குழந்தை பிறப்பது முதல், அந்தக் குழந்தை வளர்ந்து பெரியவனாகிக் கலியாணம் செய்துகொண்டு தான் ஒரு குழந்தைக்குத் தந்தையாகும் வரையில், அக்குழந்தையின் வாழ்க்கையிலே கணக்கற்ற கொண்டாட்டங்கள் நிகழ்கின்றன. இக் கொண்டாட்டங்களிலே, குறித்த ஒரு குடும்பந்தான் ஈடுபடுகிறது என்பதில்லை. அந்தக் குடும்பத்துக்கு நண்பராயுள்ளவர்கள் அனைவருமே இவற்றில் கலந்து கொள்ளுகிறார்கள். நாட்டுப்புறத்திலுள்ள சிறு கிராமமாயிருந்தால், இப்படிப்பட்ட கொண்டாட்டம் கிராமம் முழுவதுக்குமே உரிய பொது நிகழ்ச்சியாகிவிடுகிறது. ஊரிலுள்ளார் அனைவரும், - அவர்கள் உறவினராயிருந்தாலும் இராவிட்டாலும், அல்லது ஒரே இனத்தாராயிருந்தாலும் இல்லாது போனாலும், - அவர்கள் எல்லோரும் ஒருமித்து அக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

குழந்தை என்று பிறக்கு முன்னமே, கர்ப்பிணியான தாய்க்குப் பலவகையான சிறப்புக்கள் நிகழ்கின்றன. பூச்சூட்டல், வளையல் காப்பு, சீமந்தம் முதலிய பல சடங்குகள், பெண்களனைவரும் மகிழ்ச்சியோடு ஈடுபட்டு இன்புறுவதற்கான கொண்டாட்டங்களாக அமைகின்றன. பிறகு உரிய காலத்தில் குழந்தை பிறக்கிறது. அதுமுதல், குழந்தை பெரியவனாகிற வரையில் எத்தனையோ நிகழ்ச்சிகள். பிறந்து பதினாறு நாளானவுடனே, முதலாவது மங்கலச் சடங்கு. ஓராண்டு நிறைந்தவுடனே, ஆண்டு நிறைவு, பெயரிடுதல் என்ற விழாக்கள். பிறகு, குழந்தைக்குக் காது குத்தல், பள்ளிக்கூடத்துக்கு அனுப்புதல் என்றெல்லாம் தொடர்

பாகப் பல விழாக்கள் வருகின்றன. ஒவ்வொரு விழாவிலும் அக் குடும்பத்தை யொட்டிய மக்கட் சமூகம் அவ்வளவும் கலந்து கொண்டு, விழாவை உற்சாகமாகக் கொண்டாடித் தானும் இன்புறுகிறது.

தனிப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் எல்லா நலங்களும் பொருந்திச் சுகமாக வாழ்கிறது என்றறிந்து அந்தச் சுகவாழ்க்கையின் அடையாளங்களான இவ்விழாக்களைக் கொண்டாடுவதில் எல்லோருக்கும் உண்மையாகவே மகிழ்ச்சிதான்.

இப்படிப்பட்ட விழாக்களிலே தோட்டில் இடுதல் என்பது ஓர் அழகான விழா. குழந்தை பிறந்து பதினாறுநாள் வரையில், குழந்தையும் தாயும் பிரசவ அறையிலே தனியாக இருக்கச் செய்வது வழக்கம். பதினாறுவது நாளன்று வீடு முழுதும் மெழுகிச் சுத்தம் செய்து, தாயையும் குழந்தையையும் நீராட்டி, பிரசவ அறையினின்றும் வெளியே வந்து எல்லோரோடும் பழகச் செய்வதுண்டு. அன்று மாலையிலே நடக்கும் சடங்குகள் ஒரு விழாவாகவே இருக்கும். இவ் விழா, பெரும்பாலும் பெண்களுக்கே உரியதாயிருக்கிறது.

காலையிலேயே நண்பர்களுக்கும் உறவினருக்கும் சொல்லியனுப்பிவிடுவார்கள். பிறகு, காலையில் செய்ய வேண்டிய சடங்குகள் யாவும் நிறைவேறுகின்றன. மத்தியானச் சாப்பாட்டின் பிறகு, அயல் வீட்டிலுள்ளார் யாவரும் ஒவ்வொருவராய் வர ஆரம்பிக்கிறார்கள். முக்கியமாக வேண்டியவர்கள் வந்தவுடனே, விழாவுக்கான வேலைகள் தொடங்குகின்றன. குழந்தையை நீராட்டி ஈரம் உலர்த்திக் கொண்டுவந்து அலங்கரிக்கிறார்கள். தாயின் பிறந்தகத்தாரே எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

பதினாறு நாளான குழந்தைக்கு என்ன அலங்காரந் தான் செய்துவிடமுடியும்? ஆனாலும் மற்றவர்களுக்கு அந்த அலங்காரத்திலே ஆசைதான். மெல்லிய சட்டை

யொன்றைப் போடுகிறார்கள். காலிலே வெள்ளிக் காப்பு, கையிலே தங்கக் காப்பு, பிறகு மரவட்டைக் காப்பு, முக்கியமாக ஒரு வேப்பிலைக் காப்பு. இன்னும் வேறு காப்புக்கள்; கையிலே மோதிரம்; இடுப்பிலே அரைஞாண் - வெள்ளியாலோ, பொன்னாலோ செய்தது அல்லது வெறுங் கறுப்புக்கயிறு; இதிலே பொற்காசுகள், நாயுருவம், புலிப்பல், புன்கங்காய் முதலியன கோத்திருக்கும். காப்புக்கயிறு என்றொரு கயிற்றைக் கையிலே கட்டுவார்கள். கழுத்திலே ஒரு சிறு மாலை. பிறகு குழந்தைக்குச் சிறிது சர்க்கரை கரைத்த நீரை அல்லது பாலை ஊட்டுவார்கள் - அதாவது நாக்கில் தடவி உண்பிப்பதாகப் பாவனை செய்கிறார்கள். வந்தோருக்கெல்லாம் பின்னர் காப்பரிசி வழங்குகிறார்கள். காப்பரிசியோடு கூடவே, சர்க்கரை, கற்கண்டு, பழம், வெற்றிலைப்பாக்கு முதலிய வினியோகமும் நடைபெறுகிறது.

குழந்தையை அழைப்பதற்கான ஒரு செல்லப் பெயரை இடுவதும் அன்றுதான். சாதாரணமாக, பெயரிடுவது முதலாண்டு நிறைவு தினத்திலேதான். ஆனால் அதுவரையில் குழந்தையோடு கொஞ்சிக் குலாவுவதற்காக, இந்த விழாவிலே ஒரு பெயரை இடுவது வழக்கம்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சி இனித்தான் நடைபெறப் போகிறது. ஒரு தொட்டிலை அலங்கரித்து வைக்கிறார்கள். தாய் வீட்டார், விழாவை உத்தேசித்து, ஒரு புதுத் தொட்டில் வாங்கி 'வரிசை'யாகத் தருகிறார்கள். தொட்டிலிலே அழகான சிறு மெத்தை போட்டு, சங்கிலிகளுக்கெல்லாம் பூவைச் சுட்டிவைத்திருக்கிறது. இனிச் செய்யவேண்டியது, குழந்தையைத் தொட்டிலில் கிடத்துவதுதான். நண்பர்கள் உறவினர்களுக்குள்ளே, 'எல்லா நலன்களும் பொருந்தி நீண்ட நாள் நல்ல நிலைமையிலே வாழ்ந்த ஓர் அம்மையாரிடம் குழந்தையைத் தந்து, தொட்டிலில் கிடத்தச் செய்கிறார்கள். அந்த அம்மையாரும் குழந்தையை ஏற்

றுத் தொட்டிலில் மெல்லப் படுக்கவைக்கிறார்கள். வைத்து, குழந்தை உறங்குவதற்காக மெதுவாகப் பாடுகிறார்கள்.

பிறகு, மற்றப் பெண்கள் பலரும் ஒவ்வொருவராகச் சிறிது நேரம் தொட்டிலை அசைக்கிறார்கள் என்பது சம்பிரதாயம் ; தாலாட்டும் பாடுகிறார்கள். கடைசியாகக் குழந்தையின் தாயும் வந்து தொட்டிலை ஆட்டுகிறாள். தாயின் இதயத்திலே மகிழ்ச்சி நிறைந்திருக்கிறது. உளம் நிறைந்த மகிழ்ச்சியோடு தானும் குழந்தையைத் தாலாட்டிப் பாடுகிறாள். இதற்கிடையிலே, வீட்டுக்கு வந்த உறவினர் பலரும் விருந்துண்டு விடைபெற்றுச் செல்கிறார்கள். சென்றபின், தாயானவள் உறங்கப் போகுமுன் குழந்தையை எடுத்துப் பாலூட்டுகிறாள். மறுபடியும் அதைத் தொட்டிலிற் கிடத்தித் தொட்டிலை ஆட்டிக் கொண்டே தாலாட்டுப் பாடுகிறாள்.

இளமை பொருந்திய தாயின் உள்ளத்திலே தாய்மையுணர்ச்சி புதிதாக எழுந்திருக்கிறது. இதனாலே ஒரு பெருமித உணர்வு. இந்த உணர்விலிருந்து பாடல் பிறக்கிறது. பாடலும் அன்றைய நிகழ்ச்சிக்கு முற்றிலும் பொருத்தமாக அமைகிறது. தொட்டில் செய்த சிறப்பையும் அதன் அழகையும் அலங்காரத்தையும் அருமையாகப் பாட்டில் இசைக்கிறாள்.

அவள் ஊருக்குப் பக்கத்திலே, சதுரகிரி என்றொரு மலை இருக்கிறது. தொட்டில் செய்வதற்காக மரம் வேண்டி, அந்த மலையிலுள்ள காட்டுக்குப் போகிறான், தொட்டில் செய்யும் ஆசாரி. மரம் என்ன மரம்? கையிலே பணம் இருந்தால் எடுத்துக்கொண்டு நேரே கடைக்குப்போய் இக்காலத்தில் (அதாவது இந்த யுத்தம் வருவதற்கு முன்னமே) எளிதாகத் தேக்குமரம் வாங்கிக்கொண்டு வந்து விடுவோமே இந்த மாதிரி மரம் அல்லவாம் ; அவன் தேடிச் சென்றது சாதிலிங்கம் என்ற உயர்ந்த சாதி மரம். அதை வெட்டிக்

கொண்டுவந்தான். வந்து, அதை நூல் போட்டு அறுத்து இழைத்துச் சேர்த்துக் கோத்துச் சித்திர மெல்லாம் அமைத்து அழகிய தொட்டிலாக்கி விட்டான் ஆசாரி.

போட்டுப்பால் போட்டி விட்டுப்
பொற் றொட்டில் வைத்தாட்ட,

சதுகிரி மலை யேறிச்
சாதிலிங்கக் கட்டை வெட்டிச்
சேர்த்துப் பணிப் படுத்திச்
சித்தி ரத்தால் ஒப்பமிட்டு—

தொட்டிலாயிற்று. இனி அதில் வலப்பக்கம் இடப்பக்கம், முன்பக்கம் பின்பக்கம், ஆக நாற்புறமும் பொன்னும் மணியும் வைத்து இழைக்கிறான் ஆசாரி. எப்படி?

வலது புறத் தொட்டிலுக்கு
மாணிக்கக் கல்லிழைத்து,
இடது புறத் தொட்டிலுக்கு
இரத்தினத்தால் கல்லிழைத்து,
முன்பக்கத் தொட்டிலுக்கு
முத்துச்சரம் வைத்திழைத்து,
பின்பக்கத் தொட்டிலுக்குப்
பச்சைக்கல் வைத்திழைத்து,—

மணிவைத்து இழைத்தாயிற்று. இனி, குழந்தை, யாரைப் போல் வளரவேண்டும் என்ற எண்ணமுண்டாகிறது. நம் நாட்டில் வழங்கும் கதைகளிலே மகாபாரதக் கதைதான் மிகவும் பெரியது; நூற்றுக்கணக்கான கிளைக்கதைகளையுடையது. மகாபாரதத்துக்குக் கதாநாயகனாக இருப்பவன் அருச்சுனன். அவனுடைய வீரச் செயல்களிலே ஈடுபடாதவர் நம்மிடையே எவரும் இருக்கமுடியாது.

தொட்டிலின் அமைப்பைத் தாலாட்டுப் பாடலில் பாடி வரும் தாயின் உள்ளத்தில், அருச்சுனனுடைய வீரச் செயல்களைப்பற்றிய கதைகள் தோன்றி மறைகின்றன. உடனே தன் மகனுக்காகச் செய்த தொட்டிலில் அருச்சுனன் பெயரை எழுதிவைத்தால், மகனுக்கு அவ்வருச்சுனனைப் பற்றிய கதைகளெல்லாம் நாளடைவிலே தெரியவரும்; அருச்சுனனை யொத்த வீரமும் அவனுக்கு அமையும் என்று எண்ணுகிருள். அப்படியே தொட்டிலில் ஒரு பக்கம் அருச்சுனன் பெயர் எழுதியாகிறது. மற்றப் பக்கங்களிலும், பொருத்தமான வேறு பெயர்கள் எழுதியாகின்றன :

வலதுபுறத் தொட்டிலிலே
வாள் விசயன் பேரெழுதி,
இடதுபுறத் தொட்டிலிலே
இந்திரனுர் பேரெழுதி,
முன்பக்கத் தொட்டிலிலே
மூவர்கள் பேரெழுதி,
பின்பக்கத் தொட்டிலிலே
பெருமாளின் பேரெழுதி—

பெருமாளின் பெயரெழுதுவானேன்? திருமால், காக்குந் தெய்வமல்லவா? ஆதலினலே, முன்பக்கத்தில் மற்றிருவர் பெயரோடு அவர் பெயரையும் எழுதியது போதாதென்ற எண்ணத்துடன் பின்பக்கத்தில் அவர் பெயர் தனியாகவே எழுதப் பெறுகிறது. (சொல்லியதையே திருப்பித் திருப்பிச் சொல்வதும், மாற்றிச் சொல்லுவதும், தாலாட்டுப் பாடல்களிலே வழக்கம். நெடுநேரம் பாடவேண்டியிருப்பதனல், இப்படி யெல்லாம் சொல்வதிலே ஒரு சுகம் உண்டாகிறது.)

அடுத்த புறத் தொட்டிலிலே
ஆதிசிவன் பேரெழுதி,

எதிர்த்தபுறத் தொட்டிலிலே
எம்பெருமான் பேரெழுதி—

ஆனல் இவை போதுமா? மணியும் முத்தும் வைத்து இழைத்தாலும், வீரர்கள் பெயரை எழுதிவைத்தாலும் போதுமா? இப்போதுதான் வளர ஆரம்பிக்கும் சிசுவுக்கு மணியிழைத்தாலும் முத்திழைத்தாலும் கவர்ச்சி பிறவாது; வீரர்கள் பெயரை எழுதினல், அப்பெயர்கள் பிற்காலத்தில் மனதில் பதியுமேயன்றி, இப்போது குழந்தைக்கு அவற்றுல் பயனில்லை. குழந்தையின் கண்ணுக்கு விருந்தாக அமையக்கூடிய பொருள் ஏதேனும் இருந்தால்தான் அக் குழந்தையின் கவனத்தை இழுக்கமுடியும். ஆகவே, அப்படிப்பட்ட பொருளை ஆசாரியானவன் ஓவியமாகவும் சிற்பமாகவும் தொட்டிலிலே நாற்புறமும் அமைக்கிருன். அது என்ன பொருள்?

கிளியினிடத்திலே நம்மவருக்கு ஈடுபாடு மிகுதி. அழகிய முகத்தைப் பார்த்தால், 'கிளி கொஞ்சுகிறது' என்பார்கள். அழகிய பொருள் எதுவாயிருந்தாலும் அப்படியே அழகிய வீடோ, அழகு பொருந்திய பாத்திரங்களோ, படமோ வேறெதுவாயிருந்தாலும், இதிலே 'கிளி கொஞ்சுகிறது' என்பதே வழக்கம். கிளியினிடத்துள்ள அழகை நம்மவர் அவ்வளவு அதிகமாக அனுபவித்திருக்கிருர்கள். அதன் அழகிய பசுமை நிறம், ஒளி பொருந்திய சிவந்த மூக்கு, கழுத்தைச் சாய்த்து அது பார்க்கும் பார்வை, 'அக்கா அக்கா' என்று அது அழைக்கும் குரல் ஆகிய யாவற்றிலும் நமக்கு ஈடுபாடுண்டு. கிளிப்பிள்ளை என்றே அருமை பாராட்டிச் சொல்கிருேமல்லவா? இதனல், குழந்தைகளையும் பெண்களையும் சாதாரணமாகக் கிளி என்றே நாம் சொல்வோம். இந்த அழகான கிளியின் உருவத்தை ஆசாரியானவன் தொட்டிலின் பல பக்கங்களிலும் அமைத்துவைக்கிருன்:

அஞ்சுகிளி கொஞ்ச
ஆனையம்மான் பேரெழுதி,
கொஞ்சுகிளி அஞ்செழுதிக்
குட்டியம்மான் பேரெழுதி,
சிரிக்குங் கிளியெழுதி—உங்கள்
சின்னய்யா பேரெழுதி,
பேசுங்கிளி எழுதி—உங்கள்
பெரியய்யா பேரெழுதி—

கிளி எழுதியதோடு நிற்கவில்லை ஆசாரி. தொட்டிலானது தாயின் பிறந்தகத்தில் செய்யப்பெறுகிறது. அதைச் செய்து சீர்வரிசையாக அளிக்கக் காரணமாயிருந்த பெரியம்மான், சின்னம்மான் ஆகியவர்களின் பெயர்களையும் கூடவே பொறித்து வைக்கிறான் ஆசாரி. அன்றியும், குழந்தையின் தந்தைக்கு இளைய சகோதரர் பெயரையும் மூத்த சகோதரர் பெயரையும் மற்ற இருபுறங்களிலும் எழுதிவைக்கிறான். இவ்வாறு உறவினர் பெயர்களை முறையாக எழுதி முடிக்கிறான்.

குழந்தைக்கு விளையாட்டாகக் காட்டக்கூடிய பறவைகளிலே, கிளியே மிக்க அழகுடையதாயிருந்த போதிலும், குழந்தையானது கிளியின் வடிவம் ஒன்றைமட்டும் தொட்டிலிலே கண்டால் போதுமா? போதாது. இதற்காக ஆசாரி அன்னம், புரு முதலிய பறவை வடிவங்களையும் எழுதுகிறான்.

அன்னம் எழுதி
அதன்மேல் புருவெழுதி,
தாரா எழுதித்
தாய்மாமன் பேரெழுதி —

தொட்டிலில் கண்வளரும் குழந்தையைக் காக்கவேண்டுமென்று ஆசாரி அதில் ஒரு மந்திரத்தையும் எழுதுவிக்

கிருன். இவ்வளவும் ஆன பிறகுதான் தொட்டிலைக் கொண்டுவந்து கொடுக்கிருன்.

> பஞ்சாட் சரமெழுதி—உங்கள்
> பாட்டனுர் பேரெழுதிக்
> கொண்டுவந்து கண்டானே—ஆசாரி
> கொம்பனையாள் வாசலிலே.

குழந்தையைத் தொட்டிலிடும் நாளிலே, இவ்வளவு அருமையாய்ச் செய்த தொட்டிலை ஆசாரி கொண்டுவந்து கொடுத்தான். அதிலே அன்று குழந்தையைக் கண்வளரச் செய்தும் ஆயிற்று. இனி ஒரே ஒரு காரியம் பாக்கியிருக்கிறது. அதாவது, இவ்வளவும் செய்த ஆசாரிக்குப் பரிசில் அளிக்க வேண்டியது. சந்தனம் வெற்றிலை பாக்கெல்லாம் அவனுக்குத் தாராளமாக வழங்குகிருர்கள். பிறகு பரிசில் அளிக்கிருர்கள்.

அருமையாகத் தொட்டில் அமைத்துவந்ததற்கு அவனுக்குக் கூலிகொடுப்பதில் அர்த்தமில்லை. கூலி என்ற மாத்திரத்திலே, இவ்வளவு அருமைப்பாடும் மறைந்துவிடும். செய்த வேலைக்குக் கூலி என்றுகிவிடுமேயொழிய, அதில் இவ்வளவு அருமையும் அன்பும் அலங்கார நயமும் பாராட்டுதலும் அமையமாட்டா. அன்பு காரணமாகச் செய்த வேலைக்குக் கூலி இல்லை. அன்புக்குப் பிரதிபலன் அன்புதான். அன்போடு தொட்டிலைச் செய்துவந்து கண்டுகொண்ட ஆசாரிக்கு இவர்களும் அன்போடு வெகுமானம் அளிக்கிருர்கள்.

> அடித்ததோர் ஆசாரிக்கு
> அளித்ததென்ன வெகுமானம்?

> கின்னியிலே சந்தனமும்
> கிளிமூக்கு வெற்றிலையும்,

பொன்னூரம் முத்தாலே
　　புதுக்காப்பும் சங்கிலியும்,
கழுத்துக்குத் தங்கவடம்
　　காதுக்குப் பொற் கடுக்கன்,
தோளுக்குப் பொன்னுருமால்
　　துப்பட்டா பட்டாலே,
அரைக்கு அரைஞாணும்
　　அடித்த கைக்கு மோதிரமும்—

இவ்வளவு பரிசிலைத் தந்தவுடனே, ஆசாரிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைச் சொல்லவாவேண்டும்?

இந்த வெகுமானம்
　　இவ்வுலகில் கண்டதில்லை!
போதுமென்று சொல்லிப்
　　போய்விட்டான் ஆசாரி.

இனி, தொட்டில் ஆடுகிறது. ஆடுகிறபோது அதன் அமைப்பிலுள்ள அழகெல்லாம் புலப்படுகிறது.

தொட்டிலுமோ பொன்னாலே
　　தொடுகயிறே முத்தாலே
பட்டாலே தொட்டிலாம்
　　பவழக் கொடிகயிறும்,

தொட்டில் அலைந்துவரத்
　　தொட்டிற்கால் நின்றிலங்க,
ஆடுமாம் தொட்டில்
　　அசையுமாம் பொன்னுணி
ஓடுமாம் தொட்டில்
　　உயருமாம் பொன்னுணி.

இப்படியாக, தொட்டிலின் அமைப்பையும், ஆசாரி அதை அமைத்த அழகையும், தொட்டில் ஆடுகிற அருமையையும் சொல்லிப் பாடித் தாலாட்டிவருகிறபோது, குழந்தை மெல்ல உறங்கிவிட்டது. உறங்குகிற குழந்தையின் அழகிய புன் முறுவல் பூத்த முகத்தைப் பார்க்கும்போது, அதை விட்டு அப்பாற் போகவே தாய்க்கு மனமில்லை. ஆனாலும் போகத் தான் வேண்டியிருக்கிறது; போய்ச் சாப்பிடவேண்டும். மற்ற வீட்டுக் காரியங்களெல்லாம் ஆகவேண்டும். ஆகவே, குழந்தையைத் தனியே விட்டுப் போகிறாள். போகுமுன் அதற்குச் சில துணைகளை வைத்துவிட்டுப் போகிறாள். எப் படிப்பட்ட துணை? தொட்டிலிலே தொங்கும் அன்னத்தை யும் புறாவையும் பார்த்துக் கேட்கிறாள் :

அன்னமே, தாராவே!
அந்திபகல் ஆருதுணை?
சொன்னமே, கிளியே—என்
சுந்தரனுக் காருதுணை?
ஆளப் பிறந்தானுக்(கு)
ஆரார் துணையிருப்பார்?

அன்னமும் கிளியும் அவளுக்குப் பதில் சொல்வதாகப் பாவம்.

செந்தில்வடி வேலவனார்
திருச் செந்தூர்ச் சண்முகனார்
வந்து துணையிருப்பார்—உன்
வரிசை மகன் பக்கத்திலே
கூடத் துணையிருப்பார்
குழந்தைவடி வேலரவர்
சாரத் துணையிருப்பார்
சந்திரரும் சூரியரும்

பக்கத் துணையிருப்பார்
பார்வதியும் ஈசுரரும்
அருகே துணையிருப்பாள்
அம்மை உமையவள்தான்
நடுவே துணையிருப்பார்
நாரணரும் பிரும்மாவும்
சேர்ந்து துணையிருப்பார்
சிவனும் பெருமாளும்.

காலை மாலை நேரங்களில், முறைபோட்டு மாற்றி மாற்றித் துணையிருக்கிறார்கள் :

காலைத் துணைவருவார்
கணபதியும் வல்லபையும்
மாலைத் துணைவருவார்
மயிலோனும் வள்ளியரும்
அந்தித் துணைவருவார்
அரனும் ஈசுவரியும்
சாமத் துணைவருவார்
சந்திரரும் சூரியரும்.

குழந்தைக்கு இவ்வளவு அருமையான துணைகள் இருக்கும் போது, தாய்க்கு ஏது கவலை? அல்லது நமக்குத்தான் என்ன கவலை? குழந்தையிடம் விடைபெற்றுக்கொண்டு நாமும் வந்துவிடலாமல்லவா ?

## 3. பால் பசு

**நா**கரிகம் என்பது நகரத்தை யொட்டிய பழக்க வழக்கம். நகரத்தையொட்டி வளர்ந்து வருகிற நாகரிகப் பழக்க வழக்கங்களின் விளைவாக, காப்பிக்குடியும் தேயிலைக்குடியும் இன்று மிக்க சாதாரணமாகிவிட்டன. இதன் பயனாக, பாலுக்குச் சொல்லமுடியாத கிராக்கி. இதை நாம் தினமும் உணர்ந்து வருகிறோம்.

காப்பி முதலான குடிகள் காரணமாக, நகர மக்கள், ஆடவரும் பெண்டிரும் உடல்வலி குன்றிவிடுகிறார்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் உடல் திண்மை இல்லாமலிருக்கின்றன. போதாக்குறைக்கு 'நாகரிக' வாழ்க்கையுடைய தாயினிடத்திலே தன் குழந்தைக்கு வேண்டிய பால் கிடைப்பது அருமைதான். இதற்காகத் தாய்ப்பால்தவிர வேறு பாலையும் தேடவேண்டியிருக்கிறது.

குழந்தைகளுக்குப் பசும்பால் புகட்டுவது பழைய வழக்கம். ஆனால், எப்படியோ நகரத்துக் குழந்தைகளுக்கு இந்தப் பசும்பாலைக்கூடச் சீரணிக்கும் சக்தி இருப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். சீரணமாகாத பால் இளங் குழந்தையின் வயிற்றிலேயே தங்கி வயிற்றில் ஒருவிதக் கட்டியை உண்டாக்கிவிடுகிறதென்று சொல்லுகிறார்கள். இந்தக் கட்டி குலைக்கட்டி என்றும் ஆபத்தானதென்றும் கருதுகிறார்கள். குலைக்கட்டி நிபுணர் என்று சொல்லிக் கொள்ளும் வைத்தியர் சிலருக்கு இன்று நல்ல பிழைப்பும், இதன்மூலம் ஏராளமான வருவாயும் கிடைத்துவருகின்றன. இதுவுமல்லாமல், பசும்பாலுக்குப் பதிலாகப் புட்டிப் பால் செய்து தகரத்திலும், கண்ணாடியிலும், அட்டைப் பெட்டியிலும் அடைத்து அனுப்பும் மேல்நாட்டு வியாபாரிகளுக்கு இன்று பெருத்த கொண்டாட்டந்தான்.

இந்த நாகரிக நிலை ஒருபுறமிருக்கட்டும். நாட்டுப்புற வாழ்க்கையிலே பார்த்தால், பசும்பாலைக் கண்டு குழந்தை களோ, குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களோ, அஞ்சுவ தாகத் தெரியவில்லை. நாட்டுப்புறத்தாருக்கு, ஏழை உழவனா யினும் சரி, பணக்காரனாயினும் சரி, பசுவே எல்லாவற்றை யும் தரவல்ல காமதேனு. ஓர் ஏர் உழவுமாடு இல்லாத உழவனுக்கு, பயிர்த்தொழிலேது, நாட்டுப்புற வாழ்க்கை தான் ஏது ? பசு மாடு இருந்ததானால் அது ஈனும் காளைக் கன்றுகள் உழவுக்கேற்ற மாடுகளாகும். பசும்பால் தயிர் மோர் என்றெல்லாம் உணவுக்கும் ஊதியத்துக்கும் ஏற்ற பொருள்கள் கிடைக்கின்றன. பசுவும் கன்றுகளும் காளை களும் இருந்துவிட்டால், நிலத்துக்கு வேண்டிய சாண எரு, தாராளமாய்க் கிடைத்துவிடுகிறது. எனவே, உழவனுக்கு வேண்டியது நிலத்துக்கு அடுத்தபடி பசுமாடுதான்.

இவை நிற்க, குழந்தைகளுக்குப் பசும்பால் புகட்ட வேண்டும். பசு வேண்டுமென்பதுதான் இப்போது கவ னிக்க வேண்டிய பொருள். ஒரு தாயின் உள்ளம் இப் பொருளை விரித்துச் சுவைபட எப்படி எப்படிச் சொல்லி மகிழ்கிறது என்பதை இங்கே சிறிது பார்க்கலாம். பார்க்க நமக்குக் கிடைத்துள்ளது ஒரு தாலாட்டுப் பாடல்.

குழந்தை அழுகிறது. அதைத் தொட்டிலிற் கிடத்தி உறங்கவைப்பதற்காகத் தாய் அருகிலே நின்றுகொண்டு மெல்லப் பாடுகிறாள். பாடும்போது, குழந்தை பால் உண்ண வேண்டுமென்று அழுகிறது என்பதாக அவள் மனத்துள் ஒரு கற்பனை எழுகிறது. அந்தக் கற்பனையிலே பாட்டுப் பிறக் கிறது :

**பாலா லுடையவனும்**
**பசித்தழுதான் நித்திரையில்—**
**பாலா லுடையான்**
**பசித்தழுதான் என்றுசொல்லிப்**

பாற்பசுவைத் தேடிப்
புறப்பட்டார் உங்களப்பா.

பாற்பசுவைத் தேடிக்கொண்டு வரப் போயிருக்கிருர் குழந்தையின் தந்தை. எப்படிப்பட்ட பசுவைத் தேடிச் சென்ருர் ?

காடேறி மேய்ந்து வருங்
காராம் பசுத்தேடிப்
புல்லேறி மேய்ந்து வரும்
பெரியபசுத் தான்தேடிப்
பேருலகு சுற்றி வரப்
புறப்பட்டார் உங்களப்பா.

பசுவைத் தேடிச் சென்ற தந்தை எவ்வளவோ பணங் கொண்டு சென்ருர். குழந்தையின் அம்மான்மாரும் வேண்டிய பணம் தந்தார்கள். ஊரெல்லாம் சுற்றி அவர் என்ன பசுவைக் கொண்டுவந்தார் ?

பாற்பசு வாங்கிவரப்
பணங்கொடுத்தார் அம்மான்மார்—

ஊரெல்லாஞ் சுற்றி
ஒருபசுவுங் கிட்டாமல்
நாடெல்லாஞ் சுற்றி
நல்லபசுக் கிட்டாமல்
காடெல்லாஞ் சுற்றிக்
காராம்பசுக் கொண்டுவந்தார்.

கொண்டுவந்த பாற்பசு இயல்பாகவே எவ்வளவோ அழகுடையதாய்த்தான் இருக்கிறது. ஆனல் இங்கே மேலும் அதற்குப் பல அலங்காரங்கள் செய்தாகின்றன. கொம்புக்

குக் கொப்பி, கழுத்திலே மணிகள், மணிக்கயிறு, காலுக்குத் தண்டை என்று எத்தனையோ அணிவகைகள் பூட்டுகிறார்கள்.

கொண்டுவந்த பாற்பசுக்குக்
கொம்பெல்லாந் தங்கநிறம்—

கொம்புக்குக் கொப்பியிட்டுக்
கோல்விழிக்கு மையெழுதி
வீசுகிற காதுக்கு
வெண்சா மரையெழுதிச்
சுற்றுகிற வர்லுக்குச்
சுடர்மணிகள் ஏறவிட்டு
முன்கால் இரண்டுக்கும்
முதலியார் தண்டையிட்டுப்
பின்கால் இரண்டுக்கும்
பிள்ளைமார் தண்டையிட்டு
முதுகுக் கழகாக
வயிரங்கள் பொன்னிழைத்து—

இவ்வளவுஞ் செய்தவுடனே அந்தப் பசுவும் சும்மா இருக்குமா? கொப்பியிட்ட கொம்பை அசைக்கிறது. தன்னுடைய கோல்விழியால் கூர்ந்து பார்க்கிறது.

கொம்பால் அசைத்திடுமாம்
கோல் விழியால் பார்த்திடுமாம்.

புதிதாக வந்த பசு சில நாட்களில் நன்றாகப் பழகிவிட்டது ஆற்றங்கரையிலும் சுற்றியுள்ள தோப்புக்களிலும் போய் மேய்ந்துவிட்டு வருகிறது. (எல்லாம் தாயின் கற்பனைதான்.) பாலாலுடையான் பசித்தழுதான் என்று மேலே நாம்

கண்டோமல்லவா? அதற்காக விரைவிலே அவன் பால் குடிக்கவேண்டுமென்று தாய் பசுவை அழைக்கிருள்.

காலமே வா பசுவே—என்
    கண்ணு மகன் பால்குடிக்க
பொழுதிருக்க வா பசுவே—என்
    பொன்னு மகன் பால்குடிக்க
மலைமேலே மேய்ந்துவிட்டு
    மகுட மணி ஓசையிட்டு
நேரமிருக்க வா பசுவே—என்
    செல்ல மகன் பால்குடிக்க.

பசுவும் மேய்ந்துவிட்டு நேரத்தோடு வந்துவிட்டது. இனிச் செய்யவேண்டுவது கறக்க வேண்டியதொன்றுதான்.

(நாட்டுப் புறங்களிலே பெரும்பாலும் அந்தந்த வீட்டுக்குரிய பெண்களே பசுவைக் கறந்து கொள்வார்கள். ஆடவர் வயற் புறங்களில் வேறு வேலையில் ஈடுபட்டிருப்பார்களாதலால், அவர்கள் வேலை முடிந்து வந்து மாடு கறப்பதென்பது அபூர்வம்.)

தாய் பால் கறக்கப் போகிருள். பசுவை அணைந்து கறப்பது வழக்கமல்லவா? கையிலே அணைகயிறும், உட்காருவதற்கான முக்காலியும், பாற்செம்பும் கொண்டு போகிருள். இவற்றைப் பற்றி யெல்லாம் உல்லாசமாக எண்ணிக் கற்பனையாகச் சொல்லும்போது, இவை எப்படித் தோற்றுகின்றன?

அணைந்து பால்கறப்பதற்கு
    அணைகயிறும் பொன்னுலே
உட்கார்ந்து பால்கறக்க
    முக்காலி பொன்னுலே
சாய்ந்திருந்து பால்கறக்கச்
    சார்மணையும் பொன்னுலே

பால்கறந்து கொண்டுவைக்கப்
பாற்பானை பொன்னாலே
உடன்கறந்த பாலைவைக்க
உறிகயிறு பொன்னாலே.

பொன்னோடு அவள் இவ்வளவு தூரம் உறவாடியபின், தன்னுடைய கையும் விரலுமே பொன்னிறமாகத் தோற்றுவதில் வியப்பில்லை.

ஏந்திப்பால் கறப்பதற்கு
இடது கையுந் தங்கநிறம்
உருவிப்பால் கறப்பதற்கு
ஒருவிரலுந் தங்கநிறம்

பால் கறந்தாகிறது. இனி, பாலைக் காய்ச்ச வேண்டியது தான்.

பால்காய்ச்சும் சட்டி
பச்சை நிறமாயிருக்கும்.

ஏன்? பசும்பொன் ஆனமையினாலே.

பொன்னின் குழலெடுத்துப்
பொற்கொடியாள் தீமூட்டி
தங்கக் குழலெடுத்து—உன்
தாயாரும் தீமூட்டி—

(பொற்கொடியாள் என்பது தன்னையேதான். பொன்னைத் திருப்பித் திருப்பிச் சொன்னதனால் பிறந்த சுகம், தன்னையே பொற்கொடி என்று சொல்லிக் கொள்ளவும் செய்கிறது.)

அடுப்பிலே எப்படி நெருப்பு மூட்டியாகிறது?

வடகடலின் நற்பவழம்
வாரி உமியணைத்து
தென்கடலின் நற்பவழம்
திரட்டி உமியணைத்து
நடுக்கடலின் நற்பவழம்
நடுவே தணல்பரப்பி—

(அடுப்பினுள் தணலாக இருக்கும் நெருப்பின் ஒளியைப் பார்க்கும்போது, சிவந்த பவழத்தின் நினைவு வராமலிருக்க முடியுமா ?)

பரப்பிய தணலிலே, பாற்பானையை வைத்து அதிற் பாலைக் காய்ச்சியாகிறது, காய்ச்சிய பின் அதை ஆற்றியும் ஆகிறது.

காய்ச்சுப் பால் காய்ச்சி—பொன்னின்
கலசத்தில் ஆற்றி வைத்தேன்.

ஆற்றிவைத்த பாலைக் குடிக்கும்படி குழந்தையை வேண்டுகிருள் :

இங்கிகுடி பாக்கியமே
எங்கள் குலம் ஈடேற
பாலுகுடி பாக்கியமே—உங்கள்
பாட்டனர் பேர் விளங்க.

(இங்கி என்பது செல்லமாகப் பாலைக் குறிப்பிட்டுக் கூறுகிற சொல்.) இவ்வாருக உறங்கவைக்க வேண்டிக் குழந்தை யிருக்கும் தொட்டிலை ஆட்டிக்கொண்டே தாய் பாடுகிற தாலாட்டுப் பாடலிலே, பசு ஒன்றைச் சிருஷ்டித்து அதைக் கறந்து, பாலைக் காய்ச்சிக் குழந்தைக்குப் புகட்டியும் முடிக்கிருள்.

## 4. சங்குப் பாலடை

**பொ**ன்னுக்கும் வெள்ளிக்கும் இக்காலத்திலுள்ள மதிப்புச் சொல்லவே முடியாது. இயற்கையிலேயே இவை கிடைப்பது மிக்க அருமை. தவிர, இன்றைய உலக அரசியல், பொருளாதார நிலைமைகள் காரணமாக உலகெங்குமுள்ள பொன்னெல்லாந் திரண்டு அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற இரண்டொரு நாடுகளுக்குள் போய் முடங்கிவிட்டது. மற்ற நாடுகளுக்கு இதன் விளைவாக எவ்வளவோ தொந்தரவு; நாணயச் செலாவணி தடைப்படுகிறது. பொறாமையும் கோபமும் பகைமையும் வளர்கின்றன. போர் மூளுவதற்குக் கேட்பானேன்?

இந்தப் பொன்னும் வெள்ளியுமே, ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டை எந்நேரமும் நினைவூட்டக் காரணமாயிருப்பவை. எளிய நிலையிலுள்ள மக்கள் இயல்பாக மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் வாழ்கிறார்கள். நன்றாக உடல் வருந்தி உழைத்து, உழைப்பினால் வரும் பயனைப் பெற்று ஓரளவுக்கு அமைதியும் இன்பமும் பொருந்திய வாழ்க்கை வாழ்கிறார்கள். அப்படியானால் இவர்களுக்கும் செல்வர்களுக்கும் ஒரு வேற்றுமை வேண்டுமே! அந்த வேற்றுமையைக் கற்பிக்க வல்லதாயிருக்கிறது ,பொன். பணக்காரர்களுக்கு, அங்கமெல்லாம் பொன் காய்த்துத் தொங்குகிறது என்று சொல்லத்தக்கபடி பொன்னாபரணங்களை அணிந்து கொள்ள ஆசைதான். காப்பு, கொலுசு, காசுமாலை, சங்கிலி, மோதிரம் என்றெல்லாம் எத்தனையோ நகைகள் அவர்களுடைய உடலில் ஏறி அவர்களது செல்வத்தின் சின்னங்களாய்க் காட்சியளிக்கின்றன.

வாழ்க்கையிலே ஒரு துறையில் இந்த நிலையை நாம் கண்டபோதிலும்,கலையுலகத்திலே பொன்னுக்கு இத்தகைய

தனிச் சிறப்பெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டுக் கோயில்களிலுள்ள சிற்பங்கள் யாவும் தமிழரின் கலைத் திறமைக்குப் புகழ்பெற்றவை. ஆனால், இச்சிற்பங்கள், அற்பமும் விலை மதிப்பேயில்லாத கருங்கல்லில்தான் அமைக்கப்பெற்றுள்ளன. சிற்பத்தின் அருமைப்பாடு அமைந்த காரணத்தால், மதிப்பே கூறமுடியாத அளவுக்கு அக்கருங்கற்கள் உயர்வடைந்துவிட்டன.

அன்றியும், நம் கோயிலிலுள்ள தெய்வங்களின் திருவுருவங்கள் யாவும் செம்பினாலும் வெண்கலத்தினாலுமே செய்யப்பெற்றிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். சிதம்பரத்திலுள்ள நடராஜப்பெருமானின் திருவுருவம் மட்டும் ஏதோ அபூர்வமாகப் பொன்னாலியன்றதாயிருக்கலாம். ஆனால், பொதுவாக, சிற்பத்திறன் விளங்கச்செய்யப் பெற்றுள்ள பிற எல்லாச் சிலைகளுமே, விலை மதிப்பில் குறைவான செம்பு, வெண்கலமாகிய உலோகங்களால் அமைக்கப்பெற்றுள்ளனவேயன்றி, மதிப்புயர்ந்த வெள்ளி பொன் முதலிய உலோகங்களாலல்ல. பண்டைக்காலத்தில் மட்டுமல்லாமல் இன்றும் இது உண்மை.

மக்கட் கூட்டமும் பெருகி, போட்டியும் மலிந்து, வாழ்க்கைப் போராட்டம் மிக்க கொடுமையாகிவிட்ட இக்காலத்திலே, அந்தந்த நாட்டு மக்கள், தாம் தாம் மேலோங்க வேண்டுமென்று எண்ணிய காரணத்தால், பொன் முதலான அபூர்வ உலோகங்களுக்கு, இல்லாத ஒரு பெருமதிப்பு ஏற்பட்டுவிட்டது. இந்த இன்றைய நிலையே எக்காலத்தும் வழங்கிவந்ததில்லை. மக்கள் இவ்வாறு பொன்னுக்கு அடிமையாகாமல் மக்களாகவே வாழ்ந்த பழங்காலமுமிருந்தது. தமிழ்நாட்டின் இயற்கை வளம் காரணமாக உணவுக்கும் உடைக்கும் எவ்விதக் கவலையுமின்றி மக்கள் வாழ்ந்தார்கள். வாழ்க்கையைச் செம்மையுறச் செய்யவல்ல கலையிலும் சமயத்திலும் அவர்களது மனம் ஈடுபட்டிருந்தது. பொன்னையே தெய்வமாகக் கருதி ஆடவர் பெண்டிர் அனை

வரும் எல்லா அலங்காரங்களையும் பொன்னாலேயே செய்து கொள்ளும் மனநிலை அப்போது ஏற்படவில்லை ; புறத்திலும் அகத்திலும், உடலிலும் உள்ளத்திலும், அழகையே முதன்மையாக நாடிவந்த காலம் அக்காலம்.

அழகுணர்ச்சியையும் கலையுணர்ச்சியையும் நினைவூட்டும் சின்னமாகப் பண்டைக்காலந்தொட்டு இருந்துவரும் அரிய பொருள், சங்கு. கடலிலிருந்து கிடைத்த வெண்சங்கானது மனத்துக்கு மிக்க உவகையளிக்கவல்ல பொருளாயிருந்தது. அதன் தூய வெண்மை நிறத்திலே நம் மக்கள் பெரிதும் ஈடுபட்டார்கள். சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பது உண்மையல்லவா? மங்காத அதன் இயற்கையொளி நம் முன்னோரின் மனத்தைக் கவர்ந்தது.

சங்கையே திருமால் தமது ஆயுதமாகக் கையில் ஏந்தியிருக்கிறார் என்ற கற்பனையும் எழுந்தது.

கருப்பூரம் நாறுமோ
கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான்
தித்தித் திருக்குமோ ?
மருப்பொசித்த மாயவன்தன்
வாய்ச்சுவையும் வாசமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே !

என்று பக்தி பரவசத்திலே அச்சங்கையே நோக்கிக் கேட்கவும் செய்தது. இவை யாவும் மக்களுக்குச் சங்கையொட்டிய அனுபவத்தையும் அழகுணர்ச்சியையும் ஈடுபாட்டையும் பலவகையாகப் பெருக்கி வந்திருக்கின்றன.

சங்கினிடமாக எழுந்த ஈடுபாடானது எத்தனையோ வகையில் சங்கைப் பயன்படுத்திக்கொள்ளச் செய்தது. சங்கைச் சுத்தம் செய்து, [illegible]ன கட்டி அழகு

படுத்தி அதை இன்றியமையாததொரு வாத்தியமாகக் கொண்டார்கள். வட்ட வட்டமாக அறுத்து போர்முரசம் முதலியவற்றுக்கு அலங்காரமாகவும் ஓசையைப் பெருக்கு வதற்காகவும் அவற்ருேடு சேர்த்துக்கொண்டார்கள். பித் தளையாலும் வெண்கலத்தாலும் இயன்ற வட்டங்களையும் வளையங்களையும் கஞ்சிரா போன்ற இசைக்கருவியில் ஓசைக்காகக் கோப்பது இன்றும் உண்டல்லவா? இவை போக, சங்கை வளையமாக அறுத்து ஆபரணமாக அணிகிற வழக்கமுமிருந்தது. காதிலணியும் தோடும் சங்கினுல் செய்து கொண்டார்கள். விரலிலணியும் மோதிரமும் சங்காலே, முன் கையிலணியும் வளையலும் சங்காலே.

இப்படி எத்தனையோ வகையிலே மக்களை அலங்கரிக்கச் சங்கு உதவியது. சங்கறுப்பதே பெரிய தொழிலாகவும் வளர்ந்தது. புகார் நகரென்னும் காவிரிப்பூம்பட்டினத்தில் சங்கறுக்கும் தொழில் ஓங்கியிருந்தது. மக்களிலே ஓரினத்தார் சங்கறுக்கும் தொழிலே தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தார்கள். 'சங்கறுப்ப தெங்கள் குலம்' என்பது பாட்டு. அவர்கள் சங்கை அறுத்துச் சுத்தம் பண்ணி வளையல் செய்து விற்றுத் தங்கள் வாழ்க்கை நடத்தினர்கள். அவர்கள் வாழ்ந்த அகன்றதொரு வீதியும் பழங் காலத்திலே அந்நகரில் இருந்ததாம்.

அணிவளை போழுநர்
அகன்பெரு வீதியும்

என்பது சிலப்பதிகாரம். பொன்னுக்குப் பெருமதிப்பேற் பட்டுள்ள இக்காலத்திலும்கூட பொன் நகை செய்யும் தட் டார் வாழும் வீதியென ஒரு முழு வீதி எந்த நகரிலும் இல்லை. எனவே, அக்காலத்தில் சங்கறுப்போர் வீதி என வொன்று இருந்ததானல், சங்கு வளைத்தொழில் எவ்வளவு மிகுதியாக நடைபெற்றதென்று தெரிகிறதல்லவா?

சங்கினுலே அணிகலன் செய்வது இக்காலத்திலும் சிற் சில இடங்களில் வழக்கத்திலிருந்து வருகிறது. புனிதமான கடல் நீராட வருவோரை யெண்ணி, சங்கு மோதிரம் செய்து விற்பதை இராமேசுவரத்தில் இன்னும் காணலாம். சங்கிலே வளையல் செய்யும் தொழில் வங்காளத்தில் இன்னும் சிறந்த முறையிலே நடைபெறுகிறதாம். அங்கு இன்றும் சங்குவளையே சுமங்கிலிக்குரிய அடையாளமாயிருக்கிறது. நுட்பமான சிறு சங்குகளுக்குத் தங்கப் பூண் கட்டி, அவற்றைத் தங்கச் சங்கிலியால் மாலையாகத் தொடுத்து அணிகிற வழக்கமொன்று சமீபகாலத்தில் தோன்றியிருக்கிறது. பெரிய சங்கை வளையாக அறுத்த பின் அதை இழைத்து ஒழுங்குபடுத்தி, மேற்புறத்தில் சிறு குழிவுகள் செய்து அவற்றில் பொன்னையும் மணியையும் இரத்தினங்களையும் அழுத்தி, பலவித அரிய சித்திர வேலைப் பாடுகளைச் செய்வதுமுண்டு. தூய வெண்ணிறச் சங்கிலே பொன்னிறமும் இரத்தினங்களின் செந்நிறமும் மரகதத்தின் பச்சையும் பிற மணிகளின் நீல நிறமும் சேரும்போது, எளிய அச்சங்கு எவ்வளவோ கவர்ச்சி பெறுகிறது. பொன் நகைக்குக் கல்லிழைப்பது போலவே சங்கு நகைக்கும் கல்லிழைப்பதானல், சங்குக்கு என்ன மதிப்பிருந்த தென்பது விளங்குகிறதல்லவா ?

கலைச் சின்னங்களுள் ஒன்ருன சங்கையும் சங்கு வளையையும் இலக்கியத்தில் போற்றியிருப்பதைக் குறித்துத் தனியாகவே விரிந்த ஆராய்ச்சி செய்யலாம். அது ஒருபுறமிருக்க, வாய்மொழியாக வழங்கும் சாமானியமானதொரு தாலாட்டுப் பாடலின் மூலமாக, சங்கையொட்டி யெழுந்த கலையுணர்ச்சி எத்தன்மையது என்று ஆராய்வதிலே எவ்வளவோ மகிழ்ச்சி யுண்டாகிறது.

தொட்டிலிலே குழந்தை படுத்திருக்கிறது. அதை உறங்கச் செய்வதற்காகத் தாயானவள் அருகிலே நின்று

கொண்டு தொட்டிலை ஆட்டி வருகிருள். ஆட்டும்போது குழந்தையை உறங்கவைப்பதற்காக மெல்லிய குரலிலே பாடுகிருள். பாடுகிற தாலாட்டுப் பாடலிலே, எத்தனையோ செய்திகள் தொடர்பாக வருகின்றன. தாயின் உள்ளத்திலே எவ்வளவோ ஆழ்ந்த அனுபவமும் உணர்ச்சிப் பெருக்கும் வேகமும் உண்டு. இந்த ஆழ்ந்த வாழ்க்கை யனுபவம் காரணமாகவே, தாலாட்டுப் பாடல் பிறக்கிறது.

குழந்தை வரம் வேண்டித் தெய்வத்தை வழிபட்டதும் நோன்பிருந்ததும் தீர்த்த யாத்திரை செய்ததும் ஒரு காலம். அதை யெல்லாம் பாட்டிலே சொல்லியாயிற்று. இப்போது அருமையாகக் குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தைக்குச் செய்யவேண்டிய காரியங்கள் எத்தனையோ. குளிப்பாட்டுதல், நாவழித்தல், மையிடுதல், பொட்டிடுதல் முதலிய யாவும் பாட்டிலே சொல்லியும் ஆயிற்று. இனி அதற்குப் பால் புகட்டும் செய்தி தாலாட்டுகின்ற பாடலிலே வருகிறது.

குழந்தைக்குப் பால் வேண்டுமென்று பாற் பசுவைத் தேடிப் போனதும், பசுவைக் கொண்டுவந்து பால் கறந்ததும் பெரிய கதை. இப்போது பால் காய்ச்சியாகிறது, எந்தப் பாத்திரத்திலே ? வெள்ளிப்பாத்திரத்திலா அல்லது பொன் பாத்திரத்திலா? இல்லை, வெண்கலப் பானையா? அதுவுமில்லை. கற்சட்டி அல்லது மண் பானையா ? மண்பானை மற்ற யாவற்றையும் விட மிக்க நன்மை பயப்பதென்று இன்று தான் புதிதாக நம்மவர் கண்டு வருகிருர்கள். மண்ணினலே பானை முதலியன வனையும் அரிய கலை, தமிழருக்கு மட்டுமே உரியதான கலை, எவ்வளவோ புராதனமான ஒரு கலை. மண் பானையிலே சமைக்கவேண்டும், பால் காய்ச்சவேண்டும் என்ற புதியதொரு கருத்து இப்போது மீண்டும் வழங்கி வருகிறது. தாய் இங்கு சொல்வது அதுவும் அன்று. வேறு என்ன பாத்திரம் ?

சங்கிலே பால் காய்ச்சிச்
சங்கிலே பாலாற்றி—

என்று தாய் பாடுகிருள். வெண்மையான பாலை வெண்மையான சங்கிலே தான் காய்ச்சுகிருள் என்பதாக எவ்வளவோ அருமையான கற்பனை. குழந்தை சம்பந்தமாக மனத்திலே எழுந்த அருமைப்பாடு அவ்வளவும் பொன்னையும் வெள்ளியையும் பிற பாத்திரங்களையும் ஒதுக்கிவிட்டு, சங்கிலே பால் காய்ச்சியதாகச் சொல்லியதிலே புலப்படுகிறது. பால் காய்ச்சியதும் சங்கிலே, ஆற்றியதும் சங்கிலேதான். சங்கோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மற்றவை யாவும் தாழ்ந்தவைதானே ?

இப்போது பாலை ஆற்றியும் ஆயிற்று. இனிக் குழந்தைக்குப் பால் புகட்ட வேண்டியதுதான். புகட்டப் பாலடை வேண்டியிருக்கிறது.

பழங்காலத்திலே தமிழ் மக்கள் சங்குப் பாலடையைத் தான் உபயோகித்து வந்தார்கள். வெண்கலத்தையோ வெள்ளியையோ பொன்னையோ இதற்கு உபயோகித்ததில்லை.

வெள்ளியும் வெண்கலமும் மிகுதியாக உபயோகிக்கப் பெறும் இந்நாளிலேகூட, சங்குப் பாலடையை நம் தாய்மார் மறந்துவிடவில்லை. குழந்தை பிறந்த புதிதிலே, முதன் முதல் பால் புகட்டும்போது மட்டுமாவது, சம்பிரதாயத்துக்காகச் சங்குப் பாலடையை உபயோகிக்கிருர்கள். அல்லது உபயோகிக்காவிட்டாலும்கூட, மற்றப் பாலடையோடு இதையும் துணைக்கு வைத்து, இதனுல் பால் புகட்டுவதாய்ப் பாவனை செய்கிருர்கள். பாலடைக்குச் சங்கையே நெடுங்காலமாக உபயோகித்து வந்த பழக்கத்தினுலே, பாலடைக்குச் சங்கு என்ற பெயர் பொருந்திவிட்டது.

வெண்மையான சிறு சங்கைப் பார்க்கும்போது குழிந்து விரிந்த அதன் தலைப்புறமும், நீண்டு குறுகிய

உட்குழிவோடு கூடிய அதன் முனையும் இயல்பாகவே பாலடைபோல் அமைந்துள்ளதாகத் தோற்றுகின்றன.

குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுகிற தாயானவள், சங்குப் பாலடையை மனத்தில் எண்ணிக்கொண்டு, பொற் பாலடையும் வெள்ளிப்பாலடையும் பால் புகட்டுவதற்கு ஏற்றவையல்லவென்று கூறுகிருள். இதற்காக ஓர் அருமை யான காரணமும் சொல்லுகிருள் :

**கண்ணே ! உனக்குப்**
**பொற்சங்கால் போட்டினுல்**
**புத்தி குறையுமென்று**
**வெள்ளிச்சங்கால் போட்டினுல்**
**வித்தை குறையு மென்று—**

எண்ணினுராம் குழந்தையின் அம்மான் (தாயின் சகோதரர்). ஒரு பெண்ணுக்கு வேண்டிய பாத்திரம் முதலியன யாவும் அப்பெண்ணின் தாய்வீட்டார் தருவது எங்கும் வழக்க மல்லவா? இந்த முறையை யொட்டி, குழந்தை பிறந்ததற் காக வேண்டுவன யாவும் செய்கிருர் நல்லம்மான். எல்லா வற்றையும் முன்னமே கொடுத்துவிட்டார். இப்போது பாலடை வேண்டியிருந்தது. மேற் சொன்ன காரணங் களைச் சொல்லி, பொன்னும் வெள்ளியும் வேண்டாமென்று அவர் தள்ளிவிட்டாராம். பிறகு என்ன செய்தார்?

**நடுக்கடலில் மூழ்கி**
**நாரணனுர் சங்கெடுக்க,**
**திருப்பாற் கடல்மூழ்கித்**
**திருமாலின் சங்கெடுக்க—**
**பொருக்கென் றெழுந்து**
**புறப்பட்டார் உங்களம்மான் !**

சங்குப் பாலடைதான் குழந்தைக்கு ஏற்றது என்றெண்ணி,

சங்கெடுக்கக் கடற்கரைக்குப் போனர். கடலும் வெறுங் கடலல்ல, திருமாலுக்குரிய திருப்பாற்கடலைத் தேடிப் புறப்பட்டாராம்.

பால் வேண்டுமென்று அழுகிற குழந்தைக்குப் பால் புகட்டுவதற்காக நல்லம்மான் பாலடை தருகிறுர் என்பது தான் தாலாட்டுப் பாட்டின் பாவம். பொற் சங்கால் புகட்டினல் புத்தி குறையுமா அல்லது வெள்ளிப் பாலடையால் புகட்டினல் வித்தைதான் குறைந்துவிடுமா என்றெல்லாம் இங்கே வாதம் செய்வதற்கு இடமில்லை. பசித்தழும் குழந்தையானது, திருப்பாற் கடலிலிருந்து அம்மான் பாலடை கொண்டுவரும்வரையில் அழுகையை நிறுத்திப் பசியைப் பொறுத்துக்கொண் டிருக்குமா என்றெல்லாம் கேட்கக்கூடாது. இவ்வளவும் கற்பனைதான். ஆனலும் எவ்வளவோ உண்மையான அழகான கற்பனை. நம்மவருடைய உள்ளப் பண்பின் அருமையை விளக்கிக் காட்டுகின்ற கற்பனை.

இந்தக் கற்பனையில் இன்னும் சிறிது அலங்காரமும் உண்டு. அம்மானுனவர் தாம் எடுத்து வருகிற சங்குப் பாலடையை அப்படி எடுத்து வந்து விடவில்லை. சங்கைக் கொண்டுவந்து இரத்தினமும் பொன்னும் வயிரமும் வைத்திழைத்துத் தருகிறுராம்.

சுற்றிப் பச்சை வைத்துச்
சுருளெல்லாம் பொன்னிழைத்து
வாய்க்கு வயிரம் வைத்து
வரிசை யிட்டார் உங்களம்மான்.

இவ்வாறு தாயின் உள்ளத்தி லெழுந்த கற்பனையிலே பாலடை கொண்டுவரச் சென்ற அம்மான் சங்குப் பாலடையைத் தேடி, கடலெல்லாம் கடந்து திருப்பாற் கடலுக்கே

போய்வருகிருர். சங்கினிடத்திலே நம்மவர்களுக்குள்ள பழமையான ஈடுபாட்டையும் நம் நாகரிகத்திலும் கலையிலும் சங்குக்கு நாம் அளித்துள்ள உயர்ந்த நிலையையும் எண்ணிப் பார்க்கும்போது, அவர் திருப்பாற் கடலுக்கு மட்டுமன்று, அதற்கப்பாலுங் கூடப் போகிருர் என்றே சொல்லத் தோன்றும்.

# 5. அவல் கேட்ட குழந்தை

அழுகிற குழந்தையை எளிதிலே ஓயப்படுத்துகின்ற ஓர் அரிய திறமை பெண்களிடத்திலே மிகுதியாகக் காணப் படுகிறது. பொதுவாய் ஆடவர் என்னதான் அன்போடு குழந்தையிடம் பழகுபவர்களா யிருந்தாலும், அவர்களுக் குக் குழந்தையை அழவிடத் தெரியுமே யொழிய, அழுகின்ற குழந்தையைச் சமாதானம் பண்ணத் தெரியாது.

அழுகிற குழந்தையை ஓயப்படுத்தி ஓயப்படுத்திப் பழக்கப்பட்ட தாய்மாருக்கு, அழாத குழந்தையையும் கற்பனையிலே அழப் பண்ணி அதன் அழுகையைப் பிறகு நிறுத்தச் செய்வதில் தனியான ஒரு மகிழ்ச்சி யிருக்கக் காண்கிறோம். கற்பனையிலே குழந்தை அழுகிறதென்றால், அதற்கான சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்களாகவே எழுகின்றன.

தாலாட்டுப் பாடி வருகின்ற தாயானவள் தன் கற்பனைக் குழந்தையைக் கொஞ்சம் அழவிட்டுப் பார்க் கிறாள்; குழந்தையின் அழுகை தாயின் கற்பனையைத் தூண்டிவிடுகிறது. தொட்டிலிலே படுத்து உறக்கங் கொள் ளாமல் அழுது அடம் பண்ணுகின்ற சிறு புதல்வனை, கொஞ்சம் வளர்ந்தவனாக, வயலுக்கும் களத்துக்கும் சென்று தீராத விளையாட்டுக்களைச் செய்யும் சிறு பையனாக, கற்பனை செய்து பார்க்கிறாள்.

பையனுக்கு எத்தனையோ பொருள்களிலே விருப்பம். முக்கியமாய், தின்பண்டங்களிலே, தினமொரு விதமாக அவனுடைய விருப்பம் மாறிக்கொண்டிருக்கிறது.

ஒருநாள் அவனுக்கு அவல் தின்ன வேண்டுமென்று ஆசை யுண்டாகிறதாம். (எல்லாம் தாயின் கற்பனையில்

தான்.) அவலிடித்துக்கொடுக்கும்படி தாயைக் கேட்கிருன். வீட்டிலே எவ்வளவுதான் தின்பண்டம் இருந்தாலும், இல்லாத தொன்றைத்தான் குழந்தைகள் கேட்பது வழக்கம். தாய்க்கு வேறு வேலைத் தொந்தரவு காரணமாக உடனே அவலிடித்துத் தர இயலவில்லை. வந்து கேட்ட மகனை, 'மாமாவைப் போய்க் கேள்' என்று (பாதி வேடிக்கையாகவே) சொல்லி அனுப்பிவிடுகிருள்.

மாமா அதாவது அம்மான் என்ருலே, தாயின் பிறந்த வீட்டார் என்று பொருள். பிறந்தகத்தைப் பற்றித் தாய்மார் எல்லோருமே பெருமை பாராட்டுவதுதான் வழக்கம். பெண்கள் தங்களுக்கு வேண்டிய பொருள் எதையும் தங்கள் தாயைக் கேட்டுப் பெற்றுக்கொள்வது எளிதாயிருக்கிறது. எனவே, அவர்களுக்குத் தாய்வீடு என்ற மாத்திரத்தில் மனத்தில் எவ்வளவோ மகிழ்ச்சியும் உல்லாசமும் நிறைகின்றன. தாய் வீட்டுப் பெருமையைச் சொல்லிச் சொல்லி அவர்களால் எல்லை காணவும் முடிவதில்லை. இதில் தவறு ஒன்றும் இல்லை; தாய் வீட்டுப் பெருமையைக் கொண்டாடுவது என்ருலே, கணவன் வீட்டுக்குப் பெருமை கிடையாது என்று கருதிவிட்டதாகப் பொருள்படாது.

தாலாட்டுப் பாடி வருகின்ற தாயானவள், தன் சிறு புதல்வனை மாமா வீட்டில் போய் அவல் பெற்றுக்கொள்ளும்படி சொன்னுளல்லவா? மேலே அவள் தொடர்ந்து பாடுகிருள். பாடுவதிலே, அந்த மாமாவின் குடும்பத்துக்குரிய செல்வச் சிறப்பை விரிவாகச் சொல்லுகிருள். செல்வத்துட் சிறந்த செல்வம் உழவுச் செல்வமல்லவா? "மேழிச் செல்வம் கோழை படாது" என்பது பழமொழி; ஆகவே பயிர் வளத்தைப் பெற்ற நாட்டின் ஏற்றத்தையும் பாடுகிருள்.

நாடு சோழநாடு: சோறுடைத்தான சோழ வளநாடு. நீர்வளம் மிகுதியாக உடைய நாடு. பெரிய ஆறுகள், சிறு ஆறுகள், வாய்க்கால்கள், அவற்றிற் பிரிந்து செல்லும் கால்

வாய்கள், வயல் தலைப்பிலே நீர் பாய்வதற்கான மடைகள் ஆகியவை யாவும் எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்னமே ஏற்பட்டு இன்னும் தொடர்ச்சியாக நிலை பெற்று வந்திருக்கின்றன. நீர் மிகுதியானமையால் வயலின் மடையைத் திறப்பதற்கு மண்வெட்டிகூட வேண்டுவதில்லை, காலால் தள்ளியே மடைதிறந்து விடலாம் என்று சொல்வதுண்டு. இதையே, தாலாட்டுப் பாடுகின்ற தாய் வேறு வகையிலே சொல்லுகிருள் :

*சேற்றுல் மடை திறந்தால்*
*செல்வங் குறையு மென்று,*
*பணத்தால் மடை திறந்தால்*
*பாசி பிடிக்கு மென்று,*
*காசால் மடைதிறந்தால்*
*கண்ணியம் குறையுமென்று,*
*சோற்றுல் மடை திறக்கும்—உங்களம்மான்*
*சோழனூர் ராச்சியமோ !*
*துரும்பசைத்தால் தேன் சொரியும்—உங்களம்மான்*
*சோழனூர் ராச்சியமோ !*

சிறுவனுடைய அம்மான் நாட்டிலே, மடைகளெல்லாம் வெறுங் களிமண்ணுல் அமைத்தனவல்ல, அவற்றைப் பணங் கொடுத்துத் திறக்கும் வேலையும் வழக்கமில்லை. சோற்று மடை, அதைத் திறப்பதும் சோற்றுலேயே ! அதாவது சோறுண்ட விசுவாசமுடைய ஊழியர்களே பயிர்த் தொழில் செய்துவருகிருர்கள். நீர்வளம் அதிகமான படியால், எங்கெங்கும் பூத்துக் கிடக்கும் மலர்கள், ஒரு சிறு துரும்பு அசைந்தால்கூடத் தேனைச் சொரியுமாம் : அத்தகைய செழிப்புடைய நாடு.

இந்த நாட்டின் வேளாண்மை எப்படி ? கால்வாய்களும் மடைகளும் நீர் தருகின்றன என்று பார்த்தோம்.

இவை எப்படித் தருகின்றன ? காவேரியம்மன் சற்றே கடைக்கண் பார்த்தால் போதுமாம் :

காவேரி கண் திறந்து
கால்வாயில் தண்ணீர் விட்டு—

காவேரி கடைக்கண் பார்ப்பதென்றால், பல வேறு கிளை நதிகளின் அணைகளிலும் மதகுகளிலும் வாய்க்கால் தலைப்புக் களிலும் உள்ள கண்களைத் திறந்து விடுவதுதானே ?

பொன்னேரு பூட்டிப்
பொழுதோடே விதை தெளித்து,
மானுங் களமாக்கி
மல்லிகைப்பூ நெல்லாக்கி,

ஆனை கட்டிப் போரடிக்கும்
அளவுபடா வேளாண்மை
குதிரை கட்டிப் போரடிக்கும்
குறைவில்லா வேளாண்மை
ஒட்டை கட்டிப் போரடிக்கும்
உத்தமனுர் வெள்ளாமை !

போரடிப்பதெல்லாம், மாட்டைக் கட்டித்தான் நடைபெறு கிறது. ஆனாலும் தாயின் உல்லாசமான கற்பனைக்கு, மாடு மட்டும் போதவில்லை. நம்முடைய தினசரி வாழ்க்கையில் யானையும் குதிரையும் ஒட்டையும் காணுகிற சந்தர்ப்பங்கள் குறைவு. ஜட்காவண்டிக் குதிரையைமட்டும் மறந்துவிடுவோ மானல் கோயில் உற்சவம்முதலிய விழாக்களில்தான் தாய், யானை முதலியவற்றைக் கண்டிருக்கிருள். பெருமைக்குரிய முதற்சின்னங்கள் என்று இவற்றை எண்ணியுமிருக்கிருள். எனவே, இவற்றைப் போரடிப்பதற்காகக் களத்துக்கே கொண்டுவந்து நிறுத்திவிட்டால், அப்புறம் பெருமைக்கு எல்லையில்லை யல்லவா ?

அம்மான்மார் தருகின்ற ஆதரவை மேலும் பாட்டில் சொல்லுகிறாள் :

**தம்பி உனக்கு,**

**ஆடுவதும் சோலை,**
**வீசுவதும் சாமரைகள் !**

**தம்பிக்கு,**

**மூத்தம்மான் என்ன தந்தார்**
**முத்துவடந் தந்தார்**
**இளையம்மான் என்ன தந்தார்**
**இருந்தாடத் தொட்டில் தந்தார்.**

**கழுத்துக்கு,**

**தங்கத்தால் தாவடமாம்**

**கைக்கு,**

**தங்கவளை காப்புகளாம்**
**அஞ்சுவர்ணம் பொருந்திய**
**பஞ்சா யுதங்களுமாம்.**

அவல் கேட்ட சிறுவனைத் தன் மாமன் வீட்டில்போய்க் கேட்கும்படி சொல்லவருகிற தாய், இவ்வளவும் தாலாட்டில் பாடுகிறாள். இத்தகைய சிறப்பமைந்த மேழிச் செல்வம் படைத்த அம்மான் வீட்டிலே சிறுவனுக்கு அவலுக்குப் பஞ்சமா ஏற்படப்போகிறது ?

இனி, சிறுவன் அம்மான் வீடு தேடி நடக்கிறான் ; அவனுடைய மெல்லிய சிற்றடிகள் நடக்கத் தெரியாமல் வருந்துகின்றன ;

சின்னக்கால் நோவ—தம்பி
 சிறுகால் மணல் புதைய
வன்னக்கால் நோவ—தம்பி
 வருந்திவழி போருனும்
பொன்னின்கால் கொப்புளிக்கப்
 புலம்பிவழி போருனும்
தங்கக்கால் நோவத்
 தனிவழியே போருனும்.

இப்படியாக வருந்தி நடந்துசெல்கிற சிறுவன் மெல்ல மாமா வீட்டை யடைகிருன். மாமாவோ வீட்டிலில்லை ; மாமியும் அங்கில்லை ; இருவரும் களத்துக்குப் போயிருக்கிருர்கள். இதை யறிகிருன் சிறுவன். சரி, களத்துக்குப்போகலாம் என்றெண்ணி அவல் கொண்டுவருவதற்காகக் கையிலே எடுத்துக்கொண்டு வந்திருந்த சிறு ஓலைக் கூடையுடன் களத்தை நோக்கிப் புறப்படுகிருன். களத்திலே நெல் விளையுமே யொழிய அவல் விளையாது, அவல் வீட்டிலேதான் கிடைக்கும் என்பதை அவன் கண்டானு? களத்தை நோக்கிப் போகிருன். போன சிறுவன் களத்தை யடைந்து அங்கே நெற்குவியல்கள் குவித்திருக்கக் காண்கிருன். நெல் லென்ருல் சாதாரணமான மட்ட நெல்லன்று ; எல்லாம், உயர்ந்த ரகமான செந்நெல். கண்ட சிறுவன், இதில் கொஞ்சம் அள்ளிக்கொண்டுபோனல், அவலிடித்துக்கொள் ளலாம் என்றெண்ணி விட்டான்போலும். தான் கையில் வைத்திருந்த விளையாட்டுச் சிறு கூடையிலே, கொஞ்சம் நெல்லை அள்ளுகிருனும்.

களத்தில் வேறு வேலையாயிருந்த அம்மான், இவன் வந்ததையோ நெல் அள்ளினதையோ கவனிக்கவில்லை. ஆனல், அம்மானுடைய மனைவி அங்கிருந்தவள் பார்த்து விட்டாள். பார்த்தவள் குழந்தையின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பும் பொருட்டு, தூரத்திலிருந்தே விளையாட்

டாகக் கீழே கிடந்த ஒரு சிறு மண் கட்டியை எடுத்துக் குழந்தையை நோக்கி எறிந்தாள். எறிந்த கட்டியொன்று சிறுவன்மீது பட்டது. பட்டவுடனே, குழந்தையானபடியால், இவன் அழ ஆரம்பித்துவிட்டான்.

**அம்மான்மார் செந்நெலிலே**
**அள்ளிவரப் *போனடத்தே**
**அம்மா னுடதேவி**
**அள்ளியிட்டாள் சேற்றுலே.**

குழந்தை அழுதான் என்பதைத் தாய் கற்பனையாக எண்ணியவுடன், அவ்வழுகைக்குக் காரணமாயிருந்த அம்மான் மனைவிமீது இன்னும் அதிகப் புகார்களையும் அவள் மனம் கற்பனை செய்து சொல்லுகிறது. விளையாட்டாக மாமியானவள் மண்கட்டியை விட்டெறிந்த செயல் சேற்றால் அடித்ததுபோல் ஆகிவிட்டது; இதுமட்டுமா? இன்னும் அவள் என்ன செய்தாளாம்?

**சேற்று முடிகளையும்**
**செந்நெற் கதிர்களையும்**
**வாரி இறைத்தாளாம்**
**வாராதே என்றுளாம்.**

குழந்தை கையிலே சிறு ஓலைப் பெட்டியொன்று கொண்டு போயிருந்தானல்லவா, அந்தப் பெட்டியையும் பிடுங்கி எறிந்து விட்டாளாம், அந்தப் பொல்லாத மாமி;

**பெட்டி பிடிங்கெறிந்து**
**போய் வாடா என்றுரைத்தாள்.†**

குழந்தைக்கு இது பொறுக்கமுடியாமல் அழுகை வந்து

*போனடத்தே - போன இடத்தே.
†பிடிங்கெறிந்து - பிடுங்கி எறிந்து.

விட்டதாம்; அப்பாவைத் தேடித் தேம்பிக்கொண்டே தன் குறையைச் சொல்லத் திரும்பி ஓடிவருகிறான் :

சேற்றுலே விட்டெறிய—என்
செல்வன் முகம் கோணி,
அழுதழுதே ஓடிவந்து
அப்பரிடஞ் செப்பையிலே,—

இவன் நெற் களத்திலிருந்து அழுதுகொண்டு திரும்பி ஓடின சத்தத்தைக் கேட்டார், களத்தில் வேலையாயிருந்த அம்மான் ஓடோடியும் வந்தார். வந்து குழந்தை தகப்பனாரிடம் போவதற்குள் வழியிலே வந்து தூக்கிக்கொண்டார். தூக்கிக்கொண்டு அவன் அழுகையையெல்லாம் நிறுத்தச் செய்து, மெல்ல விசாரிக்கிறார்.

ஆசை அழுதகுரல்
ஆச்சி அம்மான் கேட்டுவந்தார்
செல்லம் அழுத குரல்
சீனி அம்மான் கேட்டுவந்தார்

கேட்டவர், எப்படிச் சமாதானம் செய்கிறார் ?

ஆசை அழவேண்டாம்—எங்கள்
அமிர்தமே பேசாதே
செல்லம் அழவேண்டாம்—எங்கள்
சித்திரமே பேசாதே !

என்றார். பிறகு,

வாரி எடுத்து
வலத்துடையில் தானிருத்தி
ஏந்தி எடுத்து
இடத்துடையில் தானிருத்தி,

ஏன் அழுதாய் என்று சொல்லி
இதமாகக் கேட்டபோது,
அம்மான் வயலிலே
அரையளவு செந்நெலிலே,
அவலுக்கு நெல் கேட்டு
அழுதானும் அந்நேரம் ;
அவல்கேட்ட தம்பியற்கு
ஆசையம்மான் என்ன செய்தார் ?

மாமி செய்ததுபோல், இவர், அவல் கிடையாது, போடா என்று சொல்லக் கூடியவரா ? இல்லை.

விளையாட்டாக வந்து அவல் வேண்டுமென்று சொல்லி யழுத மருமகனுக்குக் கொடுப்பதற்கு, அவல் அப்படி யென்ன அருமையான பொருளா என்று அம்மான் சிறிது எண்ணிப் பார்க்கிறார். அற்ப அவலுக்குப் பதிலாய்க் காசும் பணமும் கொடுக்கலாமா என்று சற்று நேரம் சிந்தித்துப் பார்க்கிறார். இவை பயனல்ல என்று அவர் மனத்தில் படுகிறது. அவல் என்றாலும் குழந்தை சிறிது தின்னக் கூடும்; காசும் பணமும் சிறு குழந்தைக்கு எதற்காக ? எனவே இவை வேண்டாமென்று அவர் முடிவு செய் தாராம்.

தாய் இப்படி யெண்ணிப் பாடுகிறாள் :

அம்மான் களத்திலே
அவலுக்கு நெல்கேட்க—அவன்
பொன்னான வாயாலே
போகவென்று சொல்லாதே—
காசாய்க் கொடுத்தால்
களிம்பேறிப் போகுமென்று—

(மண்ணிலும் புழுதியிலும் விளையாடும் சிறுவன், காசை

வைத்து விளையாடினால், அக்காசு மண்ணிலும் ஈரத்திலும் பட்டுக் களிம்பேறிப் போகுமென்பது உண்மைதானே ?)

காசாய்க் கொடுத்தால்
களிம் பேறிப் போகுமென்று
காசை அவலாக்கிக்
கைநிரம்பத் தந்தானே !

துட்டைக் கொடுத்தால்
துருப்பிடித்துப் போகுமென்று
துட்டை அவலாக்கித்
துணிமுடிந்து தந்தானே !

பணத்தைக் கொடுத்தால்
பயன் கெட்டுப் போகுமென்று
பணத்தை அவலாக்கிப்
படி நிரம்பத் தந்தானே !
பொன்னை அவலாக்கிப்
பொட்டி பொங்கத் தந்தானே !

அவல் கேட்டு அழுத சிறுவனை அம்மானனவர் தூக்கிச் சமாதானப்படுத்தின அருமையைத் தாய் இவ்வாறு பாராட்டிச் சொல்லுகிறாள். ஆனால், அவனுக்கு, காசையும் பணத்தையும் பொன்னையும் அவலாக்கிக் கொடுத்தால் மட்டும் போதுமா ? போதாது. அவனும் அவன் தோழர்களும் தின்பதற்கு நெல்லை அவலாக்கித் தந்தால்தான் மகிழ்ச்சியுண்டாகும். இதையும் செய்து தருகிறார் அம்மான். எப்படி ?

அவல் கேட்ட தம்பியற்கு
ஆசையம்மான் என்ன செய்தார் ?

மேகம் குடையாக்கி
முல்லைப்பூ வில்லாக்கி,
வானம் குடையாக்கித்
தென்னம்பூ வில்லாக்கி,
கல்லை உரலாக்கி—ஆசையம்மான்
கலங்காம் புலக்கையாக்கி,—
நெல்லை அவலாக்கி—உங்களம்மான்
அள்ளியிட்டார் கைந்நிறைய !

கை நிறைய அவலை அள்ளியிட்டவுடனே, குழந்தைக்கு மகிழ்ச்சி யுண்டாகிறது. அழுகையெல்லாம் பிறகு நின்று விடவேண்டியதுதானே ?

ஆசை அழவேண்டாம்—எங்கள்
அமிர்தமே பேசாதே
செல்லம் அழவேண்டாம்—எங்கள்
செல்வமே பேசாதே

என்று தாயானவள், தாலாட்டுப் பாடலில் குழந்தை அவல் கேட்டழுத கதையை முடிக்கிருள்.

## 6. குழந்தையின் கண்ணீர்

குழந்தை அழுவதும் அதைத் தாய்மார் தேற்றுவதும் சர்வ சாதாரணமான நிகழ்ச்சிகள் ; தாய் என்றும் பிள்ளை என்றும் என்றைக்கு ஏற்பட்டதோ அன்று முதல் இவைகளும் உள்ளன. ஆனல், ஆடவர்கள் மட்டும், சிரித்து விளையாடுகிற குழந்தையோடு கொஞ்சிக் குலாவத் தயாராயிருப்பார்களே ஒழிய, அழுகிற குழந்தையைத் தூக்கவோ, அதைச் சமாதானம் செய்து அழுகையை நிறுத்தவோ, போகமாட்டார்கள். இவை யாவும் தாய்மைக்கே உரிய தனித்த உரிமைகள்.

குழந்தையைப் பத்து மாதம் வயிற்றிலே சுமந்து, பெற்றுப் பாலூட்டி வளர்க்கிற தாயினிடத்திலே ஆடவனுக்கு இல்லாத பல அரிய பண்புகள் குடிகொள்கின்றன. தனக்கென வாழாது தன் அருமைக் குழவிக்கெனவே தன் நலமெல்லாவற்றையும் மறந்து வாழுந் தன்மை, குழந்தை என்னென்ன தொந்தரவுகள் செய்த போதிலும் அத்தனையும் பொறுத்துக்கொள்ளும் பொறை, மலர்ந்த முகம் ஆகிய பல இயல்புகளைத் தாயினிடம் பார்க்கிரும்.

குழந்தை தரும் தொந்தரவுகளிலே, அதன் அழுகையைப்போல் பொறுக்கமுடியாதது வேருென்றில்லை. காரணமில்லாமலே (காரணம் நமக்குத் தெரியாது, அவ்வளவு தானே?) ஓயாமல்அழுகிற குழந்தையைத் தாய் ஓயப்படுத்த வேண்டியிருக்கிறது. தொட்டிலிலே அதைப் படுக்கவைத்து, ஆட்டி உறங்கச்செய்து அதன் அழுகையைப் போக்க முயல்கிருள். அழுவதை விட்டுவிட்டு, வேறு வழியில் அதன் கவனம் செல்வதற்காகத் தாலாட்டுப் பாட்டுப் பாடு

கிருள். தாலாட்டென்று ஆரம்பித்தால், அதற்கு முடிவே கிடையாதுபோல் தோன்றுகிறது; குழந்தை எவ்வளவு நேரம் அழுகிறதோ அவ்வளவு நேரம் தாலாட்டும் வளர்ந்து கொண்டே போகிறது.

இப்படி வளர்ந்துகொண்டே போகும் தாலாட்டுப் பாடலிலே, என்னென்ன அனுபவங்களெல்லாம் வெளியா கின்றன! இவற்றைக் கேட்கக் கேட்க, நமக்கு உண்மை யிலே அளவற்ற இன்பம் பிறக்கிறது. ஒரு பகுதியை மட்டி லும் இங்கே கவனிக்கலாம்.

முதலாவதாக, தாலாட்டும் அன்னையிடத்து உள்ள தாய்மையுணர்ச்சியை மட்டும் எளிய சொற்களால் புலப் படுத்துகிற சில வரிகள் வெளிவருகின்றன:

பாரதம் பெரிய கதை யாதலால், யாரும் தங்கள் வாழ்க்கையை அக்கதையில் ஒட்டிவருதல் எளிதாயிருக் கிறது.

**ஆளப் பிறந்தானே**
**அரசாள வந்தானே!**
**தானே வளர்ந்தானே**
**தருமர்கள் தந்தவனே!**
**அஞ்சு குடிக்கரசோ**
**பஞ்சவர்கள் பாற்குடமோ!**

அடுத்து வருகின்ற சில வரிகள் வெறுஞ் சொற்களா யிருந்தபோதிலும்கூட, தாயுள்ளத்தில் குமுறிக்கொண் டிருந்த சில துயரங்களையும், அத்துயரம் நீங்கிய பின் விளைந்த மகிழ்ச்சிப் பெருக்கையும், ஒருங்கே உணர்த்து கின்றன. எப்படி என்று பார்ப்போம்.

இத்தாலாட்டைப் பாடுகின்ற தாயின் வீட்டுக்கு அடுத்த வீடு, ஒரு பங்காளியின் வீடு. பங்காளிக் காய்ச்சல்

என்றெல்லாம் சொல்கிறார்களே, இது கொஞ்சமா? பக்கத்து வீட்டிலே, குழந்தையும் குட்டியுமாகச் சந்ததி பெருகி மகிழ்ச்சி குடிகொண்டிருக்கும்போது, தனக்குப் புத்திரப் பேறில்லாமல் குடும்பம் நடத்துவதென்றால் அந்த வாழ்விலே இந்தப் பெண்ணிடம் மகிழ்ச்சி உண்டாகுமா? தன்குடும்பத்துச் சொத்தெல்லாம், தனக்குப் பின்னர் பிறரல்லவா அனுபவிக்க நேரிடும்? இந்த நிலையிலே வாழ்க்கை நடைபெற்று வந்தால், நெஞ்சு குமுறாதா? துயரமும் பொறாமையுந் தானே வளரும்?

ஆனால், இந்த நிலை நீடிக்கவில்லை. தக்க பருவத்தில் தனக்கும் ஓர் அருமை மகன் பிறந்திருக்கிறான். பங்காளிக் காய்ச்சலுக்கு இனி இடமில்லை; அந்தக் கவலையெல்லாம் இனி வேண்டியதில்லை. மகனைக் கண்ட மகிழ்ச்சியில் நிறைந்து நிற்கின்ற மனமானது தாலாட்டுப் பாடலைச் சொல்லுகிறது:

முப்பாட்ட னுண்ட
முகப்புந் தலைவாசல்
தப்பாமல் ஆளத்
தவம்பெற்று வந்தானோ!

அப்பாட்ட னுண்ட
அரசு பலநாடு
தப்பாமல் ஆளத்
தவசுபண்ணி வந்தானோ!

பாட்டனார் ஆண்ட
பழுதில்லா ராச்சியத்தைத்
தாயாதி ஆளாதே
தானாள வந்தானோ!

தோப்பனூர் ஆண்ட
　　தோப்புத் துரவுகளை
ஆளப் பிறந்தானே
　　அரசாள வந்தானே !

மதுரை யறுகாதம்
　　வாழ்மதுரை முக்காதம்
ஐம்பத் தறுகாதம்
　　ஆளவந்த செல்வனே நீ !

ஆளப் பிறந்தானே
　　அரசாள வந்தானே !

தாயின் கற்பனையிலே இம்மகன் எவ்வளவுதான் ஆளப் பிறந்தவனு யிருந்தபோதிலும், தொட்டிலிலே கிடக்கும் போது, அழப் பிறந்தவனுகவேதான் காட்சி தருகிறுன் !

குழந்தையின் அழுகை ஓயாததைக் கண்ட தாயின் மனம், இதன் பின் வேறு வழியில் திரும்புகிறது. அவனேடு விளையாடுந் தோழர் வந்தால் ஒருவேளை அவனுடைய அழுகை நின்றுவிடக்கூடும் என்ற கருத்தில், தோழர்களை வரிசையாகச் சொல்லி வருகிறுள். (தோழர்கள், கற்பனைத் தோழர்கள்தாம் ; தோழர்களோடு விளையாடுவதற்கேற்ற வயது குழந்தைக்கு இன்னும் வரவில்லை என்பது நமக்குத் தெரியும்.) தாய் அழைக்கிற தோழர்களிலே, ஆணென்றும் பெண்ணென்றும் அல்லது மக்களென்றும் பறவையென் றும் வேறுபாடே இல்லை :

ஆளப் பிறந்தானுக்(கு)
　　ஆரார்கள் தோழன்மார் ?

(தாயின் நாவிலே, சீருக்கும் தளைக்கும் எற்றவிதமாக ஆரார் கள் என்ற புதுச் சொற்பிரயோகமே மிக்க எளிதாக எழுகிறது.)

மேலத் தெருவினிலே
    மெல்லியர்கள் தோழன்மார்,
கீழத் தெருவினிலே
    கிளிப்பிள்ளை தோழன்மார்,
தெற்குத் தெருவினிலே
    தேன்மொழியார் தோழன்மார்,
வடக்குத் தெருவினிலே
    மாடப்புறு தோழன்மார்,
கோடித் தெருவினிலே
    குயிலினங்கள் தோழன்மார்—

தெருவெல்லாந் தோழன்மார்
    சேர்ந்துவிளை யாடிவர,
ஊரெல்லாந் தோழன்மார்
    ஓடிவிளை யாடிவர,
கூட்டெல்லாந் தோழன்மார்
    கூடிவிளை யாடிவர—

என்று தாய் பாடுகிருள். ஆனல் அழுகை இன்னும் நிற்க வில்லை. ஆகவே, அழைத்த தோழரெல்லோரும் வந்துவிட்டார்கள் என்று அடுத்தபடி கூறுகிருள் :

ஆளப் பிறந்தான்
    அழுங்குரலைத் தான்கேட்டு,
மாடப்புறு வெல்லாம்
    வந்தே நிழல்காட்டிக்
கூவப்படா தென்று
    குரல்காட்டி நிற்கிறது !
கொஞ்சி விளையாடக்
    குயில்வந்து நிற்கிறது !

கேளிக்கை காட்டக்
    கிளிவந்து நிற்கிறது
அழைத்து விளையாட
    அன்னம்வந்து நிற்கிறது

பச்சைப் பசுங்கிளிகள்
    பாலகனைத் தேடிநிற்கும்
கோலமொழிக் கிள்ளை
    குமாரனைக் கூவிநிற்கும்

ஆடி விளையாட
    அணியிழையார் வந்துநிற்பார் !
பாடி விளையாட
    பால்மொழியார் வந்துநிற்பார் !
கூடி விளையாடக்
    கொம்பனையார் வந்துநிற்பார் !
நாடிவிளை யாடிவர
    நம்பிமார் வந்துநிற்பார் !

இடையிலே மற்றொரு பாவம் குறுக்கிடுகிறது. குழந்தை அழுதது, அடித்ததனால் அல்லாமல் வேறு ஏதேனும் காரணமாகவும் இருக்கலாம். என்ன காரணம்? வாழ்க்கைப் பொறுப்பு நிரம்பிய தாயின் உள்ளத்திலிருந்து சொற்கள் வருகின்றன :

ஆண்டம்மான் கொல்லையிலே
    ஆனைவந்து மேய்கிறது
ஆனை அடித்தோட்ட
    அம்புக் கழுதானோ ?

குட்டியம்மான் கொல்லையிலே
    குதிரை வந்து மேய்கிறது
குதிரை அடித்தோட்டக்
    கோலுக் கழுதானோ ?

தொட்டிலில் கிடக்கிற சிறுவன் இதற்கெல்லாம் ஏமாந்து போகவில்லை. ஒன்றையும் கவனியாமல், அழுதுகொண்டே தான் இருக்கிறான்.

பார்க்கிறாள் தாய். இப்போது வேறு முறையிலே தொடங்குகிறாள். 'உன்னை யார் அடித்தார், சொல்லு, அடித்தவர்களைத் தண்டனை செய்கிறேன்' என்கிறாள்.

இப்படிச் சொல்வது மிக்க சாதாரணம். குழந்தை சுவரிலே முட்டிக்கொண்டது என்று வைத்துக்கொள் வோம். நாம் என்ன சொல்லித் தேற்றுகிறோம்? 'சுவரா உன்னை முட்டிவிட்டது? இரு, அழாதே, சுவரை அடித்து விடுகிறேன்' என்று சொல்லிச் சுவரிலே மெல்ல அறை கிறோம். குழந்தையும் இதைக் கண்டு சிறிது சமாதான மடைகிறான்.

இந்த முறையிலே தாய் கேட்கிறாள் அழுகின்ற குழந்தையைப் பார்த்து:

> **தாத்தா அடித்தாரோ?**

என்று தொடங்குகிறாள். ஆனால், தாத்தா அடிக்க மாட்டாரே! எவ்வளவோ அருமையாகத் தவங் கிடந்து பிறந்த பேரனைத் தாத்தாதான் ஆகட்டும், வேறு எவரேனு மாகட்டும், அடிக்கத் துணியமாட்டார்களே! தவறாக அல்லவா கேட்டுவிட்டேன் என்ற எண்ணம் பளிச்சென்று அவள் மனத்தில் எழுகிறது. தொடர்ந்து தாலாட்டைச் சொல்லுகிறாள்.

> **தாத்தா அடித்தாரோ**
> **தாமரைப்பூச் செண்டாலே?**
> **பாட்டி அடித்தாளோ**
> **பால் புகட்டும் சங்காலே?**
> **மாமா அடித்தாரோ**
> **மல்லிகைப்பூச் செண்டாலே?**

மாமி அடித்தாளோ
    மைதீட்டுங் கோலாலே ?
அத்தை அடித்தாளோ
    அரவணைக்குங் கையாலே ?
சித்தி அடித்தாளோ
    சிறுகதலிக் கனியாலே ?

என்று பக்குவமாக ஒவ்வொருவரையும் குறிப்பிட்டுச் சொல்லிவருகிருள். இது நெடுந்தூரஞ் செல்கிறது.(தாமரைப் பூவாலும் மல்லிகை மலராலும் செவ்வந்திச் செண்டாலும் அடித்தால் வலிக்கத்தான் வலிக்குமா ? அல்லது பால் புகட்டி மைதீட்டி அரவணைக்குங் கைகள் அடிக்கத்தான் வருமா ?)கடைசியாக,

ஆளப் பிறந்தானை
    அஞ்சாதே ஆரடித்தார் ?
ஆரடித்து நீ அழுதாய்
    அஞ்சனக்கண் மை கரைய—

என்றும் கேட்கிருள். அடித்தவர் யாரென்று தெரிந்தால், அவரைத் தண்டித்து விடலாமல்லவா ? எப்படிப்பட்ட தண்டனைகள் ?

அடித்தாரைச் சொல்லியழு
    ஆக்கினைகள் பண்ணிவைப்போம் ;
தொட்டாரைச் சொல்லியழு
    தோள்விலங்கு போட்டுவைப்போம்;
செய்தாரைச் சொல்லியழு
    சேவகத்தை மாற்றிவைப்போம் ;

அறையில் அடைத்துவைப்போம்
ஆக்கினைகள் பண்ணிவைப்போம் ;
சிறையில் அடைத்துவைப்போம்
சிறைவிலங்கு பூட்டிவைப்போம் ;
கட்டை விரல்தறித்துக்
கடல்மீது ஏற்றிவைப்போம் ;
சுண்டு விரல் தறித்துச்
சீமைவிட் டகற்றிடுவோம் ;

சொன்னாரைச் சொல்லியழு
சோலைப் பசுங்கிளியே !

என்று பாடி நிறுத்துகிறாள். குழந்தைக்கு இப்போது கொஞ்சம் தூக்கம் வந்துவிட்டது. அரைத் தூக்கம்; கேட்டுக்கொண்டே யிருந்தான். ஆயினும் பாட்டைத் தாயார் நிறுத்தியவுடன், குழந்தை மறுபடியும் தன் அழுகையை மெல்லத் தொடங்கப் பார்க்கிறான். அதன் கண்ணின் கோடியிலே ஒரு துளிக் கண்ணீர் நிற்பது தெரிகிறது.

தன் அருமைப் புதல்வனின் தோழர்களையும் அவனது அழுகையையும் அவனை அடித்தவர்களையும் எண்ணிய தாயின் மனமானது, இப்போது குழந்தையின் கண்ணீரை எண்ணிப் பார்க்கிறது. ஒரு துளிக் கண்ணீர் சிந்தினாலும், குடங்குடமாய்க் கண்ணீர் விட்டானென்று மிகைபடுத்திச் சொல்வது உலகவழக்கம். இங்கே கண்ணீரோ பிள்ளையின் கண்ணீர். பார்த்துச் சொல்வதோ, தாய். சொல்வதற்குக் கேட்கவேண்டுமா? குழந்தை அழுத கண்ணீர் குளமாகத் தேங்கி ஆறாய்ப் பெருகி ஓடுகிறதாம். எங்கெங்கே ?

ஆரடித்த கண்ணீர்
ஆறாய்ப் பெருகியது ?

அங்கெடுத்த கண்ணீர்
ஆருய்க் குளம்பெருகி—

கண்ணீர் வெள்ளம் எங்கெல்லாமோ ஓடி நிறைந்துவிட்டது. தாயும் தந்தையும் பிறரும் இச் செல்வமகனைத் தம்மடியிலும் தோளிலும் ஏந்திக் கொஞ்சினர்களல்லா ?

தாயார் மடிநிறைந்து
தகப்பனர் தோள்நிறைந்து,
மாமி மடிநிறைந்து
மாமனர் தோள்நிறைந்து,

சித்திரை மாதம்
சிறந்தவெள்ளம் வந்ததுபோல்,
வைகாசி மாதம்
வசந்தவெள்ளம் வந்ததுபோல்,

பெருகுகிறது குழந்தையின் கண்ணீர் வெள்ளம். பெருகி எப்படி ஓடுகிறது ?

ஆறு பெருகி
ஆனை குளிப்பாட்டிக்
குட்டம் பெருகிக்
குதிரை குளிப்பாட்டி,
குளமாகத் தேங்கிக்
குதிரை குளித்தேறி—

முந்நூறு பார்ப்பாரும்
முழுகிக் கரைசேர்ந்து
ஐந்நூறு பார்ப்பாரும்
அமுதுண்டு கைகழுவி

குட்டை நிறைந்து
குழந்தைகுஞ்சு குளித்தேறி—
வாய்க்காலாய் ஓடி
வழிப்போக்கர் சந்திசெய்து

இஞ்சிக்குப் பாய்ந்து
இருவாட்சி வேரோடி
மஞ்சளுக்குப் பாய்ந்து
மருதாணி வேரோடி—

இப்படியாக எங்கெல்லாமோ ஓடிற்றும் கண்ணீர் வெள்ளம்.

இதைத் தாய் சொல்லி வரும்போது, குழந்தையும் உண்மையாகவே சற்றுக் கண்ணயரத் தொடங்கிவிட்டான். தாய் இதைக் கவனித்தாள். தொட்டிலாட்டிய கைக்கும், பாடல் பாடித் தாலாட்டிய நாவுக்கும் சிறிது ஓய்வு வேண்டாமா? மணம் நிறைந்த இருவாட்சிக் கொடிக்கும் மருதோன்றி மரத்துக்கும் வேரோடிப் பாய்ந்து வருகிற கண்ணீரானது, அவற்றைக் கடந்து இப்பால் வந்தவுடனே, அப்படியே நின்றுவிடுகிறது.

தாழைக்குப் பாய்கையிலே
தளும்பின தாம் கண்ணீர்,
வாழைக்குப் பாய்கையிலே
வற்றினதாம் கண்ணீர்.

கண்ணீர் நின்று அழுகையும் நின்றவுடனே, தாலாட்டும் நிற்கவேண்டியதுதானே?

## 7. காது குத்தல்

குடும்பத்தில் நடக்கிற சிறு சிறு நிகழ்ச்சிகள்கூட, தாலாட்டுப் பாடலில் இடம்பெற்று விடுகின்றன. பாடிப் பாடிப் பழகிய தாயின் நாவில்வரும் சொற்கள் சொல் நயம் மட்டுமின்றிப் பொருள் நயமும் சிறந்து வெளிப்படுவதைக் காண்கிறோம். செந்தமிழும் நாப்பழக்கம் அல்லவா ?

குழந்தைக்குக் காதுகுத்துதல் சாதாரணமான ஒரு நிகழ்ச்சி. அந்தநிகழ்ச்சியை எதிர்பார்த்துத் தாய் பாடுகிறாள் :

> கண்ணான கண்ணனுக்குக்
> காதுகுத்த வேணுமிப்போ
> மண்ணில்லா வெல்லம்
> மறுவில்லாப் பச்சரிசி
> கண்ணில்லாத் தேங்காய்
> கணுவில்லாச் செங்கரும்பு
> கொண்டுவா அம்மானே—என்
> குஞ்சரத்தின் காதுகுத்த
> வாங்கி வா அம்மானே—என்
> வரிசை மகன் காதுகுத்த.

உணவுப் பொருள் எதுவுமே நல்ல பொருளாகக் கிடைப்பது அரிதாகிவிட்டது. நாகரிக முன்னேற்றம் ஏற்பட ஏற்பட, பொருள்களின் சுத்தம் என்பது பின்னுக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறது. நல்ல எண்ணெய் என்று சாப்பிடுவது, எள்ளிலிருந்து எடுத்ததல்ல, பாதிக்குமேல் கடலை எண்ணெய். வெண்ணெய் அல்லது நெய் என்று வாங்குவது முழுமையுமே செயற்கையான தாவர நெய் என்று சொல்லுகிற வனஸ்பதி. அரிசி மூட்டையில்தான் எவ்வளவு மணல் !

இந்தச் சூழ்நிலையில் வாழ்கிற நாம், மண்ணில்லா வெல்லம் வேண்டுமென்று தாய் சொல்லுவதை ஆமோதிப் போம். கவனத்தோடு காய்ச்சி எடுத்த வெல்லமானல் அதில் மண் இருக்காது. அதேபோல, தாய் வேண்டுவது, கணுவில்லாத செங்கரும்பு. கரும்பின் கணுவில் சாறு இருக்காது. சிவப்பிரகாச சுவாமிகளின் தம்பியருள் ஒருவர், தம் தமையனும் தம்பியும் சிறந்த புலவர்கள், தாம் அத்துணைச் சிறப்புடைய புலவர் அல்லர் என்பதைக் ' கரும்பில் கணு நிகர்த்தேன் யான்' என்று குறிப்பிடுகிருர். கரும்பில் மேலும் கீழும் சுவைமிக்க சாறு: கணு மட்டும் சுவை அற்றது, அல்லது சுவை குறைவானது. மெல்லுவதும் கடினம். தாய்வேண்டுவது இங்கு,கணுவில்லாத செங்கரும்பு. கணுவில்லாத கரும்பு என்ருல், கணுக்கள் குறைவு என்பது பொருள் ; சுவையற்ற பாகம் குறைவு என்பதே கருத்து.

வளம் குறைந்த நிலத்தில் பயிரான கரும்பில் கணுக்கள் நெருக்கமாயிருக்கும். கரும்பு நீண்டு ஓடியிராது. இங்கு தாயின் கருத்து, நீண்டுள்ள கணுவாதலால், அக்கரும்பு சுவை மிகவும் உடையது என்பது மட்டுமல்ல; நிலமும் மிக்க வளமுடையது என்பது பொருளாகிறது.

## 8. எங்கிருந்து வந்தாய்?

ஒவ்வொரு தாய்க்கும் தான் பெற்ற பிள்ளை தெய்வப் பிறவி என்ற நினைப்பு. இப்படிப்பட்டதொரு நினைப்பு இருப்பதால்தான் எந்த நிலையிலுள்ளவருக்கும் வாழ்க்கையில் இன்பமும் பெருமிதமும் சாந்தியும் ஏற்படுகிறது.

பிள்ளைக் கலி தீர்ந்த தாய், இத்தகைய ஒரு பெருமித உணர்ச்சி பொருந்திய கருத்துக்களை மனத்தில் கொண்டு பாடுகிறாள் :

முத்தென்ற முத்தோ—நீ
முதுகடலின் ஆணிமுத்தோ
சங்கீன்ற முத்தோ—நீ
சமுத்திரத்தின் ஆணிமுத்தோ
தெற்கே விளைந்த முத்தோ—நீ
தெய்வானை கோத்த முத்தோ
வடக்கே விளைந்த முத்தோ—நீ
வள்ளியம்மை கோத்த முத்தோ !

தெற்குக் கடலில் முத்துக் குளிப்பது உண்டாதலால், தெற்கேயுள்ள முத்தைக் குறிப்பிடுவது உண்மைக்குப் பொருந்தும். தெய்வானையைக் குறிப்பிட்டவுடன், வள்ளி நினைவு வருமாதலால், மோனைக்குப் பொருத்தமாக வடக்கும், வள்ளியம்மை பெயரும் தாமாகப் பாட்டில் வருகின்றன.

கோக்காத முத்தோ—நீ
குறத்தி கைத் தாவடமோ

பேரால் பெரியமுத்தோ—நீ
  பெரியவர்கள் ஆண்ட முத்தோ
நற்பவழம் கெட்டி முத்தோ
  நல்லவர்கள் ஆண்ட முத்தோ!

இவ்விதமாக முத்தும் பவழமும் முடிந்தபின்னர், சில பறவைகள் நினைவில் வருகின்றன. பறவை என்று செல்லமாகத் தான் குழந்தையை விளித்துக் கேட்பதாகவும், அக் குழந்தை விடைகூறுவதாகவும் இனிப் பாடல் வருகிறது.

தாய்கேட்கிருள் :

மாடப் புருவோ—நீ
  மறுவில்லாச் சந்திரனே—என்
மாடப் புருவே—நீ
  மழைக்கெல்லாம் எங்கிருந்தாய் ?

குழந்தை விடைகூறுகிருன் :

மணமுடைய சொக்கருட
  மண்டபத்தின் மேலிருந்தேன்.

வின விடை இரண்டுமே தாயின் கூற்றுக்கள்.

கூவும் புருவோ—நீ
  குறைவில்லாச் சந்திரனே—என்
கூவும் புருவே—நீ
  குளிர்க்கெல்லாம் எங்கிருந்தாய் ?

குணமுடைய சொக்கருட
  கோபுரத்துக் குள்ளிருந்தேன்.

பறக்கும் சிறு குருவி—பகல்
  அந்திபட்டால் எங்கிருந்தாய் ?

மாசி மறைந்திருந்தேன்
மழை மாசி யுள்ளிருந்தேன்
வருந்திய நாளெல்லாம்
வளர் பிறையி னுள்ளிருந்தேன்
தேடிய நாளெல்லாம்
தேய் பிறையி னுள்ளிருந்தேன்
திங்கள் மறைந்திருந்தேன்—நீ
தேடியநாள் இங்குவந்தேன்.

இந்த வரிகளைக் காணும்போது, " பிறைச் சந்திரன் " என்ற பாடல் தொகுதியில் ரவீந்திர நாத தாகுர் எழுதியுள்ள ஒரு பாடல் நமக்கு ஞாபகம் வரும்.

குழந்தை தாயை நோக்கிக் கேட்டது : " அம்மா நான் எங்கிருந்து வந்தேன் ? எங்கே என்னைக் கண்டெடுத்தாய் ?"

புன்னகை பொலிய, ஆனந்தக் கண்ணீர் பெருக, குழவியை மார்போடு அணைத்தபடி, தாய் கூறுவாள் : " கண்ணே, என் இதயத்தின் ஏக்கமாக நீ மறைந்திருந்தாய்.

என் பிள்ளைப் பருவ விளையாட்டுப் பொம்மைகளில் நீ மறைந்திருந்தாய். காலைதோறும் மண்ணால் பிள்ளையாரை நான் பிடித்து வைத்த ஒவ்வொரு தடவையும் உன்னையே நான் செய்தும் கலைத்தும் வந்தேன்.

எங்கள் குலதெய்வமாக நீ கோயில் கொண்டிருந்தாய். குலதெய்வத்தைக் கும்பிட்டபோது, உன்னையே நான் கும்பிட்டேன்.

என் ஆசைகளிலும் பாசங்களிலும், என் வாழ்விலும், என் அன்னையின் வாழ்விலும், நீ வாழ்ந்து வந்திருக்கிறாய்.

நித்தியமான நம் குலதேவதையின் மடியிலே கணக்கற்ற காலம் நீ கண் வளர்ந்தாய்.

பெதும்பைப் பிராயம் கடந்து என் இதயமலர் இதழ் விரிந்தபோது, நீ அதைச் சூழ்ந்த வாசமாக நின்றாய்.

கதிரவன் உதிக்குமுன் காணும் அருணன் ஒளிபோல, உனது மென்மை எனது மங்கைப் பருவத்தில் மலர்ந்து நின்றது.

விண்ணின் அருமருந்து, அருணோதயம் ஆகிய நீ உலக வாழ்வாகிய நதியிலே மிதந்து வந்து என் இதயத் திட்டிலே தங்கினாய்.

உனது முகத்தைக் காணுந்தோறும் என் உள்ளம் மயங்குகின்றது. எங்குமுள்ள நீ எனக்குச் சொந்தமானாய்.

"உன்னை இழக்க நேருமோ என்ற அச்சத்தால் உன்னை மார்போடு அணைத்திருக்கின்றேன். என் மெல்லிய கைகளில் உலகின் அரும்பொருளான நீ வந்து சிக்கியது, என்ன மாயம்!"

## 9. ஆழ்வார் பாடிய தாலாட்டு

இறைவன் மனித உயிர்களைப் படைத்தபோது அவற்றை ஆண், பெண் என இருபாலாகப் படைத்தான். உடல்வன்மை, மனவுறுதி, உழைப்பு ஆகிய வலிமைக்கான இயல்புகளை ஆடவனிடம் அமைத்தான். இரக்கம், பராமரிப்புத்திறன், இனிமை போன்ற மெல்லியல்புகளைப் பெண்ணிடம் அமைத்தான். இந்த இயற்கை யமைப்பின் பயனாக, மக்கள் வாழ்க்கையிலே குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆடவனுக்கு ஏற்பட்டது. அக் குடும்பத்தைப் பேணுகின்ற தனி உரிமை பெண்ணுக்கே சொந்தமாகி விட்டது.

பேணுகின்ற தனி உரிமை பெற்றுள்ள பெண்ணிடத்திலே, இரக்கமுடைய நெஞ்சும், இன்முகமும், பொறையும் குடிகொண்டிருக்கின்றன. மக்கள் இனத்தைப் பெருக்குவதற்கான மகவு அவளிடத்தே தோன்றி, பெண்மையின் பெரும்பயனாகிய தாய்மை நிலையை அவளுக்கு அளிக்கும் போது, தான் ஈன்ற குழந்தையினிடத்திலே அவளுக்கு அன்பு ஊற்றெடுத்துப் பெருகுகிறது. அவ்வன்பு காரணமாக, குழந்தைக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யும் போது, அது தரும் இன்னல்களை யெல்லாம் பொறுத்துக் கொள்ளவேண்டி வருகிறது. தனக்கு என்ன வேண்டும் என்பதைச் சொல்லால் தெரிவிக்க அறியாத சிறு மகவு, எதற்கெடுத்தாலும் அழக் கற்றிருக்கிறது. எதற்காக அழுகிறதென்பதை நேரத்தை யொட்டித் திட்டமாக அறிந்து அதற்கேற்ற பணிவிடை செய்வது, தாயிடம் அமைந்துள்ள அருங் கலைகளில் ஒன்று என்றே சொல்லவேண்டும். அழுத குழந்தையை எடுத்துத் தாய் பாலூட்டிய பின்னும், அது சிறிது முனகிக்கொண்டேதான் இருக்கிறது. இந்தச் சிறு

முனகலையும் நிறுத்த வேண்டி, அவள் குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தி ஏதேனும் பாட்டுப் பாடுகிருள்.

பாட்டுப் பாடினல் பாட்டைக் கேட்கிற சுகத்திலே ஈடுபட்டு இளங் குழந்தையானது மெய்ம்மறந்து உறங்கிப் போகும். இப்படிப் பாடுகிற பாட்டு, சிறப்பாக ஏதேனும் சொல்லமைந்த பாடலாகத்தான் இருக்கும் என்பதில்லை. பெரும்பாலும் வெறும் ஒலியாகவே இருப்பதுண்டு. நாவை அசைத்து, இனிய ஒலி எழுப்பினலே போதும்: குழந்தை கேட்டு உறங்கிவிடுகிறது. இவ்வாறு நா அசைத்தலும் பாட்டுப் பாடுதலுமே தாலாட்டு என்று வழங்கிவருகின்றன. (தாலு ஆட்டு, தாலாட்டு ; தாலு - நா.)

உண்மையான பக்தி பூண்ட அடியவர்கள் இறைவனிடத்திலே எத்தனையோ விதங்களில் நெருங்கி உரிமை பாராட்டிச் சொற்களாலே குலவுகிருர்கள். ஆண்டான், அடிமை என்ற தொடர்பை வைத்துக்கொண்டு தாம் அடிமையாயிருந்து, தமக்கு அவனுடைய அருள் வேண்டுமென்று அடியவர் அந்த ஆண்டவனிடத்திலே முறையிடுவது ஒரு வகை. இறைவனிடத்திலே நெருங்கிய தோழமை பூண்டு, அந்த பாவத்திலே, தமக்கு வேண்டுவனவெல்லாம் தரும்படி அவனைக் கேட்பது மற்ருெரு வகை. எப்பொருட்குந் தலைவனை இறைவனை நாயகனைப் பாவித்துத் தம்மை நாயகி நிலையிலே வைத்துக் குலவிப் பாடுவது இன்னும் சிறப்பானது. ஆனல், ஸ்ரீவிலிபுத்தூர்ப் பட்டரான விண்டு சித்தர் என்று வழங்கிய பெரியாழ்வார் இந் நிலைகள் அனைத்திலும் மேலானதோர் அனுபவத்தைத் தமிழ்ப் பாடல்கள் மூலமாக நமக்குக் காட்டுகிருர்.

பக்தியினலே கனிந்த அவருடைய இதயமானது தாய்மை நிலையை அடைந்திருக்கிறது. திருமாலைப் பற்றி எண்ணுந்தோறும், அவருள்ளத்திலே அவன் ஆயர்பாடியில் அசோதை பெற்றெடுத்த பூவைப் புதுமலர் வண்ணனகிய குழந்தைக் கண்ணன் கோலத்தோடேயே தோற்றுகிருன்.

தாயானவள் குழந்தையைக் கண்டுவிட்டால் கொஞ்சுவ தற்குக் கேட்கவா வேண்டும்? ஆயர்பாடியில் கண்ணன் அவதரித்த சிறப்பையே பல பாடல்களால் பாடிப் பாடி இன்புறுகிறார் ஆழ்வார். பிறகு அத்தெய்வக் குழந்தையின் உருவ அழகை உள்ளங்கால் தொட்டு உச்சிவரைப் பாதாதி கேசமாகப் பார்த்துப் பார்த்து அனுபவிக்கிறார்; தம் கற்பனையில் ஆயர்பாடிப் பெண்கள் அனைவரையும் அழைத்து அவ்வழகை ஒவ்வொன்றாகக் காட்டுகிறார்.

இவ்வாறு அவர் காட்டி வருகின்ற நிலையிலே, குழந்தைக் கண்ணன் அழுகின்றான் என்ற ஓர் எண்ணம் தோன்றிவிடுகிறது. ஆயர்பாடியிலே அளவற்ற மாயங்கள் செய்த அம்மாயன் அழுவதாக ஆழ்வார்தம் தாயுள்ளம் எண்ணியதில் வியப்பில்லை. அழுகையை ஓயப்படுத்துவதற்கு எளிதான வழி இல்லாமலா போய்விட்டது? உடனே அருமையான தொட்டில் ஒன்றை அங்கே கொண்டு வருகிறார் ஆழ்வார். தொட்டில் யார் தந்தது? மாயக் கண்ணனுக்கு யாரால்தான் தொட்டிலமைக்க முடியும்? உலகனைத்தையும் படைத்த பிரமனே, படைத்துப் படைத்துத் தேர்ந்த தன் கைகளால், அழகிய சிறு தொட்டிலை ஆணிப்பொன்னாலே செய்து, அதில் மாணிக்க மும் வயிரமும் இழைத்து, கொண்டுவந்து தருகிறான். மாயம் வல்ல கண்ணன் அதில் உறங்குவானா? அவனோ, உலகெல்லாந் தனது ஓரடியால் அளந்த பெரியவனாயிற்றே? எந்தத் தொட்டிலில் அவனைக் கண்வளரச் செய்யமுடியும் என்றெல்லாம் ஆழ்வார் அஞ்சவேயில்லை. அழகிய குறள் வடிவங்கொண்ட வாமனன் அல்லவா, இக்கண்ணன்? தொட்டிலிலே கண் வளர்வதற்கு என்ன தடை? ஆழ்வார் இப்படி அவனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுப் பாடுகிறார்:

**மாணிக்கங் கட்டி**
**வயிரம் இடைகட்டி**

ஆணிப்பொன் னாற்செய்த
வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப்
பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே!
தாலேலோ
வையம் அளந்தானே!
தாலேலோ.

தொட்டிலிற் கிடத்திய குழந்தைக்கு ஆழ்வார் பல அணி கலன்களைப் பூட்ட வேண்டுமென்று ஆசைகொள்கிறார். அவர் நினைத்த மாத்திரத்திலே தேவர்களெல்லாரும் ஓடிவந்து பற்பல அணி வகைகளையும் கொண்டுவந்து குவிக்கிறார்கள்.

சின்னஞ்சிறு காலில் அணிவதற்கேற்ற கிண்கிணி யொன்றை இந்திரன் தருகிறான். சங்கின் வலம்புரியென்ன, சேவடிக்கேற்ற பல கிண்கிணிகளென்ன, அங்கைக்கேற்ற சரிவளை என்ன, அரையிலணிவதற்கு நாண், தொடர்கள் என்ன - இத்தனையும் தேவர்கள் கொண்டுவருகிறார்கள். குபேரனுக்குச் சொல்லவா வேண்டும்? மார்பிலணிவதற்கு என்று மாலையும் ஐம்படைத் தாலியும் தருகிறான். கடல் வளங்களையெல்லாம் - முத்துமாலை, உயர்ந்த சாதிப்பவளம் அருமையான சங்குவளை ஆகியவற்றை - வருணன் கொண்டு வருகிறான். ஈசனும் அழகுமிக்க அணிகலன் ஒன்றை அனுப்புகிறான். அது, மணிகளும் ஒளிமிக்க மாதுளம்பூவும் தெழ்கும் இடைவிரவிக் கோத்த அணி.

இத்தனை அணிவகைகளையும் குழந்தைக்கு ஆழ்வார் தம் கற்பனையிலே பூட்டி 'அழேல், அழேல்' என்று தாலாட்டு கிறார். உலகமுற்றும் அளந்த அந்தக் குழந்தைக்கு என்ன குறைவு இருக்கப்போகிறது? எல்லாவற்றுக்கும் உடைய வனான குழந்தை அவன். எனவே, அழுவானேன்?

உடையார் கனமணியோ(டு)
ஒண்மா துளம்பூ
இடைவிரவிக் கோத்த
எழில் *தெழ்கி னேடு
விடையேறு காபாலி
ஈசன் விடுதந்தான்
உடையாய் ! அழேல் அழேல்
தாலேலோ
உலகம் அளந்தானே !
தாலேலோ.

இவ்வளவு பெற்றும், அம்மாயக் குழவி தன் அழுகையை நிறுத்தவில்லை, மேலும் அழுகிருன். அவனுக்கு ஏதோ குறையாயிருக்கிறது. என்னதான் ஆடையும் அணிகலனும் பிறர் கொண்டுவந்து தந்தபோதிலும், அவன் மனத்திலே திருப்தி பிறக்கவில்லை. அவனுக்கு உரியவளான திருமகள் அனுப்பிய பொருள் ஒன்றும் காணவில்லையே! திருமகளிடத்து அவனுக்குள்ள ஈடுபாட்டை நாம் நன்ருக அறிவோம். மார்பிலல்லவா அவளைத் திருமால் வைத்திருக்கிருன்! அவ்வளவு அருமை பொருந்திய திருமகளின் அன்புக்கு அடையாளமான பொருள் ஒன்றும் இன்னும் வரவில்லையென்ருல், மாயன் பொறுப்பானு? இதனுலேதான் மீண்டும் அவன் அழுகிருனும்.

திருமகளும், தன் காதலன் பிரிவைப் பொறுப்பாளா ? உடனே விரைந்து அன்போடு ஒரு கையுறை அனுப்புகிருள், ஆழ்வார் தொட்டிலிற் கண் வளர்த்திய மாயக் கண்ணனுக்கு. அது என்ன பொருள் ? இந்திரனும்

*தெழ்கு - இடையில் கட்டும் ஓர் அணிகலன்.

குபேரனும் வருணனும் அனுப்பிய அணிகலன்கள் போல ஏதேனும் அணிகலனு ? அன்று.

இறைவழிபாட்டுக்கு என்ன வேண்டும் ? ஆடம்பரமான கோயிலும் விரிவான பூஜை முறைகளும் மேள வாத்தியங்களும் இசைப் பாடல்களுமா? பால், நெய், தேன் முதலிய அபிடேகப் பொருள்கள், பழம் பலவகை அடிசில் முதலிய நைவேத்தியங்கள், அழகான மணம்மிக்க மலர்கள், மலர்களாலான அலங்காரங்கள் - இவைகளா ? இவைகளைச் செய்வார் செய்க ; ஆனுல் எல்லோருக்கும் இவை வேண்டுவன அல்ல. உண்மையான அன்பு - பக்தி - இது மட்டும் ஒருவன் அகத்திலே இருக்குமானுல் இவையொன்றும் வேண்டாம். வெறும்புல் இருந்தால் போதும் ; பச்சை இலை இருந்தாலும் போதும். அதுகொண்டு இறைவனை வழிபடலாம். 'யாவர்க்குமாம் ஒரு பச்சிலை' என்கிருர் அடியவர். அப்பச்சிலைக்கு அவன் வசப்பட்டுவிடுவான்.

கிருஷ்ண துலாபாரம் என்ற சரித்திரம் இவ்வுண்மையை உணர்த்துகிறது. சத்தியபாமையின் அளவற்ற பொன்னுக்கும் மணிக்கும் ஆபரணத்துக்கும் கட்டுப்படாத கிருஷ்ணன், ருக்குமணியின் அன்புக்கு அடையாளமான ஒரு சிறு துளசி இலைக்குக் கட்டுப்பட்டுவிட்டான். எனவே, அவ்வளவு அன்பையும் உட்கொண்டுள்ள அத்துளசி இதழின் அருமைதான் என்ன ?

ஆழ்வாருடைய குழவிக் கண்ணனுக்கு, இத்துளசி இதழ்களால் ஒரு மாலை கட்டித் திருமகள் அனுப்புகிருள். இதன் அருமையை யார்தான் சொல்லமுடியும்? (துளசியைத் தமிழிலே திருத்துழாய் என்று அருமை பாராட்டிச்சொல்லுகிறேம்.) காட்டிலே தழைத்த துழாயானபடியால், அருமையான மணமெல்லாம் அதனிடத்திலே பொருந்தியிருக்கிறது. மேலும், அந்த மாலையிலே, திருமகளுடைய கை வேலையின் திறனெல்லாம் அமைந்திருக்கிறது.

கானார் நறுந்துழாய்
கைசெய்த கண்ணியும்
வானார் செழுஞ்சோலைக்
கற்பகத்தின் வாசிகையும்
தேனார் மலர்மேல்
திருமங்கை போத்தந்தாள் ;
கோனே ! அழேல் அழேல்
தாலேலோ
குடந்தைக் கிடந்தானே!
தாலேலோ.

காத்தற் கடவுளாகிய திருமாலுக்கு உலகத்திலுள்ள எல்லாச் செல்வமும் உரியது ; அவனே செல்வத்துக்கு நாயகன். திருமகளுக்கு அவன் நாயகன் என்பது போலவே, உழவுச் செல்வம் அனைத்துக்கும் இடமாயிருக்கிற பூமியும் அவனுக்கே தேவியாகிறாள் என்று நம்மவர்கள் கொண்டிருக்கிறார்கள். திருமகள் கண்ணனுக்குத் தன் கையுறையை யனுப்பியதும், பூதேவி தானும் சில கையுறைகளை அனுப்புகிறாள். கச்சு, சுரிகை, பொன்வளை, சுட்டி, தாளில் அணிவதற்காகப் பொற்பூக்கள் என்றெல்லாம் பல பொருள்களை அச்சுதனுக்கென்றே அவள் தருகிறாள் :

கச்சொடு பொற்சுரிகை
காம்பு கனகவளை
உச்சி மணிச்சுட்டி
ஒண்தாள் நிரைப்பொற்பூ
அச்சுதனுக் கென்று
அவனியாள் போத்தந்தாள்
நச்சு முலையுண்டாய் !
தாலேலோ
நாராயணா ! அழேல்
தாலேலோ.

திருமகளையும் புவிமகளையும் இவ்வாறு எண்ணியும் அழைத்தும் தாலாட்டிய ஆழ்வாருடைய கலையுள்ளத்திலே, இந்தச் சக்திகளுக்கெல்லாம் மூலசக்தியாகிய அன்னை பராசக்திக்கு இடமில்லாமற்போகவில்லை. கற்பனையிலே அழுகிற இளங்கண்ணன், அழுகையை நிறுத்திச் சிறிது பொழுது உறங்கவேண்டும். உறங்கி விழித்தெழுந்தவுடனே அவனை நீராட்ட வேண்டுமென்ற கருத்தோடு பராசக்தியானவள் வந்து நிற்கிறாள். குழந்தையின் உடம்பெல்லாம் திமிர்ந்து குளிப்பாட்டுவதற்கேற்ற நானப்பொடியும் மஞ்சளும் வைத்திருக்கிறாள். நீராட்டியபின் கண்ணுக்கு அழகுபெற இடுவதற்கான அஞ்சனமும் நெற்றியில் திலகமிடுவதற்கான சிந்துரமும் கொண்டுவந்திருக்கிறாள்.

இவ்வளவையும் கற்பனை செய்துகொண்டு, 'ஐயா, அழேல்' என்று ஆழ்வார் கண்ணனைத் தாலாட்டுகிறார் :

**மெய்திமிரும் நானப்**
**பொடியோடு மஞ்சளும்**
**செய்ய தடங்கண் ணுக்(கு)**
**அஞ்சனமும் சிந்துரமும்**
**வெய்ய கலைப்பாகி**
**கொண்டுவளாய் நின்றாள்**
**ஐயா ! அழேல் அழேல்**
**தாலேலோ**
**அரங்கத் தணையானே !**
**தாலேலோ.**

ஆழ்வார் தந்த தாலாட்டானது பின்னே தமிழிலக்கியம் விரிந்து வளர்வதற்கு எவ்வளவோ உதவி யிருக்கிறது என்பதைக் காண்போம். பின்னாலே வந்த குலசேகராழ்வார், கணபுரத்தி லெழுந்தருளியுள்ள காகுத்தனைக் கண்டு வழி பட்டபோது, அக்காகுத்தனை இராமன் சரிதத்திலே ஈடு

பட்டு, அச்சரிதத்தையே பத்துப் பாடல்கொண்ட ஒரு தாலாட்டுப் பதிகமாகப் பாடியருளினர்.

மன்னு புகழ்க் கௌசலை தன்
மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள்
சிந்துவித்தாய் செம்பொன்சேர்
கன்னி நன்மா மதிள் புடைசூழ்
கணபுரத் தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே
இராகவனே தாலேலோ.

பாராளும் படர் செல்வம்
பரதநம்பிக் கேஅருளி
ஆராஅன் பிளையவனேடு
அருங்கானம் அடைந்தவனே
சீராளும் வரைமார்பா
திருகண்ண புரத்தரசே
தாராளும் நீள்முடி என்
தாசரதி தாலேலோ.

இந்தப் பாடல்களில் ஈடுபடாதோர் யார் ?

பின்வந்த கவிஞர்களுடைய புதிய பிரபந்த வகைகளில் ஒன்றுன பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தத்தில் 'தாலப் பருவம்' என்ற ஒரு பருவத்தை அமைத்து, குழந்தையைத் தாலாட்டு வதையே அப் பருவத்துக்குரிய பொருளாகக் கொண்டார்கள். இதுவுமன்றி, தெய்வங்கள்மீதும் ' தாலாட்டு ' என்ற பெயரோடு பாடப்பெற்ற நூற்றுக்கணக்கான தாழிசைகளைக் கொண்ட பிரபந்தங்கள் பின்னர்த் தோன்றி யிருக்கின்றன. இவ்வளவையும் ஒருபுடை தழுவி, நாடோடிப் பாடலாகவும் வாய்மொழியாகவும் நம் தாய்மார் நாவில் வழங்கும் தாலாட்டுப் பாடல்களுக்குக் கணக்கில்லை.

இவ்விதமாக, தாம் தாயாயிருந்து முழுமுதற் பொருளான இறைவனையே குழந்தையாக ஏந்தியெடுத்துத் தாலாட்டுப் பாடி, அதன் மேல் அடியவர் உள்ளமெல்லாம் அன்புவெள்ளம் கரை கடந்தோடவும், தமிழ் இலக்கியம் பல துறையிலும் விரிந்து வளரவும் செய்து புதுவழி வகுத்த உத்தம பக்தரான ஆழ்வாரைத் தமிழுலகமானது "பெரியாழ்வார்" என்று ஆராமை மீதூர வியந்து போற்றுவதல்லது, வேறென்ன செய்யக்கிடக்கிறது?

## 10. பிள்ளைத் தமிழில் தாலாட்டு

**பி**ள்ளைத் தமிழ் என்ற பிரபந்தங்கள் தமிழிலே எத்தனையோ உண்டாகி இருக்கின்றன. கடவுளையே இளம் பிள்ளையாக்கி, அந்தப் பிள்ளையைப் பலவாறு போற்றிக் கொண்டாடுவதில் மிகுந்த மன உல்லாசம் இருக்கிறது.

பிள்ளைத்தமிழ் பத்துப் பகுதிகளாக இருக்கும். இதில் மூன்றும் பகுதி, தாலப் பருவம் எனப் பெயர்பெறும்; அதாவது குழந்தையைத் தாலாட்டிக் கூறும் பருவம். குழந்தைக்கு வயது எழு மாதம் ஆனபோது இப்பருவம் பாடவேண்டும் என்பது மரபு. தாலப் பருவத்திலே தெய்விகக் குழந்தைகளைத் 'தாலோ தாலேலோ' என்று தாலாட்டிக் கூறுகின்ற தமிழ் நூல்களுக்குக் கணக்கே இல்லை.

பிள்ளைத்தமிழில் ஆறுவது பருவம் வருகைப் பருவம் என்பது; குழந்தையை 'வருக வருக' என்று அழைப்பதைக் கூறுகின்ற பகுதி. பழனியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான்மீது கவிஞரொருவர் 'பழனிப் பிள்ளைத் தமிழ்' பாடினர். பொதுவாகப் பிள்ளைத்தமிழில் நூறு பாடல்கள் இருக்கும். ஆனல் இவர் பாடிய பிள்ளைத்தமிழில் முப்பது பாட்டுக்களேயுள்ளன. இதன் பத்துப் பருவங்களுள் ஒன்றுகிய வருகைப்பருவத்தில் மூன்றே பாடல்கள் இருக்கும்.

தால்ாட்டுப் பாடல்களை இவர் மிகுதியும் அனுபவித்திருக்கிறுர். அது காரணமாக, பழனிக் குமாரக்கடவுளை 'வருக' என்று அழைக்கும் போதுகூட, இவர் தாலாட்டை மறக்க முடியவில்லை. 'வருகை'க்குரிய மூன்று பாடல்களில் ஒன்றைத் தாலாட்டாகவே பாடியிருக்கிறுர்.

சாதாரணமாக ஓர் அதிகாரி என்றாலே, உலகத்தார் எவ்வளவோ வந்தனையும் வழிபாடும் செய்கிறார்கள். அப்படியானால் அரசனுக்கு எவ்வளவு வழிபாடு செய்ய வேண்டும்? இவ்வுலகம் மட்டுமல்லாமல், வானுலகமென்ன, மற்ற அண்டங்களென்ன - யாவற்றுக்கும் முதல்வனாயுள்ள பரம்பொருளுக்கு உலகத்தவர் என்ன வந்தனை வழிபாடு செய்யவேண்டும்? எங்குமே அவன் சன்னிதி. ஆகவே, அவன் சன்னிதியில் நில்லாமலோ, அவனைக் கண்டு வணங்காமலோ, எவர்தாம் இருக்கமுடியும்?

சீரார் நலஞ்சேர் பூவுலகில்
 தேவா சுரரில் மற்றையரில்
தினமும் உனது கொலுக்காணச்
 செல்லாதார் ஆர்?

காணிக்கை செலுத்தாதவர்கள் தாம் யார்? வந்து வணங்குவதற்குச் சமயம் எப்போது வாய்க்கும் என்று காத்திருந்து வாராதவர்கள் யார்? ஒருவருமே இல்லை.

திறை வளங்கள்
தாராதார் ஆர்? உனது பதம்
 தனையே வணங்கித் தொழவேண்டித்
தழுவாதார் ஆர்? எவ்வேளை
 சமயம் கிடைக்கும் என நினைந்து
வாராதார் ஆர்? பணிவிடைகள்
 வரிசைப்படியே நடத்தாதார் ஆர்?

என்று கவிஞர் பழனிக் குழந்தைக் குமாரக் கடவுளை நோக்கிக் கேட்கிறார்; ஆர் ஆர் என்று கேட்பதானது, ஆரார் என இணைந்து, தாய்மார் தாலாட்டும்போது ஒலிக்கும் ஒலியாகிய 'ஆராரோ ஆராரோ' என்ற ஒலியைத் தந்து, தாலாட்டு என்ற எண்ணத்தையும் உண்டுபண்ணுகிறது.

இங்ஙனம் பாடும்போது, தாலாட்டு என்ற நினைவும் ஒரு பக்கம் கவிஞரைக் கவருகிறது. இந்த நினைவோடு பார்த்தால் பாட்டு முழுவதுமே ஓர் அழகிய தாலாட்டாயிருப்பதை நாமும் கண்டு அனுபவிக்கலாம்.

சீரார் நலஞ்சேர் பூவுலகில்
தேவாசுரரில் மற்றையரில்
தினமும் உனது கொலுக்காணச்
செல்லா தாரார்? திறை வளங்கள்
தாரா தாரார்? உனது பதந்
தனையே வணங்கித் தொழவேண்டித்
தழுவா தாரார்? எவ்வேளை
சமயங் கிடைக்கும் என நினைந்து
வாரா தாரார்? உனதருளை
வாழ்த்திப் புகழ்ந்து துதிக்க மனம்
வசியா தாரார்? பணிவிடைகள்
வரிசைப் படியே நடத்தாதார்
ஆரார் எனத்தா லாட்டு கின்ற
அரசே வருக வருகவே
அருள்சேர் பழனிச் சிவகிரிவாழ்
ஐயா வருக வருகவே!

# 11. தாலாட்டும் பள்ளும்

**தா**லாட்டுப் பாட்டிலே நம் கவிஞர்களுக்குள்ள ஈடு பாடு காரணமாக, எப்போது எப்போது அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்போதெல்லாம், எளிதாக அழகிய சிறு தாலாட்டொன்றைப் பாடிவிடுகிறார்கள். தாலாட்டுப் பாடல் உள்ளத்திலே எழுப்புகின்ற இன்பமான நினைவுகளும், பாடலின் சுகமுமே இப்படிப் பாடுவதற்குக் காரணங்கள்.

பள்ளுப் பாட்டிலே பொதுவாக நாம் தாலாட்டைப் பார்ப்பதில்லை ; தாலாட்டுக்கு அதில் சந்தர்ப்பமும் குறைவு. ஆயினும், நம்முடைய கவிஞரொருவர் சந்தர்ப்பத்தைச் சிருஷ்டித்துக்கொள்ளுகிறார்.

பள்ளியர் பலர் மிக்க உல்லாசத்தோடு நடவு நட வருகிறார்கள். இளம் பள்ளியர், முதிய பள்ளியர், அன்றி இடுப்பிலே குழந்தையை இடுக்கியபடியே வந்த பள்ளியர் - என இவர்கள் பலவகை. இளையவளும் முதியவளும் வயற் கரையை யடைந்தவுடன், நேரே சேற்றில் இறங்கிவிட முடியும். ஆனல் குழந்தையோடு வந்தவள் என்ன செய்வாள் ? குழந்தையை எங்கு விடுவாள் ?

நாம் தெருவிலே பார்க்கிறோம் அல்லவா ? - சென்னைக் கார்ப்பொரேஷன் ஊழியர்களாயுள்ள பெண்கள் சாலைகளில் மராமத்து வேலை செய்யும்போது, சாலையோரமுள்ள மரங்களில் ஏணைகட்டி அதில் குழந்தைகளைக் கிடத்தி ஆட்டி உறங்க வைத்துவிட்டுத் தங்கள் வேலைகளைக் கவனிக்கிறார்கள். குருகூர் ஆழ்வார் பண்ணையில் நடவு நடவந்த பள்ளியரும் இப்படியே செய்கிறார்கள்.

வயல் வரப்புக்களிலும் வாய்க்கால் கரைகளிலும் வேம்பு முதலிய மரக்கிளைகளுக்குப் பஞ்சமா ? ஏணை

கட்டி அதில் குழந்தையைப் படுக்கவைத்துத் தாய்மார் தாலாட்டுகிறார்கள் என்று கற்பனை செய்கிறார் கவிஞர் : இது உண்மையில் கற்பனையே அன்று ; மெய்யாகவே நடக்கிற நிகழ்ச்சிதான்.

இரண்டு பள்ளியர் தாலாட்டுகிறார்கள். ஒருத்தியின் குழந்தை ஆண் குழந்தை ; மற்றவள் குழந்தை பெண் குழந்தை. எப்படித் தாலாட்டுகிறார்கள் என்பதை மாற்றி மாற்றிக் கேட்போம்.

பள்ளரும் பள்ளியரும், திருக்குருகூர் நம்மாழ்வாரிடத்தில் அளவற்ற பக்தியுடையவர்கள், பரம்பரையாக ஆழ்வார் பண்ணையில் பயிர்த்தொழில் செய்து வருபவர்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஒருத்தி பாடுகிறாள் :

**அண்டர்தொழு தென்குருகூர்**
**ஆழ்வார்க்கு வாய்த்த வயல்**
**எண்திசையும் பண்ணை பயிர்**
**ஏற்றப் பிறந்தானோ !**

அடுத்தவள் - பெண் குழந்தையை யுடையவள் - பாடுகிறாள் :

**அன்னதருத் தென்குருகூர்**
**ஆழ்வார் வளவயலில்**
**செந்நெல் நடவந்த**
**செல்வ மகளாரோ !**

ஆழ்வார் பண்ணையிலே தாங்கள் மகிழ்ச்சியோடு தொழில் செய்வதைப் போலவே தொடர்ந்து செய்வதற்கு ஏற்ற பிள்ளையும் பெண்ணும் பெற்றமை குறித்து இத் தாய்மார்களுக்கு என்ன மகிழ்ச்சி, என்ன உல்லாசம் ! மேழிச் செல்வமாகிய பெருஞ் செல்வத்தை ஈட்டுபவன் ஆதலால், பள்ளனை எப்படிச் சிறப்பித்தாலும் தகுமல்லவா ? பிள்ளையைப் பார்த்துச் சொல்கிறாள் பள்ளி :

**சேருடி சூழச்**
**சிறந்த குடை நிழற்ற**
**வீருய் முரசதிர**
**விளையாடுவான் மகனே.**

கோழைபடாத மேழிச் செல்வத்தைத் தேடுகின்ற பள்ளன், குடை நிழற்றவும் முரசதிரவும் விளையாடுவான் என்ருல், மிகையன்று.

இதை யொத்த பாவத்தில் மற்றவள் பாடுகிருள் :

***அரவணை யானைப் பரவும்**
**ஆழ்வார் வளவயலிற்**
**குரவையிட்டுக் களைபறிக்கும்**
**கோமளப் பெண்ணாரமுதோ.**

கோமளப் பெண் - ஆம். உலகமெல்லாம் உண்ண வேண்டும் என்பதற்காக, நடவுநட்டு, குரவையிட்டுக் களை பறிப்பவள் கோமளப் பெண்ணாரமுதுதான், சந்தேகமில்லை.

இப்படியெல்லாம் குழந்தையைப் பள்ளி எவ்வளவோ கொஞ்சியாயிற்று. சரி, ஆனல் இக்குழந்தையால் பண்ணைத் தலைவரான ஆழ்வாருக்குப் பயனுண்டா ?

கேட்பானேன்? எவ்வளவோ உண்டு, ஆழ்வார் அமுது செய்வதெல்லாம் இவன் விளைவித்துக் கொடுக்கின்ற உணவு தானே ? இந்த பாவத்தில் வருகிறது பாட்டு :

**வளஞ்சேர் குருகைமகிழ்**
**†மாறர் அமுதுசெய்யக்**
**களஞ்சியத்தில் நெல்லளந்து**
**கட்டப் பிறந்தானே.**

---

*அரவணையானைப் பரவும் ஆழ்வார் - திருமாலைப் பாடுகின்ற நம்மாழ்வார்.

†மாறர் - ஆழ்வார்.

சரி, ஆண் குழந்தைதான் ஆழ்வாருக்கு இப்படித் தொண்டு செய்வான். பெண் குழந்தை ?

மற்றவள் சொல்கிறாள். நெல் விளைந்தால் போதுமா ? அது களத்திலே கண்டுமுதல் பண்ணும்போது, சிந்தி மங்கிச் சீரழியாமல் பெருக்கிச் சேர்க்கவேண்டாமா ? இது பெண் செய்யவேண்டிய வேலை. வழக்கமாய் ஆண் செய்வதன்று. களத்திலே தன் பெண் ஆழ்வாரின் அமுதுக்குரிய நெல்லைப் பெருக்கிச் சேர்ப்பாள் என்ற எண்ணமே, தனக்குப் பெருவாழ்வையே சேர்த்துத் தந்ததுபோல இருக்கிறது இப்பள்ளிக்கு.

*மருவாரும் தண்ணிலஞ்சி
மாறர் களம் பெருக்கிப்
பெருவாழ்வு எனக்கு வரப்
பிறந்த மகளாரோ.

இங்ஙனமாகப் பள்ளியர் தங்கள் பிள்ளையையும் பெண்ணையும் தாலாட்டும் இச்சிறு தாலாட்டு, ஆழ்வாருக்கும் நமக்குமே பெரிதும் உவப்பான தாலாட்டு என்பதில் சந்தேகமில்லை.

---

*மருவாரும் தண் இலஞ்சி-மணம் பொருந்திய குளிர்ந்தசோலை.

இப் பாடல்கள் திருகூர்ப் பள்ளு என்ற சிறு பிரபந்தத்தில் உள்ளன.

# 12. நீலமயில் வாகனன்

சுமார் இருபது ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் பரத நாட்டியக் கலை புத்துயிர் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. குமரி முதல் இமயம் வரை, தமிழ் மக்கள் உள்ள இடமெங் கும் குழந்தைகள் இந்தக் கலையைக் கற்றுப் பரத நாட்டியமும் அபிநயமும் செய்கிறார்கள். தமிழ் மொழி அல்லாத பிறமொழிக்குரிய இந்திய மக்கள் மட்டும் அல்லா மல் அயல் நாட்டு மக்களும் கூட, இந்தக் கலையைக் கண்ணால் கண்டு வியந்து போற்றுகிறார்கள்; தாங்களும் கற்று இக் கலையில் வல்லவர்களாக முயல்கிறார்கள். இவ் வளவுக்கும் தோற்றுவாயாக இருந்தது சுமார் இருபத் தைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் கற்றவர் களிடை புதிதாக அறிமுகமும் அங்கீகாரமும் பெற்று வந்த ஸ்ரீமதி பாலசரசுவதியின் பரத நாட்டியம் என்பது அனை வரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை. டி. கே. சி. யவர் களுடைய இடைவிடாத பாராட்டுதலினாலும், கல்கி யவர் கள் எழுதி வந்த ஆனந்தவிகடன் பத்திரிகையின் பிரசாரத் தாலும், பரத நாட்டியக் கலை தமிழ் நாட்டில் பிரசாரம் அடைந்தது.

குறிப்பிட்ட சில பாடல்களுக்கு ஸ்ரீமதி பாலசரசு வதியின் அபிநயம் மிகவும் பிரசித்தம். இக்காலம்போல் அன்றி, அந்தத் தொடக்கக் காலத்தில், பாடல்கள் யாவும், ஒரு வகையில், வாழ்க்கையை உயர்த்துவனவாயும் தெய்வ பக்தியை ஊட்டுவனவாயும் இலக்கிய வுணர்ச்சியை வளர்ப் பனவாயும் இசையின் நயத்தை எடுத்து விளக்குவன வாயும் அமைந்திருந்தன. யாரும் எதுவும் பாடலாம் என்ற நிலை அப்போது இல்லை; புராதனமான இசை நுட்பமும்

இறை யுணர்ச்சியும் பொருந்திய பாடல்கள் மட்டுமே பரத நாட்டியத்துக்குப் பயன்பட்டன. அவ்வாறு வழங்கிய சிறந்த பாடல்களுள், முருகப்பெருமான் தாலாட்டாகிய "நீலமயில் வாகனனே" என்பது முக்கியமான ஒன்று. முருகப் பெருமான் திருவடியில் எல்லையற்ற பக்தி பூண்ட திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் போரூர் முருகனைத் தாலாட்டுகிறார்.

முருகனை வழிபடும் அடியவர்கள் "வேலும் மயிலும் துணை" என்பார்கள். உலகத்தில் நிலவும் அஞ்ஞான இருளைப் போக்கி ஞான ஒளியை வீசுவதாகிய சக்தி வேல் அவன் கையில் உள்ளது. வேல் என்றாலே ஞானத்தின் அடையாளம். அதை ஸ்தூலமான ஓர் ஆயுதமாகக் கொள்ளும்போது, அது நீண்ட இலையுடைய வேலாயுதமாய்க் காட்சி யளிக்கிறது. நீலநிறத்தோடு எங்கும் கவிந்திருக்கிற வானமும் நிலமும் சேர்ந்து ஒரு பெரிய மயில் வடிவமாகத் தோற்றுகின்றன. விசுவத்துக்கு நாயகனான முருகனுக்கு, அந்த மயில், வாகனம் என்பது நம் மக்களுடைய இயற்கை வழிபாட்டின் ஒரு தோற்றமே யாகும். மயிலைக் கண்ட வுடன், முருகனை அடி பணிந்து அவனுடைய கொடியில் அமர்ந்திருக்கும் பேறு பெற்ற கோழியும் நினைவு வருதல் இயல்பு.

இந்தக் குறிப்புக்கள் தூண்ட, தாலாட்டுப் பாடல் வருகிறது.

**நீலமயில் வாகனனே**
**நெட்டிலைவே லாயுதனே**
**கோலம்நிறை கோழிக்**
**கொடிபடைத்த சேவகனே.**

சிறு குழந்தைகளுக்குக் கோழியினிடம் உள்ள ஈடுபாடு அதிகம். அதன் கொண்டையின் கவர்ச்சி பெரிது. எனவே கோலம் நிறை கோழியாகவே கவிஞர் அதைக் காண்கிறார்.

முருகன், வானவர் துன்பத்தைப் போக்கி, சூரபதுமன் போன்ற அசுரரிடமிருந்து காத்தவன் ஆதலால் சேவகனுமாகிறான்.

முருகன் ஆறுமுகமும் ஆறிரண்டு திண்தோளும் உடையவன், வேதங்கள் அவனுடைய பாதுகைகள் என்பன, அவனுடைய திருமேனியைக் குறித்த ஐதிகங்கள்.

ஆறிரண்டு தோளானே
ஆறு முகத்தானே
தேறு மறை கொஞ்சம்
சிறுசதங்கைத் தாளானே.

குழந்தையைக் கொஞ்சும்போது, குழந்தைக் குமரனை ஏந்திச் சிரமோந்து குலவிய பெண்கள் நினைவு வருகிறது. சரவணப் பூம்பொய்கையில் தவழ்ந்த முருகனை கார்த்திகைப் பெண்கள் அறுவரும் எடுத்து அணைத்துக் குலவினார்கள். அவர்கள் மட்டுமா? தாயான பார்வதி தேவியும், கங்காதேவியுமே எடுத்துக் குலவினார்கள்.

ஆயிமார் அறுவர்களும்
அம்பிகையும் கங்கை மின்னும்
சேயேஎன் றேந்திச்
சிரமோந்து கொள்குருந்தோ.

[ஆயிமார் - ஆய்மார், தாய்மார். குருந்து - குருத்து.]

பாடுகின்றபோது, ஓசை நயத்தின் பொருட்டு, ஆய்மார் என்றிருக்கத் தக்க சொல், ஆயிமார் என்று வருகிறது. பாவபூர்வமான இப்பாடல் ஆட்டத்துக்கும் பாட்டுக்குமாக எவ்வளவுதான் நெளிந்து கொடுக்கிறது !

முருகனைப் புகழும்போது, இலக்கியத் தொடர்புடைய பழங்கதைகள் எண்ணற்றன நினைவில் எழுகின்றன. நக்கீரர் முருகன் பாதுகாப்பைப் பெறும் பொருட்டுப் பாடியருளிய திருமுருகாற்றுப்படையும் அருணகிரிநாதர் பாடிய

திருப்புகழ்ப் பாடல்களும் தோன்றிய வரலாறுகள் முருகனுடைய பெருங்கருணைத் திறத்தைப் புலப்படுத்துகின்றன.

**அருணகிரி நாதன்**
**அருந்தமிழ்நூற் கீரன்**
**கருணை பெற ஓதும்**
**கவிமாலைத் தோளானே.**

சைவ சமய சம்பிரதாயத்தில் இறைவன் குருவடிவாக வந்து கருணை புரிகிறான் என்பது மிகவும் சிறப்பான ஒரு கருத்து. பிரமன் பிரணவத்தின் பொருள் அறியாமல் விழித்தபோது குழந்தை முருகன் அவனைக் குட்டிச் சிறையிருத்திப் பின்னர், சிவபிரான் கேட்க, பொருளை உரைத்தான் என்று கதைகள் குறிப்பிடும். இங்ஙனம் அவன் குருவாக வந்த நிலையைக் கூறி, அபிநயப் பாடல் முடிகிறது.

**பிரமன் அறியாப்**
**பிரணவத்தின் அத்தம்**
**அரனார் மனங் குளிர**
**அன்றுரைத்த சற்குருவோ.**

முப்பது கண்ணிகள் கொண்ட போரூர் முருகன் தாலாட்டில், அபிநயத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவ்வைந்து மட்டும், ஆட்டத்துக்கும் இசைக்கும் ஏற்புடையன என்பது மட்டும் அன்று, இத்தாலாட்டுப் பாட்டின் சாரமாகவே உள்ளன. இப்பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்த கலைப் புலமை, முத்தமிழ் இலக்கிய வுணர்ச்சிக்கே சிகரமாயுள்ளது.

## 13. முல்லை நறுமலர்

இந்த இருபதாம் நூற்றாண்டில், கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் தாலாட்டுப் பாடுகின்ற ஒரு தாயை நமக்குச் சிருஷ்டித்துத் தந்திருக்கிறார். அத்தாயின் சொற்களிலே கவிதையின் எளிமையையும் கவிதைச் சுவையின் உயர்ந்த சாதனையையும் நேர்முகமாய் நாம் கண்டு அனுபவிக்கிறோம்.

தமிழ் மக்களுக்குப் பூவினிடத்தில் எல்லையற்ற ஈடுபாடு. தாய்மைப் பேற்றடையப் போகும் பெண்ணுக்குச் செய்யும் சடங்குகளில் முதல் சடங்குக்குப் பெயரே பூச்சூட்டல் என்பது. பூவிலே மக்கள் மனம் எப்போதும் ஈடுபட்டிருக்குமானால் கவிஞர் மனம் இன்னும் எவ்வளவு அதிகமாய் அதில் தோய்ந்திருக்கும் ?

குழந்தைக்கு உறக்கம் வரவேண்டிப் பாடத் தொடங்குகின்ற தாய் பாடுகிறாள் :

**முல்லை நறுமலரோ**
**முருகவிழ்க்கும் தாமரையோ**
**மல்லிகைப் பூவோ**
**மருக்கொழுந்தோ சண்பகமோ.**

தாய் சில மலர்களின் பெயர்களை மட்டுமே சொல்கிறாள். நிரல் படச் சொல்லுகிறாள். கற்பனைச் செறிவோ, கருத்துச் சிக்கலோ, சொல்லடுக்கோ காணப்படவில்லை. ஆனால், இவ்வரிகளில் தாய்மையின் பெருமிதம், உணர்ச்சியின் பெருக்கு, இயல்பான தாயன்பின் எளிமை, அழகுச் சுவையின் எல்லை இவை நம் கண்முன் வந்துவிடுகின்றன. வரிசையாக மலர்களின் பெயரைச் சொன்னமாத்திரத்தில், சொற்களில் தாயின் அன்பு நிறைந்து, நாமும் கவிதையின்

உணர்ச்சி வசப்பட்டு நிற்கிறோம். நேர்முகமாய் உணர்ச்சி வசமாகும்போது, சொற்கோவையோ விளக்கமோ தேவையில்லாமற் போகிறது. குழந்தையால் யாருக்குத்தான் இன்பம் இல்லை? முல்லையும் தாமரையும் மல்லிகையும் சண்பகமும் யாருக்குத்தான் இன்பம் தரமாட்டா?

கவிஞரே தாயாகப் பாடுகிறார். அவருடைய அனுபவம் பாட்டாகிறது. கவிஞருடைய மனம் சைவத் திருமுறைகளிலும் ஆழ்வார் அருட் பாசுரங்களிலும் நிரம்பிய ஈடுபாடு உள்ள மனம். ஆதலால், அதற்கேற்றவாறே குழந்தையும் காட்சியளிக்கிறான்.

பூமாலை வாடும் மணம்
பொன்மாலைக் கில்லையென்று
பாமாலை வைத்தீசன்
பாதம் பணிபவனே.

பாலமுதம் உண்டுதமிழ்ப்
பாமாலை பாடியிந்தத்
தாலம் புகழவரும்
சம்பந்தன் நீதானே.

கொன்றையணிந் தம்பலத்தில்
கூத்தாடும் ஐயனுக்கு
வன்றொண்ட னாக
வளர்ந்தவனும் நீதானே.

கல்லைப் பிசைந்து
கனியாக்குஞ் செந்தமிழின்
சொல்லை மணியாகத்
தொடுத்தவனும் நீதானே.

தேவாரப் பாகும்
திருவாசகத் தேனும்
நாவார உண்ணஎம்மான்
நன்மகவாய் வந்தானே.

நாலா யிரக்கவியின்
    நல்லமுதம் உண்டிடமால்
பாலாழி நீங்கியொரு
    பாலகனய் வந்தானே.

குழந்தை என்பதற்கேற்ப, கவிஞருக்கு இங்கு பாலசுப்பிர மணியனிடத்திலும், பாலகிருஷ்ணனிடத்திலும் பக்தி பெருகியிருக்கக் காண்கிறோம். அந்தப் பக்தி தாலாட்டுப் பாட்டிலும் வெளிப்படுகிறது.

புள்ளி மயிலோடு
    புனங்காத்து நிற்குமந்த
வள்ளி மணவாளன்
    மதலையாய் வந்தானே.

ஆயர் பதியில்
    அற்புதங்கள் செய்துநின்ற
மாயவனே இங்கெமக்கு
    மகவாகி வந்தானே.

பெண்கள் சிறுவீட்டைப்
    பேணு தழித்தவர்தம்
கண்கள் சிவக்க வைக்கும்
    கண்ணபிரான் நீதானே.

முடிவில் அழுகின்ற குழந்தையை அழவேண்டாம் என்று சொல்லிப் பாட்டு முடிகிறது. குழந்தைக்குச் சலுகை மாமாவிடம். ஆதலால், மாமா வருவார் என்பதே கடைசி யான கூற்று.

சப்பாணி கொட்டித்
    தளர்ந்தனையோ அல்லதுன்றன்
கைப்பாவைக் காகக்
    கலங்கி அழுதனையோ.

தித்திக்கும் தேனும்
தினைமாவும் கொண்டுன்றன்
அத்தை வருவாள்
அழவேண்டாம் கண்மணியே.

மாங்கனியும் நல்ல
வருக்கைப் பலாக்கனியும்
வாங்கியுன் அம்மான்
வருவார் அழவேண்டாம்.

கண்ணுறங்கு கண்ணுறங்கு
கண்மணியே கண்ணுறங்கு
ஆராரோ ஆராரோ
ஆராரோ ஆரிவரோ.

# அனுபந்தம்

வாய் மொழிப் பாடல்கள் பலவும் இலக்கியப் பாடல்கள் சிலவும் இது வரை நாம் பார்த்து வந்தோம். இனி, முதல் தாலாட்டுப் பாடல் பாடிய பெரியாழ்வாருக்குப் பின், புலவர்கள் பாடிய தாலாட்டுப் பாடல்கள் பற்றிய குறிப்புக்களைக் காணலாம். இயன்றவரை ஒவ்வொரு நூலுக்கும் சில மாதிரிக் கண்ணிகளும் தரப்பெற்றுள்ளன. இங்கு இவை மூன்று பிரிவாகப் பிரித்திருக்கக் காணலாம்.

**அ. பண்டை இலக்கியங்கள்.**

**ஆ. பிற்கால இலக்கியங்கள்.**

**இ. வாய்மொழி வழக்கு.**

## அ. பண்டை இலக்கியங்கள்

15ஆம் நூற்றுண்டில் எழுந்த சீகாழிச் சிற்றம்பல நாடிகள் தாலாட்டு முதல், நூற்றுண்டுதோறும் எழுந்த சில பிரபந்தங்கள் இவ்வரிசையில் அடங்கும்.

**1. சீகாழிச் சிற்றம்பல நாடிகள் தாலாட்டு :—**

[காலம் 15ஆம் நூற்றுண்டு. சைவ சித்தாந்த சமய முதல் ஆசாரியரான மெய்கண்டாருக்கு முந்திய குரு பரம் பரையில் உள்ளவர். பல சிறு சமய நூல்கள் செய்தவர். இந்நூல் 63 கண்ணிகள் கொண்டது. சம்பிரதாயப்படி வாய் மொழியான தாலாட்டுப் பாடலில் காணப்படுகின்ற கருத்துப் போக்கு முழுமையும் கூட இங்குக் காணப்படு கிறது. குழந்தையின் புகழ், அவன் பேச்சு, யார் அவனை அழச்செய்தவர் என்று கேட்டல், கண் வளரச் சொல்லு தல் - ஆகிய பகுதிகளைப் பின்வரும் வரிகளில் காணலாம்.]

காணற் கரியானே கண்மூன் றுடையானே
தாணுவோ சங்கரனே சச்சிதா னந்தனே.

சாதி மதத்தாலும் சமய மதத்தாலும்
கோதிலா வானந்தம் கூடஅரி தென்றாரோ.

எல்லா உயிரும் எனதுயிரே என்றுரைத்து
நல்லார் இனத்தில் நடித்தானைச் சொன்னாரா.

இன்னவடி வின்னநிறம் இன்னபடி என்றறியாது
உன்னும் இடத்தில் உதித்தானைச் சொன்னாரோ.

வையம் வளர மறையோர் தொழில்வளர
மெய்யும் வளரஅருள் மேகமே கண்வளரீர்.

2. **தத்துவராயர் தாலாட்டு :—**

[15ஆம் நூற்றாண்டு. 51 கண்ணிகள். தம் குருவாகிய சொருபானந்தர் துதியாகத் தத்துவராய சுவாமிகள் பாடியது.]

நஞ்சேய் பிறவிக்கு நாயேன் நடுங்காமல்
அஞ்சேலஞ் சேலன் றருளும் பெருமானே.

ஆவா இருவர் அறியாத சேவடியை
வாவாஎன் றென்தலைமேல் வைக்கும் பெருமானே.

கண்ட இருளைநீ காணாதே அவ்விருளைக்
கண்ட அறிவைநீ காணென்று சொன்னாரோ.

ஆட்டின மாயக்கூத் தென்ன அகத்துள்ளே
கூட்டெனை ஞானக்கூத் தாட்டிய வித்தகனே.

செல்லல் அறுத்த சிவப்பிர காசனே
தொல்லை மறைதேர் சொருபானந் தச்சுடரோ.

**3. கீதாசாரத் தாலாட்டு :—**

[17ஆம் நூற்றூண்டு. 108 கண்ணிகள். மாதைத் திருவேங்கட நாதர் பாடியது. கீதையின் உட்பொருளைச் சாரமாகத் திரட்டிக் கூறுவது.]

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினல்
அருச்சுனற்கு மெய்ஞ்ஞானம் அனைத்தும்உரை செய்தவரோ.

வல்லிரும்பு கனலுடனே மருவியது போல்மனமும்
ஒல்லையிலான் மாவுடனே உற்றதுகாண் என்றவரோ.

இந்திர சாலம்போல இவ்வுலகை நம்மிடத்தில்
தந்திரமாத் தோற்றுவித்தோம் சத்யமல என்றவரோ.

கூறுமுல கியற்கையுடன் கூடினுமெய்ஞ் ஞானம் வந்தோர்
சேறும்பிள்ளைப் பூச்சியும்போல் திரிவார்காண் என்றவரோ.

அருச்சுனன்தன் பொருட்டா அனைவருக்கும் ஞானம்வரப்
பொருந்தியதே சுகவடிவம் புண்ணியரே கண்வளரீர்.

**3. ஞானசம்பந்தர் தேசிகர் தாலாட்டு :—**

[40 கண்ணிகள். தருமபுர ஆதீனம் நிறுவிய திருஞான சம்பந்தர் துதி. செய்தவர் வெள்ளியம்பலவாணத் தம்பிரான். 17ஆம் நூற்றூண்டு.]

கங்கை இளம்பிறையும் கண்அனலும் மான்மழுவும்
மங்கை இடமும் மறைத்துலகில் வந்தானே.

பாலாட்டும் பொன்முடிமேல் பாம்பாட்டல் போல்சிறியேன்
தாலாட்டும் தன் செவியில் சாத்தும் தயாபரனே.

ஊனய் உயிராய் உணர்வாய் என்னுட் கலந்து
தேனய் அமுதமாய்த் தித்திக்குந் தேசிகனே.

ஊடுகினும் கூடுகினும் ஒக்கஎதிர் ஆடுகினும்
கூட விளையாடும் கோமானைச் சொன்னரார்.

நாயேன் உமதடிக்கீழ் நாடோறும் கண்வளரத்
தாயே எனையாண்ட சற்குருவே கண்வளரீர்.

**4. நம்மாழ்வார் தாலாட்டு :—**

[பழந்தமிழ்ப் புலவர்களில் நம்மாழ்வாரிடம் ஈடுபடாதோர் இல்லை. எல்லா வகையாலும் அவர்மீது புலவர்கள் பிரபந்தம் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள். பிரபந்த வகைகளுள் தாலாட்டும் ஒன்று. 17ஆம் நூற்றாண்டிலிருந்த உபயகவி அப்பா என்ற வைணவப் புலவர் நம்மாழ்வார் மீது இரு தாலாட்டுப் பிரபந்தங்கள் பாடியிருக்கிறார். முதல் பிரபந்தம், தாலாட்டுப் பாடலில் நம்மாழ்வார் திருவவதாரச் சரிதையைக் கூறுகிறது. வரலாறு முழுமையும் கண்ணிகளாலேயே தொடர்பான செய்யுளாகப் பாடுகிறார். 350 கண்ணிகள் உள்ளன. அதனுள், குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தி கண்வளரச் சொல்வதைக் கூறும் பகுதிகள் சுவையுடையன. வச்சிரத்தாற் செய்த திருத் தொட்டிலில் பூ மழை சிந்துகிறார்கள்.]

மருக்கொழுந்து பிச்சியிரு வாட்சிமுல்லை மல்லிகைப் பூ
தருக்கொழுந்து கோகனகம் சாதிவேற் செண்பகப் பூ.

பாந்தள் அரசன் பணமகுடப் பார்காக்குஞ்
சேந்தர் புகழ்விளங்குந் தெய்வத் தனிச்சுடரோ.

ஆழ்வார்கள் ஒன்பதின்மர் ஆரியர் முக்கோல் தரித்து
வாழ்வார்கள் தொண்டர் தொண்டர் வாழப் பிறந்தவனே.

தண்டமிழும் வேதாந்த சாரப் பெரும்பொருளும்
மண்டலமும் விண்டலமும் வாழப் பிறந்தானே.

பத்திக்கு வித்தாய்ப் பணித்தடங்காப் பண்ணவனை
முத்திக்கு வித்தாய் முளைத்தவனைச் சொன்னார்.

மற்ருெரு பிரபந்தம் நம்மாழ்வார் பற்றிய நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு.

சிரங்கட்டிரு வெள்ளறையுஞ் சிந்தையமு தூற்றிருக்க
பரங்கொள்நெடு மாமுகிலைப் பாடும் பராங்குசனே.

குயிலார் திருச்சித்ர கூடஞ்சேர் காழி நகர்
புயல்போல மேனியரைப் போற்றியநம் மாழ்வாரோ.

மதுரகவி நாதமுனி நல்லமணக் கால் நம்பி
எதிரிதொழும் பெரியநம்பி ஏற்றியநம் மாழ்வாரோ.

திருமாலை யாண்டான் திருவாய் மொழித் தமிழைத்
திருத்தும் புவியோர்க்குத் திருத்திய நம்மாழ்வாரோ.

திருமல்லி நாடுந் திருப்பாவை முப்பதுங்
கருதுந் தமிழ்தன்னைக் காட்டியநம் மாழ்வாரோ.

5. **சிவஞான பாலைய தேசிகர் தாலாட்டு :—**

[18ஆம் நூற்ருண்டு. 100 கண்ணிகள். பெரும்புலவ ராகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் ஞானா சிரியர் மீது பாடிய துதி.]

என்று நித்த பூரணமாம் இன்பவறி வுண்மையராய்
நின்றபடி நிற்கும் நிகழ்பிரம மென்ருனே.

கமன மழிந்து கறையற்று நிற்குஞ்
சுமனமதில் நின்றிலகுந் தூயசர மென்ருனே.

வானேத்த வென்று மருவற் கரியபதம்
நானேத்த நல்குசிவ ஞானகுரு தேசிகனே.

எந்தைசிவ சாதனங்கட் கெல்லாந் திருநீறு
முந்தியதென் றுண்மை மொழியும் பெருமானே.

பிரசாதி யோடு பிராண லிங்கியாகி
உரைசாரும் போகாங்க மொன்றென்று சொன்ஞனே.

6. **திருமாமகள் நாச்சியார் தாலாட்டு :—**

[18ஆம் நூற்றுண்டு. 25 கண்ணிகள். திருக்கோட்டியூர் திருமாமகள் என்னும் பிராட்டியார் மீது அமைந்துள்ள துதிநூல். சிறப்பான அமைப்புடையது. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், அம்புலி, வருகை, சிறுதேர் ஆகிய பருவங்கள் குறிப்பிட்டு, பருவத்துக்கு இரு கண்ணிகளைக் கொண்டது.]

*நீராட்டி மையெழுதி நெற்றியின்மேல் காப்பணிந்து*
*தாராட்டும் கோட்டிநகர்ப் பைங்கிளியே தாலேலோ.*

*தெய்யலங் காரர் திருச்செல்வம் ஆளவந்த*
*உய்யவந்த கோட்டிக் குடையவளே தாலேலோ.*

*மஞ்சுசேர் மாட மதிட்கோட்டி நாரணற்குக்*
*கொஞ்சுவாய் முத்தம் கொடுக்கவந்த கோகிலமோ.*

*எம்பிரான் கோட்டிக் கிறைவனுர் தேவிதன்மேல்*
*அன்பினுர் தம்மை ஆரடித்தார் ஆராரோ.*

*ஆணிக் கனகத் தளகையான் தான்விடுத்த*
*மாணிக்கத் தொட்டிலுள்ளே மாமகளே கண்வளராய்.*

## ஆ. பிற்கால இலக்கியங்கள்

19, 20ஆம் நூற்றுண்டுகளில் தோன்றிய தாலாட்டுப் பாடல்களை இங்குக் காணலாம். டாக்டர் சாமிநாதையர் பாடிய தாலாட்டுப் பாடலும், ராய. சொக்கலிங்கம் அவர்கள் பாடிய காந்தி தாலாட்டுப் பாடலும் இங்குக் குறிப்பிடத் தக்கவை.

7. **சம்பந்தர் தாலாட்டு 1.**

[19ஆம் நூற்றுண்டு. 30 கண்ணிகள். திருஞான சம்பந்த சுவாமிகள் வரலாறு கூறுவது.]

குவிகைசென்னி கொண்டடியார் கூத்தாட முத்தின்
சிவிகையினில் ஏறித் திசைவிளங்க வந்தாரோ.

மருகல் நகர்தன்னில் வணிகற்பணி தீண்டப்
பொருகை வில்லாளைப் போற்றியுயிர் தந்தாரோ.

ஆலங்காட் டப்பர் அயர்த்தனேயோ பாடவென்று
கோலங்காட் டப்பதிகம் கூறித் தொழுதாரோ.

அங்கமதைப் பூம்பாவை யாமயிலாப் பூரில்அருட்
சங்கரர்பே ரன்பாலித் தாரணியிற் கண்டாரோ.

வாழி திருஞான சம்பந்தர் வாக்கரசர்
வாழிநம்பி ஆரூரர் வாதவூர் மன்னவனே.

## 8. சம்பந்தர் தாலாட்டு 2.

[19ஆம் நூற்றுண்டின் இறுதி. 42 கண்ணிகள். மகா வித்துவான் காஞ்சீபுரம் சபாபதி முதலியார். திருஞான சம்பந்த சுவாமிகள் வாலாற்றைக் கூறுவது. முந்தியதினும் வேருனது.]

எம்பந்த மெல்லாம் ஈடறுக்க வந்தருளும்
சம்பந்த னென்னும்பேர் தாங்குங் குருபரனே.

மறைக்காட்டிற் சொல்லரசை மறையடைத்த திருக்கதவம்
திறக்கும்வகை பாடுமெனச் செப்புந் தவக்கொழுந்தோ.

ஆலவாய் கண்டுமங்கை யர்க்கரசி யென்னுமிசைக்
கோலமிகு பதிகம் கூறிப் பணிகுருவோ.

வாழ்கவந் தணரென்னும் வாய்மைத் திருப்பதிகம்
வீழ்கங்கை நேர்மையை மேலெதிர விடுந்தேவோ.

நன்றுதீ தென்றறியா நாயேன் வினையிருளில்
துன்றியலே யாதருளத் தோன்றுந் தினகரனே.

9. ஏகநாயகர் தாலாட்டு.

[19ஆம் நூற்றுண்டின் இறுதி. 30 கண்ணிகள். "உதிப் பித்த பன்னூல் ஒளிர அடியேன் பதிப்பிக்கவே கடைக் கண் பார்" என்று மட்டும் வேண்டிய டாக்டர் சாமி நாதையரவர்களையும் பாடும்படி செய்துவிட்டது தாலாட்டு இலக்கியத்தின் ஈடுபாடு. திருவிடை மருதூர் பற்றி ஐயரவர் கள் பாடியது.]

எல்லாத் தலத்தும் இடைமருதே மேலாமென்று
எல்லா மளித்தாட் கியம்பியருள் மாமணியோ.

தெய்வமில்லை என்னுஞ் சிதடர்கள்தீ வாய்மூடச்
செய்வரத ஞகியநம் தெய்வ சிகாமணியோ.

துங்கத் தமிழ்மொழியின் தூய்மை எவரும் மறியச்
சங்கப் புலவரிடைத் தங்கியருள் நாவலரோ.

ஆரா வமுதோ அருட்கடலோ எம்முடைய
தீராத துன்பமெலாந் தீர்க்குஞ் சிவக்கொழுந்தோ.

கருதுமடியார் கவலையெலாம் போக்கி
மருத நிழலினிடை வாழ்ந்தருளும் மாமணியோ.

10. சங்கராசாரியர் தாலாட்டு.

[19ஆம் நூற்றுண்டின் இறுதி. 21 கண்ணிகள். அச்சு தானந்த சுவாமிகள் பாடியது.]

புலனுதி கள்வழியிற் போகா தருகிருத்தி
நலமா ரருட்பார்வை நாட்டவந்த நாயகனே.

நானிவனென் றுன்னுமல் நடுவா யிலங்குறவே
தானமரும் நிலையிதெனச் சாற்றுஞ் சகத்குருவோ.

மாயை அவித்தையெலாம் மாண்டவழி காணுமல்
ஓயும் படியருளில் ஒன்றவைக்கும் உத்தமனே.

*

துவிதப் பிழையறுக்கத் துசங்கட்டி யொன்ருக்கி
விவிதச்சங் கற்பமெலாம் வேரறச்செய் வித்தகனே.

என்னையழித் தெழுந்த இன்பப் பெருக்கோபின்
தன்னையெனக் களித்த சமரசசாட் சாத்பரனே.

## 11. திருமலை முருகன் தாலாட்டு.

[20ஆம் நூற்ருண்டு. 101 கண்ணிகள். ஆசிரியர் தென்காசி வன்னியப்பன்.]

கந்தா திருமலையிற் காலமெலாம் வீற்றிருக்குஞ்
சிந்தா மணியான செல்வமேநீ கண் வளராய்.

தொட்டி லசைந்தாடத் தோகைமார் தாலாட்ட
சுட்டி யசைந்தாடச் சுந்தரமே கண்வளராய்.

ஆதி குறுமுனிக்கு அருள் கொடுக்க வந்தவனே
நீதி யுடையவனே நீலமயில் வாகனனே.

கார்த்திகைப் பெண்களுமே கனிந்துன்னைத் தாலாட்டப்
பூர்த்தியாய்க் கேட்டுகந்த பூரணனே கண்வளராய்.

மாணிக்கத் தொட்டிலிலே மாமணியே நீதுயில்வாய்
ஆணிக்கை நீட்டியேநீ ஆதரிப்போம் கண்வளராய்.

## 12. நால்வர் தாலாட்டு.

[20ஆம் நூற்ருண்டு. சைவ சமயாசாரியர் நால்வர் மீதும் தனித்தனி 12 கண்ணிகள் கொண்டது. பாடல்கள் அவரவர் வரலாற்றைக் கூறுவன.]

சம்பந்தர் :

மேலாம் சிவபாத இருதயர்நீ ராடுகையில்
நாலாரணம் துதிக்கும் நாயகிபால் உண்டவனே.

அருஞானம் ஆருயிர்கட் களிக்கஉல கினில்உதித்துத்
திருஞான சம்பந்தச் சீர்பேர்கொள் சின்மயனே.

அப்பர் :

[12 கண்ணிகள், முதலெழுத்துக்கள் க - ஔ ஆகிய வரிசையில் அமைந்துள்ளன.]

ஐய னெனத்துதிசெய் அப்பூதி சேயை முனம்
வையமிசை வரவழைத்த வான்புகழும் நற்றவனே.

ஒண்ணகைசேர் திலகவதி யுடன்தோன்றிச் சூலைகெடப்
பண்ணிற் "கூற்றாயினவா" பாடுசிவ பாக்கியனே.

சுந்தரர் :

[12 கண்ணிகளின் முதலெழுத்துக்களும் அகரமாகவே செய்யப் பெற்றுள்ளன.]

அரனளித்த அரும்பொருள்கள் அனைத்தையும் ஆற்றிட்டு நன்னீர்
பரவியதோர் தடத்தெடுத்த பாக்கிய சிகாமணியோ.

அருமறைசொல் குண்டையூ ரானருளும் அரிகுற்றுப்
பெருமைமிகு பூதகணம் பெற்றஅருட் பெருந்தகையோ.

மாணிக்கவாசகர் :

[12 கண்ணிகளின் முதலெழுத்தும் க–கௌ வரிசையில் அமைந்துள்ளன.]

கிள்ளைகள்பண் செய்மதுரைக் கீர்த்தி மிக்க பாண்டியனார்
வெள்ளை மதிச் சடையனடி மேவச்செய் வித்தகனே.

கொண்டலென உயிர்கள்களி கொள்ளஉயர் ஞானநெறி
மண்டலத்தில் தெளிந்துயச்சீர் வாசகத்தைப் பொழிந்தவனே.

காந்தி தாலாட்டு

[காரைக்குடி ராய. சொக்கலிங்கனாரைத் தமிழுலகம் நன்கு அறியும். சீர்திருத்த இயக்கங்கள், சுதந்திரப் போராட்டம், தமிழ் வளர்ச்சி இயக்கங்கள் அனைத்திலும் அவர் முன்னணியில் நின்றவர். காந்தியத்தில் தோய்ந்த பழந் தொண்டர். அவர் பாடிய இரு தாலாட்டுக்களிலும் புதுயுக மணம் கமழும்.]

பெண்பால் :

காந்தி அறமதனைக் காசினி யெலாம் பரப்பப்
போந்த இளங்குடியே பொன்னேநீ கண்வளராய்.

பெண்ணடிமை யென்றுசொலும் பேதைமட வார்தங்கள்
கண்திறக்க வந்தபெரும் கற்பகமே கண்வளராய்.

சாதியில் உயர்விழிவு சாதிக்கும் வன்கண்ணர்
பேதையார் என்றறியப் பெண்ணரசே கண்வளராய்.

முதுமை எழிலோடு முழுதுலகும் போற்றவளர்
புதுமை கலந்த உயர் பெண்ணரசி நீதானே.

பீடு பிறங்கஅரும் பெண்மைசிறந் தோங்கிமிக
நாடு செழிக்கவந்த நல்லியலாள் நீதானே.

ஆண்பால் :

இந்தியத் தாய்விலங்கை ஈர்ந்தெறியப் பிறந்தபெரு
மைந்த அருந்தவமே மாமணியே கண்வளராய்.

தீண்டாமை வேண்டுமெனச் செப்புகின்ற புன்மதியைப்
பூண்டோடு கீண்டெறியப் பிறந்தவனே கண்வளராய்.

நாட்டின் விடுதலைக்கு நல்லுயிரே னுஞ்சிறிதும்
வாட்டம் தவிர்த்திய மாமகனே கண்வளராய்.

சாந்தம் பொறைகருணை தன்மைசேர் புனிதமிவை
வந்து புகழுடைய எழிற்காந்தி நீதானே.

**திருக்குறளும் தாலாட்டும்**

திருக்குறளில் ஈடுபடாதோர் தமிழ் நாட்டில் கற்றோர் யாருமில்லை. புலவர் அனைவரும் எந்தக் காலத்திலும் அதனிடத்து மிக்க ஈடுபாடுடையராய் அதன் பாடல்களையும் கருத்துக்களையும் தங்கள் எழுத்துக்களில் அமைத்துள்ளார் கள். இளங்கோவடிகள் தொடங்கி இன்றுவரை இது அனைவரும் ஒப்பும் உண்மை.

கச்சியப்ப முனிவர் என்னும் பெரும்புலவர் 18ஆம் நூற்ருண்டினிறுதியில் திருக்குறளின் ஒரு பகுதியை விளக்கிக் கூறும் படலமாகத் தம் புராண மொன்றில் ஒரு படலம் அமைத்திருக்கிருர். குறள் உதாரணக் கதைகளாக அமைந்துள்ள வெண்பா நூல்களும் விருத்தப்பா நூல்களும் எண்ணில் அடங்கா. அங்ஙனமே இந்நூற்ருண்டில் தாலாட்டுப் பாட முற்பட்ட புலவர் இருவர் திருக்குறள் அதிகாரங்களை அப்படியே தாலாட்டாகப் பாடியிருப்பது அறியத்தக்கது.

முதலாவது, மு. பொ. ஈசுர மூர்த்தியாபிள்ளை பாடிய நீதிநெறித் தாலாட்டு. காலம் 1909. இது பல முறை அச்சாகியுள்ளது. குறளின் 133 அதிகாரங்களுக்கும், அதிகாரத்துக்கு ஒரு கண்ணியாக இவர் 133 கண்ணிகள் பாடியிருக்கிருர். சில உதாரணப் பாடல்களைக் கீழே காணலாம்.

கண்ணேஎன் கண்மணியே கண்மணியின் உள்ஒளியே
எண்ணே எழுத்தே எழுத்துணரும் மாமணியே.

அகரம் எழுத்தின்முதல் ஆகிநிற்கும் தன்மையைப்போல்
சகம்எலாம் தோற்றுவிக்கும் சாமியை நீகைதொழுவாய்.

நிலையில்லா வாழ்வை நிலையுடைய தாகவெண்ணி
அலைவு தருந் தீங்கியற்றல் ஆகாது கண்மணியே.

கற்றறிந்திலாய் எனினும் கேட்டறிவாய்; அவ்வறிவும்
உற்றதுணையாய் உதவும் ; உண்மையிது கண்மணியே.

கேட்டார் வசப்படவும் கேளார் விரும்பிடவும்
பாட்டார் மதிக்கும்உயர் பால்மொழிநீ செப்புகண்ணே.

நடத்தையால் நாணுதலே நாணுடைமை ; ஊன், உடையார்
இடத்துமுண்டு ; பாவை இடைக்கும் உடைஉண்டு, கண்ணே.

தூங்கும் போதெல்லாம் என் தோள்மேலிருந்து, விழித்
தாங்குநெஞ்சி னுள்ஒளிப்பர் அன்புடையார், ஆரமுதே.

யாழ்ப்பாணம் வ. நா. கணேச பண்டிதர் என்பவர் பாடிய மற்ருெரு தாலாட்டு, திருக்குறள் அதிகார சார மாகிய நன்னெறித் தாலாட்டு எனப் பெயர் பெறும். (அச்சானது 1919.) பல அதிகாரங்களுக்கு ஒவ்வொரு பாடல் வீதமும், சிலவற்றுக்கு இரண்டு அல்லது மூன்றும் இவர் பாடியிருக்கிருர். மொத்தம் கண்ணிகள் 210. உதாரணப் பாடல்களைக் கீழே காணலாம்.

எல்லாரிடத்தும் அன்பாய் ஏய்தலே இல்லறமாம்
பொல்லாரை நீக்கிப் புகழ்பெறுவாய் கண்மணியே.

பொறுத்தலே நன்ரும் புகழ்வருமேற் பொல்லாரை
ஒறுத்தலும் நன்ரும்அதனை உய்த்துணர்ந்து செய்கிளியே.

கொல்லான் புலாலை யுண்ணுக் கோதில்தவத் தானைஉயிர்
எல்லாம் தொழுதுநின்று ஏத்துமே கண்மணியே.

செல்வம் அறிவுகல்வி சீராற்றல் ஆண்மைகளால்
வல்லபெரி யார்துணையை வாயறிந்து சொல் கிளியே.

துன்பத்துக் காரே துணையாவார் நம்முடைய
அன்புக் குரியநெஞ்சம் ஆகாக்கால் கண்மணியே.

## இ. வாய்மொழி வழக்கு

சென்ற நூற்ருண்டின் இறுதியில் புலவர் பலர், பெண்கள் உண்மையிலேயே குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டுவதற்கென்று பலவகைப் பாடல்கள் செய்துள்ளார்கள். லாலி, கும்மி, ஊஞ்சல் முதலியனவாக இவை அனேக வகை. அவற்றுள் தாலாட்டும் ஒன்று. தெரிந்த வரையில் இவ்வகையான சில முக்கியமான தாலாட்டுப் பாடல்களின் மாதிரியைப் பின்னே காணலாம்.

**கந்தர் தாலாட்டு**

[19ஆம் நூற்ருண்டு. 32 கண்ணிகள். இனிமையான சொல்லமைப்பு. ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை.]

குமரா உனைத் தொழுவேன் குன்றெறிந்த வேல்முருகா
அமரா பதிகாக்கும் ஆறிரண்டு தோளானே.
கட்டு வடமசையக் காலசைய வேலசைய
முத்து வடமசைய முன்வந்து நின்றானே.
குயில்கூவ மயிலாடக் கோவில்திருச் சங்கூத
அழகான மயிலேறி உலகாள வந்தானே.
வர்ண மயிலேறி வள்ளியம்மை தன்னுடனே
அருணகிரிக் கோபுரத்தை அஞ்சலாய் நின்றானே.
நினைத்த இடந்தோறும் நீலமயி லேறிவந்து
மனத்துக் கவலையெலாம் மாற்றும் பெருமாளோ.

**ஸ்ரீராமர் தாலாட்டு**

[31 கண்ணிகள். ராமசரிதத்தை வரலாறாகத் தாலாட்டில் உரைப்பது. 19ஆம் நூற்றாண்டு. இதில் பல பாடங்கள் இருப்பதால், வழக்கில் அதிகம் இருந்ததென்று யூகிக்கலாம்.]

தெள்ளுதமிழ் கொண்டாடச் சீரான தசரதற்குப்
பிள்ளைவிடாய் தீர்த்த பெருமானைச் சொன்னாரோ.
வீராதி வீரனே வேந்தர்சூ டாமணியோ
சீராமன் என்னும் திருநாமம் பெற்றானே.
அலைகடல்சூழ் வையகத்தே ஆரும் அசைக்கவொண்ணாச்
சிலையை வளைத்தொடித்துச் சீதை மணம் செய்தானே.
பத்து மணிமுடியும் பத்திரண்டு திண்தோளும்
தத்திவிழ எய்த தடம்பெரிய சேவகனே.
சீராம ராமனே சீதை சிறை மீட்டவனே
பேரால் பெரியவனே பேருலகை ஆண்டவனே.

**சிதம்பரர் தாலாட்டு**

[19ஆம் நூற்றாண்டு. 30 கண்ணிகள்.]

தானந் தழைக்கத் தரணியுள்ளோர் ஈடேற
ஆனந்தத் தாண்டவமாய் ஆடும் சிதம்பரனே.

வெண்ணிலவே வெண்மதியே வெண்குடையைத் தில்லைநகர்க்
கண்ணனுடன் கூடிவிளை யாடவா அம்புலியே.

உம்பர் பெருமானே உமையாள் தன் நாயகனே
செம்பொன் மணிமன்றில் சிதம்பரரே கண்வளரீர்.

பாலனென்று மார்க்கண்டன் பத்தி தனையறிந்து
காலன் தனையுதைத்துக் கால்கள் சிவந்தானே.

தேவி சிவகாமியுடன் சிதம்பரரே கண்வளரீர்
கோவில் பரிசனமும் கூடவே கண்வளரீர்.

[இது முயன்று செய்த தாலாட்டாயிருப்பினும், சில நயங்கள் பொருந்தியிருக்கக் காணலாம்.]

**குமரவேள் தாலாட்டு**

[19ஆம் நூற்றாண்டு. 51 கண்ணிகள். எவ்வுளூர் ராமசாமிச் செட்டியார்.]

காலின்மணிக் கிண்கிணிகள் கல்லெனநன் கோலமிட
வேலும் அரன்தன்எண்டோள் ஏறிவிளை யாடுமன்றோ.

நாலா ரணம்பரவு நாரா யணனளித்த
வேலா யுதமேந்தும் வீரப்ர தாபமன்னே.

வீரமிகு தாருகனார் வெற்பாகக் கண்டுவைவேல்
சோரமற விட்டுத் தொளைத்துவெற்றி கொண்டவனே.

அன்பிற் புகழ்சொல் அருணகிரி நாதர்தமக்கு
இன்பமைநற் பேறளிக்கும் ஏர்ப்பரங்கி ரிக்கரசே.

வன்பிணிதா ரித்திரம்பேய் மாமலடு கூன்செவிடு
துன்பூமை நீங்கியுய்யத் தூய்வரந்தந் தாள்பரனே.

**சிறுத்தொண்டர் வில் பாட்டு**

[19ஆம் நூற்றாண்டு.]

ஆராரோ ஆராரோ ஆணரசே ஆராரோ
சீராரும் எங்கள்குல தீபமேநீ ஆராரோ.

சீர்மேவு மாமணியே தேடக்கிடையா அன்னமே
பார்மேவும் கண்மணியே பாலகனே கண்ணுறங்காய்.
வர்ணமணித் தொட்டிலிலே வாய்த்த மெத்தை மீதிலேநீ
கட்டிக் கரும்பே என்கணுவில்லாச் செங்கரும்பே
ஆலைக்கரும்பே என்றன் ஆரமுதே கண்ணுறங்காய்,
அன்னக்கொடி பறக்கும் அன்பனது மேடையிலே
மன்னுதர்மம் செய்துவரும் மன்னவரின் புத்திரனே
மார்பிற் பதக்கமின்ன மகர கண்டி யார்ந்து மின்ன
ஐங்கலப்பூ மெத்தையிலே ஐயனேநீ கண்ணுறங்காய்.
பிள்ளையில்லை என்று சொல்லித் தில்லைவனம் போய் முழுகி
மைந்தரில்லை என்று சொல்லி வானவரைத் தானோக்கி
வருந்தித் தவமிருந்து பெற்றெடுத்த கண்மணியே.
பிள்ளைக்கலி தீர்க்கவந்த சீராளா கண்ணுறங்காய்.

**ஆண்பிள்ளைத் தாலாட்டு**

[19ஆம் நூற்றாண்டு. 52 கண்ணிகள். எவ்வுளூர் ராமசாமிச் செட்டியார்.]

கின்னரி வாசிக்கக் கிளிகளுடன் பூவை கொஞ்ச
வன்ன மணித் தொட்டிலிலே வாழ்வேநீ கண்வளராய்.
பிள்ளைக் கலிதீர்க்கப் பெருக்கமுடன் வந்துதிக்க
வள்ளலே திவ்ய மரகதமே கண்வளராய்.
அக்காள் அடித்தாளோ அம்மான்மார் வைதாரோ
மிக்காகத் தேம்புவதேன் வித்தகனே கண்வளராய்.
வாச மலரெடுத்து வாசிகையாகத் தொடுத்து
நேசமுடன் மாமிதந்தாள் நித்திலமே கண்வளராய்.
ஓசைக் குயில் கூவ உவந்து மயில் கூத்தாட
நேசக் கிளிகள் கொஞ்ச நிலைவிளக்கே கண்வளராய்.

**பெண்பிள்ளைத் தாலாட்டு**

[19ஆம் நூற்றாண்டு. 30 கண்ணிகள். ஆசிரியர் எவ்வுளூர் ராமசாமிச் செட்டியார்.]

மண் பிசைந்தே உண்டநெடு மால்மயங்க வந்தமின்னே
கண் பிசைந்தே உள்ளம் கலங்குவதேன் கண்வளராய்.

அத்தான்வந் தேசினரோ ஆகடியம் பேசினரோ
எத்தால் மனவருத்தம் எந்திழையே கண்வளராய்.

ஓடாத மானே உவட்டாத செந்தேனே
நீடாழி சூழ் புவியோர் நித்தியமே கண்வளராய்.

பொற்றா மரைமேவும் பொன்அனமே மின்இனமே
நற்றாமம் சூடும் நவமணியே கண்வளராய்.

செம்பவள வாயார் தினமும் புகழ்ந்துரைக்கும்
விம்பவள மேவும் விதுமுகத்தாய் கண்வளராய்.

## நூதன பிள்ளைத் தாலாட்டு

[20ஆம் நூற்றாண்டுத் தொடக்கம். 39 கண்ணிகள். சிறுமணவூர் முனிசாமி முதலியார். இவர் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பாமர மக்களுக்குவப்பான சிறு பாடல்கள் பல புனைந்தவர்.]

கொட்டிவைத்த முத்தே குவித்தநவ ரத்தினமே
கட்டிப் பசும்பொன்னே கண்மணியே கண்வளராய்.

நித்திரைசெய் நித்திரைசெய் நெடியபுவி மன்னவனே
சித்திரப்பூந் தொட்டிலிலே சிகாமணியே நித்திரைசெய்.

அத்தை அடித்தாளோ அமுதூட்டும் கையாலே
சற்றே மனம் பொறுத்துச் சந்திரனே கணவளராய்.

கோட்டை அதிகாரி கொடிக்காரர் உங்களம்மான்
கேட்டதெல்லாந் தருவார் கிஞ்சுகமே கண்வளராய்.

பொன்னால் எழுத்தாணி பொற்பமைந்த ஏட்டோலை
சின்ன அண்ணா கொண்டுவந்தார் சிறுபொழுது கண்வளராய்.